Approved by the Text-Book Committee.

மூதுரையும்

கதைக்குறிப்பும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3-NOV 1926
MADRAS

வாழ்குடை - வேங்கடராம சாஸ்திரிகள்

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

[விலை அணா 8.

AAV, M:ȷ
N26

உழ துரையும்

கதைக்குறிப்பும்

வாழ்குடை - வேங்கடராம சாஸ்திரிகள்

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

காபிரைட்]

[விலை அணா 8.

PRINTED AT
THE TATA PRESS, 5, THAMBU CHETTY
MADRAS.

77021

பொருளடக்கம்

	பக்கம்.
அநசூயையின் கற்பு	63
அளகையரசன் மகள் மரணமடைந்தது	53
இரணியன் மரணம்	23
இராமன் மனைவியை இழந்தது	30
இராவணனும் அரக்கரும்	38
இலக்ஷ்மணரும் தாரையும்	74
ஒட்டக்கூத்தன் பாட்டுச் சொன்னது	27
ஔரங்கஜீப்பும் சகோதரர்களும் ...	57
ஔவையின் பெருமை	93
கங்காபட்டரும் விராடனும்	79
கண்ணனும் ஜராசந்தனும்	20
கர்ணனும் துரியோதனனும்	37
கலைக்கோட்டு முனிவரும் மழையும்	40
கற்பகமும் அந்தணனும்	68
கார்த்தவீரியன் அழிவு	43
குமணவள்ளல் கொடை	14
சிங்கருப்தன் உதவி	61
சிசுபாலன் அழிவு	72
ஜயதேவர் கருணை	5
தசரதர் மரணம்	66

	பக்கம்.
தருமபுத்திரர் உதவி	56
பரசுராமரும் பீஷ்மரும்	48
பாரிமகளிரும் விச்சிக்கோனும்	11
பீஷ்மரும் துரோணரும்	84
புத்திவர்மாவும் முனிவரும்	1
பூதனை மறைந்து வந்தது	90
மித்திரசர்மா மந்திரியானது	99
மூதுரை மூலமும் அரும்பத வுரையும்	105-112
மைத்திரேயரும் துரியோதனனும் ...	96
யயாதி சுவர்க்கம் சென்றது	35
வண்ணார மந்திரி	33
வான்கோழியின் மரணம்	55
விதுரன் வில்லை யொடித்தது	18

முகவுரை

இந்தப் புத்தகத்துக்கு வாக்குண்டா மென்றும் ஒரு பெய ருண்டு. வாக்குண்டாமென்பது புத்தகத்தின் முதலிலுள்ள தொடர்மொழி. முதுமை + உரை மூதுரை. மூதுரை யென்பதற்குப் பழைய வார்த்தைக ளென்பது பொருள். இதனை ஔவை யென்ற பண்டிதை இயற்றினள். சிலர், ஔவை யென்னும் பெயரோடு இருவர் இருந்திருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றனர். இன்னுஞ் சிலர், அதிகமான் கொடுத்த அமிருத மயமான நெல்லிக்கனியை உண்டதனல், ஒளவையே நெடுங்காலம் வரையில் ஜீவித்திருக்கலா மென்றும எண்ணுகின்றனர்.

இப்புலவர் பெருமாட்டியின் தந்தை பகவன் என்ற வந்தணன். தாய் ஆதி யென்பவள். இவள் கபிலர் திருவள்ளுவர் முதலான நல்லிசைப் புலவர்களின் சகோதரி. சைவ சமயத்தினள். தமிழ் நாட்டு மூவேந்தரையும் சிற்சில பிரபுக்களையும் அப்பொழு தப்பொழுது பாடிப் பரிசில் பெற்றிருக்கிறள். இவள் சரித்திரத்தினல் ஏழைகளிடத்தில் இரக்கம் கொண்டவ ளென்று தெரியவருகின்ற து. இவள் இயற்றின வேறு நூல்கள் வேழமுகம், விநாயக ரகவல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, அசதிக் கோவை முதலிய ன.

பிரதம பாடசாலை ப் பை ா ணவர்களின் உபயோகத்தை நினைந்து, உலகநீதி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன்,

வெற்றிவேற்கை, நல்வழி, மூதுரை யென்ற ஆறு புத்தகங்களுக்கும் உரையும் கதைகுறிப்பும் எளிய நடையில் எழுதி வெளிப்படுத்தி யிருக்கிறேன். அவற்றில் இது மூதுரையும் கதைக்குறிப்புமென்பது. பிள்ளைகளுக்கு நீதி மத சம்பந்தமான சரித்[illegible] களைக் கற்பிக்க இதுபோன்ற சிறு நூல்கள் இன்றியமை[illegible] சில வாசிரியர், நல்வழி மூதுரைகளுக்கு அரும்பத வுரையே அறிவை விளக்கும் வழியென்று அறிவித்தபடியினால் அவ்விரண்டிற்கும் அரும்பதவுரை எழுதி யிருக்கின்றது. கதைகளை யநுசரித்துச் செய்யுட்களைப் பிறழ்வித்தும், சிதைவித்தும், எழுத நேர்ந்தபடியினால், சிறுவர் முறைப்படி மனப்பாடஞ் செய்வதற்கு இறுதியில் மூலமும் அரும்பத வுரையும் அமைத்திருக்கின்றன.

☞ இங்ஙனம், ஆசிரியன்.

மூதுரையும் கதைக்குறிப்பும்

கடவுள் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

நூல்

1. புத்திவர்மாவும் முனிவரும்

புண்ணிய பூமியாகிய போகவதி யென்ற பட்டணத்தில் புத்திவர்மா வென்று அந்தண ளொருவன் இருந்தான். அவன் குல வொழுக்கத்தை மறந்து, பல சுவை பொருந்திய பலகாரங் களைச் செய்து, பலர்க்கும் விற்றுப், பணம் சம்பாதித்து வந் தான். ஜனப் பழக்கம் நிரம்பிய, கடைவீதியில் அவனுக் கொரு சிறிய கடை உண்டு. புத்திவர்மா தினந்தோறும் கடை யை அலங்கரித்துப், பலகாரங்களை வரிசை வரிசையாய்ப் பரப்பி, வியாபாரம் செய்வான். கடை வருமானம் அவன் குடும்பத்துக்குக் கண்டு, சிறிது மிஞ்சியும் வந்தது.

புத்திவர்மா ஒருநாள் கடையில் உட்கார்ந்திருக்கையில் மிகவும் பெரியவரான முனிவ ரொருவர் தள்ளாடித் தள்ளாடிக் கொண்டு, கடையருகில் வந்து விழுந்தார். புத்திவர்மா பரபரப் போடு சென்று, உபசரணை செய்து, உடம்பைப் பரிக்ஷித்து, மருந்து முதலியன கொடுத்துக் குணப்படுத்தினன். அம்முனி

வர் மூன்று நாட்கள் வரையில் புத்திவர்மாவின் வீட்டிலிருந்து விடை பெற்றுக்கொண்டு போனார். முனிவர் அநுக்கிரக பலத்தினால் அன்று முதல் புத்திவர்மாவுக்குப் பொருள் வருமானம் அதிகரிக்க லாயிற்று. அப்புறம், நான்கு வருஷங்கள் கழிந்தன.

ஒரு நாள் புத்திவர்மா கடையில் உட்கார்ந்திருக்கும்பொழுது அந்தத் தபோதனர் திரும்பவும் வந்துசேர்ந்தார். புத்திவர்மா அவரை அறிந்துகொள்ளவில்லை. 'முன்னொரு சமயத்தில் உன் வீட்டில் மூன்று நாளிருந்து உன்னுதவியை அடைந்திருக்கிறேன்' என்று தபோதனர் தெரிவித்துக்கொண்டார். பின்னர்ச் சற்று நேரம் வரையில் இருவரும் சம்பாஷித்தார்கள்.

அப்புறம் முனிவர், அந்தணனை நோக்கி, "அறிவுள்ளவனே! அந்தணப் பிறவி அடைதற் கரியது; நீ நல்வினை முதிர்ச்சியினால் அந்தப் பிறப்பை அடைந்திருக்கின்றனை; இனி நீ அடையவேண்டியது ஆத்ம லாபம் ஒன்றே யொன்றுதான்; ஆத்ம லாப மென்பது தன்னையும் கடவுளையும் உள்ளபடி தெரிந்து கொள்வ தாகும்; உன் வியாபாரம் வேதியர் விரும்பத்தக்கதன்று; ஆகாரங்களை விற்றுப் பொருள் பெருக்குவது பாபத்தை வளர்க்கும்; கடவுள் தரிசனத்துக்குக் குடும்பம் கனமான விலங்கு போன்றது; நீ இதுவரையில், பலவிதமாக முயன்று குடும்பத்தைக் காப்பாற்றி யிருக்கின்றனை; ஆனால், அந்தக் குடும்பம் எப்பொழுதாவது உன்னைக் காப்பாற்றுமா வென்று நினைவு கூர்ந்து பார்; வால்மீகி முதலான முனிவர்களும் குடும்பத்தைத் துறந்த பிற்பாடுதான் தவத்தில் பிரசித்தி பெற்றார்கள்; நீ என் பின் வனத்துக்கு வந்து சேர்; நான் உனக்கு ஆத்ம ஞானத்தை அறியப் பண்ணுகிறேன்; அதனால், பிறப்பின் பயனைப் பெற்றுப், பேரின்பம் அடையலாம்" என்று சொன்னார்.

புத்திவர்மாவுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. அவன் இடி விழுந்தவன்போல ஏங்கிப் போய்விட்டான். முடிவில், முனிவர் கோபத்துக்குப் பயந்து, "ஐயா! தங்கள் உபதேசம் உத்தமமானது; லௌகிக சம்பந்தமான வியவகாரங்களை நான் இரண்டொரு வருஷங்களில் முடிவு செய்து கொள்கிறேன்; அப்புறம், தவசியாகித் தங்களைத் தொடர்கிறேன்; அதுவரையில் மன்னித்துக்கொள்ளுங்கள்" என்று வணங்கினான். முனிவர், 'அங்ஙனமே வருகிறேன்' என்று விடைபெற்றுக் கொண்டு போனார். அப்புறம் ஆறு வருஷங்கள் சென்றன.

பின்னர்த் தபோதனர் ஒரு நாள் புத்திவர்மாவைக் காண வந்தார். புத்திவர்மா இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னரே இறந்துபோய் விட்டான். அவன் கடை மற்றொருவன் கடையாக மாறிக் கிடந்தது. புத்திவர்மா குடும்பத்தின்மீது கொண்டிருந்த அபிமானத்தினால் அவ்வீட்டில் எருமைக்கிடாயாய்ப் பிறந்திருந்தான். முனிவர் தமது ஒப்புயர்வற்ற ஞானத்தினால் உள்ளங்கை நெல்லிக்கனி யென்னப் புத்திவர்மாவின் தன்மையைத் தெரிந்துகொண்டனர். பின்னர், அன்றிரவு நடுயாமத்தில் அவர் எருமைக்கிடாயை அணுகிக், கமண்டல நீரைத் தெளித்து, அக்கிடாய்க்கு முற்பிறப்பின் உணர்ச்சியை உண்டு பண்ணினார். கிடாய்க்குப் பழைய பிறப்பு நினைவுக்கு வந்தது. தபசி "மூடா! அப்பொழுதே என் பின் வந்திருந்தால், இந்தக் கிடா யுருவத்தைக் கொண்டிரா யன்றோ! நான் ஒருசமயத்தில் உன்னுதவியை அடைந்திருக்கிறேன்; அதற்குப் பதில் செய்து தீரவேண்டும்; போனது போக, இப்பொழுதாவது என் வார்த்தையைக் கேள்; உனக்கு நல்லறிவை விளக்கப் பண்ணுகிறேன்" என்றார்.

எருமைக்கிடாய் "ஐயா! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்; இப்பொழுது உழவு காலம் ஆரம்பமாகின்றது; நான் வந்துவிட்டால், நிலங்கள் பயிராகாமல் நின்றுபோகும்; பிள்ளைகள் முழுச் சோம்பேறிகள்; வருந்தி வேலை செய்யார்கள்; தாங்கள் இரண்டு மாதம் கழித்து வாருங்கள்; தங்கள் கட்டளையை அநுசரிக்கிறேன்" என்றான். தபோதனர் மிகவும் வருந்தி, அந்தோ! இன்னமும் இவனுக்கு மக்கள் அன்பு மாற வில்லையே; என்ன செய்யலாம்" என்று சிந்தித்துக் கொண்டு, திரும்பிப் போய்விட்டார். பெரியவர் எவரிடத்திலாவது தினையளவு உதவியைப் பெற்றுக்கொண்டு விட்டால், பிரதியுபகாரம் செய்யுந்தனையும் அவர்கள் மனம் ஆறுதலடையாது. இரவும் பகலும் செய்தவன் க்ஷேமத்தை நினைந்து, இறைவனைப் பிரார்த்திப்பார்கள். இஃது அவர்கள் இலக்கணம்.

அதற்கப்பாலும் ஐந்து வருஷங்கள் தொலைந்தன. முனிவர் 'நம்முடைய காலம் நெருங்கி வருகின்றது; புத்திவர்மாவை நினைந்து, இனியும் அல்லற்படுவது ஆகாத காரியம்; இப்பொழுதே சென்று, ஏதாவது ஒருதவியைச் செய்துவிட வேண்டும்.'' என்று தீர்மானித்துக்கொண்டு வந்தார். முன்னிருந்த விடத்தில் எருமைக்கிடாயைக் காண வில்லை. ஞானக் கண்கொண்டு நோக்கும்பொழுது, 'புத்திவர்மா கிடாயுருவைத் தொலைத்து, நாய்ப்பிறப்பைப் பெற்று, வீட்டைச் காவல் செய்கிறா'னென்று தெரிந்தது.

அன்றிரவு நடு யாமத்தில் கமண்டல தீர்த்தத்தினால் அந் நாய்க்கு அந்தணப் பிறப்பின் அறிவை வரப்பண்ணி, "அறிவற்றவனே! நாய்ப்பிறப்பின் இழிவை நன்றாய்க் கவனித்தாயா? இதனிலும் இழிந்த பிறப்பு என்ன விருக்கின்றது? எனக்கு மரணகாலம் நெருங்கி வருகின்றது; இனி உன் சாக்குச் சொற்

களைக் கேட்க முடியாது ; ஒப்பிவந்தால், அநுக்கிரகம் அடைகிறாய் ; தப்பிப் போனால், சாபம் பெறுகிறாய் ; விருப்பம் என்ன? சீக்கிரம் சிந்தனை செய்து சொல்'' என்று கோபமாய்க் கேட்டார். அந்நாய் விதி யில்லாமல், "ஐயா! நான் தங்கள் அநுக்கிரகத்துக்குப் பாத்திரனாகிறேன்'' என்று சொல்லி, அடியில் விழுந்தது. பெரியவர் அந்த நாயை வனத்துக்கு அழைத்துக் கொண்டு வந்து, தமது தவத்தில் ஒரு பாகத்தைத் தத்தம் செய்து, அதன் பிறப்புக்குத் தகுதியான கங்கையிற் படிதல், ஆச்சிரமங்களைக் காவல் செய்தல், முதலிய நியமங்களைக் கற்பித்து, அவ்வழியில் நடந்துவரும்படி அநுக்கிரகம் செய்து போனார். அந்நாய் முனிவர் காட்டிய வழியில் நடந்து, சில வருஷங்களில் அந்தப் பிறப்பைத் தொலைத்துக், காஸ்மீர தேசத்தில் அந்தணனாய்ப் பிறந்தது. ஆதலால், பெரியவர்க்குச் செய்த வுதவி நிமிஷத்துக்கு நிமிஷம் வளர்ந்து, செய்தவனுக்குப் பலவிதத்திலும் பயன் படும். —**கங்கை மான்மியம்.**

1 *நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி*
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

2 *நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்*
கன்மே லெழுத்துப்போற் காணுமே..........

---

2. ஜயதேவர் கருணை

முன்னர் ஜகந்நாதத்துக் கருகில் பில்வா என்ற சிற்றூரில் ஜயதேவர் என்று ஒரு அந்தணர் இருந்தார். அவர் இளம்பருவத்திலேயே எல்லாக் கலைகளையும் கற்று, ஒழுக்கத்திற் சிறந்து விளங்கினார். அவர் மனைவிக்குப் பத்மாவதி யென்று பெயர்.

ஜயதேவர் கண்ணபிரான்மீது கீதகோவிந்தம் என்ற பிரபந்தத்தைப் பாடி, ஜகந்நாதத்தில் கடவுள் சந்நிதியில் அதனை அரங்கேற்றினர். கண்ணபிரான் இரண்டொரு சமயங்களில் அவர் பிரபந்தத்தின் பெருமையைப் பலர்க்கும் அறியப்பண்ணின காரணத்தினல் அந்தப் பக்கங்களில் ஜயதேவர் கீர்த்தி அதிகமாய்ப் பரந்தது.

ஜகந்நாதத்தின் அருகிலிருந்த வணிகர் தலைவ னெருவன் ஜயதேவர் மகிமையை உணர்ந்து, அவர்க்குப் பணிவிடை புரிந்து, 'தன் வீட்டிற்கு வந்து, சிலநாள் தங்கிச் செல்ல வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டான். ஜயதேவர் வணிகன் விருப்பத்தின் வண்ணம் அவன் வீட்டிற் சிலநா ளிருந்து, ஜகந்நாதத்துக்குத் திரும்பினர். அவ்வணிகன் ஒரு பல்லக்கில் பொன்னையும் பூஷணங்களையும் மறைத்து, ஜயதேவரை அதில் உட்காருவித்து, 'அநுக்கிரகம் செய்ய வேண்டும்' என்று, விடை பெற்றுத் திரும்பினன்.

நடுவழியில் கள்ளர்கள் வந்து, பல்லக்கை நிறுத்திப் பயப்படுத்தினர்கள். ஜயதேவர் நிலத்தில் இறங்கிக், கள்ளர்களைக் கண்டு, "சகோதரர்களே! வீணுக்குப் பிறரை வருத்தப்படுத்துவானேன்? பல்லக்கில் பொருள் இருக்கின்றது; சந்தோஷமாகக் கொண்டு செல்லுங்கள்" என்று கூறினர். கள்ளர்கள் பல்லக்கில் இருந்த பொருள்களைப் பறித்துக்கொண்டு போனர்கள். சற்றுத் தொலைவு சென்ற பிற்பாடு, 'ஜயதேவர் வணிகனுக்குத் தெரிவித்துத், துன்பஞ்செய்யின் என்ன செய்வதென்று கள்ளர்களுக்கு ஐய முண்டாயிற்று. அதனல், சிலர் திரும்பி வந்து, ஜயதேவரைத் தூக்கிச் சென்று, அவர் கையையும் காலையும் கருணை யில்லாமல் கொடுமையாக வெட்டியெறிந்து, ஒரு புதரிற் கிடத்திப் போய்விட்டார்கள்.

ஜயதேவர் அஃது ஊழ்வினைப் பயனென்று உடம்பின் துன்பத்தை உள்ளத்திற் கொள்ளாமல் கடவுள் தியானத்தில் கருத்தைச் செலுத்தியிருந்தார். அப்பொழுது அவர் உடம்பி லிருந்து திவ்வியமான ஒளி யொன்று சிறந்து விளங்கிற்று. அன்று பகல் வேட்டைக்கு வந்து, காட்டில் தங்கியிருந்த கிர வுஞ்சன் என்ற மன்னவன் இரவில் ஜோதி மயமாய்ப் பிரகாசிக் கின்ற ஜயதேவரைக் கண்டு, பதைத்துத் துடித்து, அவரைத் தேரி லேற்றிக்கொண்டு அரண்மனையை அடைந்து, காயங்க ளுக்கு மருந்து தடவிக், குணப்படுத்தினன். அம்மன்னவன் அன்றுடம் ஜயதேவருடன் பழகுவதனுலும், அவர் உபதேச மொழிகளைக் கேட்பதனுலும், உண்மை யறிவு உதயமாகித், தினமும் பாகவதாராதனம் செய்யத் தலைப்பட்டான். ஜயதே வர், அரசன் தானம் செய்யும் இடத்துக்குச் சென்று, வீற்றி ருப்பது வழக்கம். பல தேசங்களிலிருந்தும் பாகவதர்கள் வந்து, பஜனை செய்து தினமும் பொருள் பெற்றுப் போவார்கள்.

முன்னர்க் காட்டில் ஜயதேவர் கை கால்களை வெட்டி யெறிந்துபோன துஷ்டர்களுக்குக் களவுப் பொருள் செலவ ழிந்து போயிற்று. கிரவுஞ்ச மன்னவன் கள்ளர்களைக் கண்டு பிடித்துக், கடுந்தண்டனை செய்வதனுல் வேறொரு தொழிலை அவர்கள் விரும்பத் தொடங்கினுர்கள். கல்விச்சுவை அறியாத கசடர்க ளாதலால், அவர்களுக்கு எந்தத் தொழிலும் ஏற்பு டைத் தாகவில்லை. முடிவில், 'பாகவதர்களாய்ச் சென்றால், பயமில்லாமல் பொருள் பறித்து வாழலாம்' என்று தீர்மா னித்து, ஒருநாள் பாகவத வேஷம் பூண்டு, பஜனை செய்து கொண்டு, அரசனிடம் வந்தார்கள். அவர்கள் அரண்மனையில் கை கால் வெட்டுண்டு சிங்காதனத்தில் இருக்கின்ற ஜயதேவ ரைக் கண்டதும் நெஞ்சம் திடுக்கிட்டுப் பயந்துபோனுர்கள்.

ஜயதேவர் அவர்கள் தன்மையை அறிந்து, சிரித்த முகத்தோடு 'பாகவதர்களே! தயை செய்யுங்கள்' என்று சொல்லி, அவர்களை அருகில் அழைத்து, ஆதரணை செய்து தேற்றிச், சிலநாட்கள் வரையில் வைத்துக்கொண் டிருந்தார்.

போலிப் பாகவதர்கள் 'தங்கள் குற்றம் வெளிப்படுவதற்கு முன்னரே சென்றுவிட வேண்டும்' என்று, ஒரு நாள் ஜயதேவரை வணங்கி, விடை கேட்டார்கள். ஜயதேவர் அவர்கள் உயர்ந்த வொழுக்கமுள்ள உத்தமர்கள் என்றும், பகவத்பக்தியில் பெயர்பெற்றவர்கள் என்றும், அரசனுக்குச் சொல்லி, ஒரு வருஷம் வரையில் அவர்கள் குடும்பத்துக்குப் போதுமான பொருளைக் கொடுத்தனுப்பும்படி கூறினார். கிரவுஞ்ச மன்னவன் கோதுமை, பருப்பு, நெய் முதலிய பொருள்களை வண்டியில் ஏற்றிப், பாகவதர்களுக்குப் பீதாம்பரம் முதலான மரியாதைகளைச் செய்து, வழிகூட்டி யனுப்பினான்.

அந்தப் பொய் வேஷக்காரர்கள் ஜயதேவர் தங்களுக்கு இரண்டாவது தடவையிற் செய்த உபகாரத்தையும் கூட உள்ளத்திற் கொள்ளாமல், தங்கள் துர்க்குணத்துக்குத் தகுதியாகத், தங்களுக்கு வழித்துணை வந்த அரச பரிசாரகர்களோடு வார்த்தைமீது வார்த்தையாக, "என்ன அநியாயம் பாருங்கள்! கடவுள் அக்கிரமம் செய்பவர்க்குத்தாம் அநுக்கிரகம் செய்கிறார்; உங்களுக்கு ஜயதேவர் காலையும் கையையும் இழந்ததற்குக் காரணம் தெரியுமா? அவர் துஷ்டகர்மா வென்ற அரசனுக்கு அந்தரங்க நண்பர்; அவன் பொக்கிஷப் பொருள்களைத் தீய வழிகளிற் செலவிட்டு, அவ்வரசன் அந்தரங்கங்களையும் பகைவர்கள் அறியச் செய்துவிட்டார்;

"அதனால், அவ்வரசன் கோபங் கொண்டு, சிரசாக்கினை செய்யும்படி எங்களுக்குக் கட்டளை யிட்டான்; நாங்கள் அப்

பொழுது அரசன் வேலைக்காரர்களா யிருந்தோம்; நாங்கள் ஜய தேவரைப் பிடித்து வந்து, வெட்டத் தொடங்கினோம்; ஜய தேவர் 'வெட்டவேண்டாம்' என்று, காலில் விழுந்து கேட்டுக் கொண்டனர். நாங்கள் கருணை கொண்டு ஜயதேவரது காலை யும் கையையும் களைந்து, ஒரு புதரிற் கிடத்திவிட்டுப் போ னோம்; அப்புறம், அரசன் அறிந்தால் என்ன சிக்ஷை விதிப் பானோ வென்று பயந்து, ஜயதேவர் பொருட்டுப் பெண்டிர் பிள் ளைகளையும் பிரிந்து, அன்று முதல் பாகவதர்களாகி ஊர்கள்தோ றும் திரிந்து, உயிர் பிழைத்துவருகிறோம்; ஜயதேவர் தற்செய லாக எங்களைக் காண நேர்ந்தபடியினால், திடுக்கிட்டுப் பயந்து, தம் செய்தியை அரசனுக்குத் தெரிவிக்கவேண்டா மென்று கேட்டுக்கொண்டு, எங்களுக்கும் இவ்விதமான வெகுமதியைச் செய்தனுப்பினர்'' என்று மெய்போலச் சொன்னார்கள்.

அந்தப் பழிச்சொல் பொறுமையில் மிகுந்த பூமிக்குக்கூ டப் பொறுக்க முடியாமற் போயிற்று. அதனால், அந்நிலம் வெ டிப்புண்டு, அந்த வஞ்சகர்களை அப்படியே இழுத்துக்கொண்டு விட்டது. அந்தத் துஷ்டர்கள் கிடுகிடு பாதாளத்தில் அமிழ்ந் தியும் பிராணன் போகாமல் மரண காயம் அடைந்து, அறிவு தலைக்கொண்டு, "ஐயா மகாத்மாவே! எங்கள் துர்ப்புத்தியி னால் தங்களுக்கு இந்தத் தடவையிலும் அபசாரம் பண்ணி விட்டோம்; நாங்கள் செய்தன வெல்லாம் தப்பிதங்களே யாகும்; இந்த ஆபத்துச் சமயத்தில் எங்களைக் காட்டிக்கொடா மல் காப்பாற்றவேண்டும்; தங்கள் பாத கமலமே எங்களுக்கு அடைக்கலாலயம்'' என்று பலவிதமாகப் பதறி யழுதார்கள்.

அரச பரிசாரகர்கள் ஆச்சரியமும் பயமும் அடைந்து, ஜயதேவரை வந்துகண்டு, நடந்தவற்றைத் தெரிவிக்க, அந்தப் பெரியவர் அவ்விடத்துக்குத் தம்மைச் சுமந்துபோகச் செய்து

பகவானைத் துதித்துக் கள்ளர்களைக் காப்பாற்ற வேண்டினர். உடனே கடவுள் ' துஷ்டர்களுக்குத் தண்டனை தகுந்ததுதான்' என்று அசரீரியின் முகமாக அறியப் பண்ணினர்.

ஜயதேவர் " பக்த ரக்ஷகா! இரணியன் இராவணன் முதலியவர்களைக் காட்டிலும் இவர்கள் தங்களுக்கு எவ்விதமான தீங்கையும் இழைத்துவிட வில்லை; அவர்கள் சுவர்க்கம் புகுவது நியாயமா யிருந்தால், இவர்களைக் காப்பதுமாத்திரம் தங்களுக்கு எங்ஙனம் அநியாயமாகும்; தாங்கள் எப்படியாவது சொல்லிக் கொள்ளுங்கள்; எனக்குத் தெரிந்தது ஒன்றேயொன்று தான்; அவர்கள் எனக்குத் தீங்கு செய்ததன் காரணமாகத் துன்புற லாகாது; தாங்கள் வந்து காப்பாற்ரு விட்டால், நானும் அந்தப் பிளப்பில் விழுந்து, இறந்து போகிறேன்" என்று புலம்பிப், பிளப்பில் விழப்போனர். அப்பொழுது கண்ணபிரான் வந்து, அவர் கையைப் பிடித்துத் தடுத்துக், கள்ளர்களைக் கரையேற்றி மறைந்தார். ஜயதேவர் கள்ளர்களுக்கு அரசன் கொடுத்த பொருள்களையும் வெகுமதிகளையும் திருப்பிக் கொடுத்துச், ' சென்று வாருங்கள்' என்று, சொல்லியனுப்பினர். இந்தக் கதையினல் துஷ்டர்களுக்குச் செய்த வுதவி, என்றும் தீங்கையே விளைக்கும் என்பதும், நல்லவர்களுக்கு எவ்வளவு கெடுதி செய்தாலும் அவர்கள் உதவியே செய்வார்களென்பதும், வெளியாகின்றன. —பக்த விஜயம்.

—அல்லாத

1 ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர்.

2 வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்.

3 சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

---

3. பாரிமகளிரும் விச்சிக்கோனும்

பாண்டிய நாட்டில் பறம்பு என்றொரு சிறுமலை யுண்டு. பாரி யென்ற சிற்றரசர் அம்மலையை ராஜதானி யாக்கிக்கொண்டு ஆளுகை செய்து வந்தார். அவர் தம்மை வந்து யாசித்தவர்க்கு இல்லை யென்று சொல்லாமல், ஈதலை மேற்கொண்ட இணையற்ற வள்ளல். தமிழ்நாடு முழுவதும் அவர் கொடையைப் புகழ்ந்து பேசும். அவருக்கு முந்நூறு கிராமங்கள் உரிமையா யிருந்தன. கீழ்வரும் உதாரணத்தினால் அவர் கொடையை அறிந்து கொள்ளலாம் :—

அவர் ஒரு தருணத்தில் மலை வளம் கண்டு, மகிழ்ந்து வந்துகொண் டிருந்தார். வழி நடுவில் காட்டு முல்லைக்கொடி யொன்று வளர்ந்து படருவதற்குக் கொழுக்கொம் பில்லாமல் உயர வெழும்பித் தவித்துக்கொண் டிருந்தது. வள்ளல் அதனைக் கண்டு வருந்தி, 'அந்தோ! நம் ஆளுகையில் பற்றுக் கோடில்லாமல் பரிதபிக்கின்ற உயிரையும் பார்க்க லாயிற்றே; எல்லா வுயிர்களையும் ஒப்ப நாடி இதம் செய்பவனுக் கன்றோ இறைவன் என்ற பெயர் பொருந்தும்; இந்தக் கொடி அரும்பும் பருவத்தி லிருப்பதனால் இதற் கொரு ஆதரவு காட்டவேண்டும்' என்று கருதித், தாம் ஏறி வந்த தேரை அது பற்றிப் படருவதற்குக் கொள்கொம்பாகக் கொடுத்துப் போய்விட்டார். அதனை யறிந்த ஜனங்கள் அவர் கொடையை இன்னும் அதிகமாகப் புகழத் தொடங்கினார்கள். பொருளிலாயினும், பராக்கிரமத்தி

லாயினும், அந்தக் காலத்தில் பாரிவள்ளலைப் போட்டிசெய்ய முடியாது.

அவருக்கு இரண்டு பெண்கள் இருந்தனர். அழகு கல்வி ஒழுக்கம் என்ற மூன்றும் அவர்களுக்கு ஆபரணங்களாய் விளங்கின. சேரன் சோழன் பாண்டியன் என்ற மூன்று மன்னவர்களும் அந்தப் பெண்களைத் தாங்கள் மணம் செய்து கொள்ளத், தனித்தனியாகத் தூதனுப்பிக் கேட்டார்கள். அவ்வரசர் மூவரும் தம் பெண்களைக்காட்டிலும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் கீழ்ப்பட்டவர்களாக இருந்துவந்த படியினால், வள்ளல் அவர்கள் வேண்டுதலை அங்கீகரிக்க வில்லை. அரசர் மூவரும் அவமான மடைந்து, தங்கள் படைகளைத் திரட்டி வந்து, பறம்பு மலையை வளைந்து, பல நாள் வரையில் பெருஞ் சண்டை. விளைத்தார்கள். அந்தச் சண்டையில் அவர்களுக்கு வெற்றி யுண்டாகாமற் போயிற்று. பின்னர், உபாயத்தினால் அவர் தலையைப் பரிசிலாகப் பெற்றுக் கொன்றுவிட்டார்கள். அந்தப் பெரிய வள்ளலுடைய மரணத்துக்கு அவர் கைக்கொண்டிருந்த கொடையே காரணமாய் நின்றது.

பாரி வள்ளலுக்குக் கபிலர் என்ற ஒரு அந்தணப் புலவர் நண்பரா யிருந்தார். அவர் மதுரைச் சங்கத்தில் இருந்து கொண்டு தமிழ்ப் பயிரை வளர்த்த நல்லிசைப்புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர். வள்ளல் மரண மடைந்த பிற்பாடு, அந்தப் பெரும்புலவர் வள்ளல் மகளிர்க்கு மணம் செய்விக்க எண்ணினர். அப்பொழுது வச்சிர நாட்டுக்குத் தலைவனாகிய விச்சிக்கோன் என்பவன் கல்வி ஒழுக்கம் முதலிய அருங் குணங்களிற் சிறந்து விளங்கினன்.

கபிலர், பாரிமகளிர் இருவரையும் அவனிடம் அழைத்துக்கொண்டு சென்று, "அண்ணலே! இந்தச் சுந்தரிகள் முல்

லைக்கொடி படர்ந்து வளர்தற்குப், பொற்றேரை உதவின பெருங் கொடை வள்ளலாகிய பாரி மன்னவர் புத்திரிகள் ; நான் அவர் நண்பனுகிய கபிலன் என்ற அந்தணன் ; பெண்கள் குணங்களைப் பொருந்திக், கல்வியிலும் சிறப்புற்றிருக்கின்ற இந்தக் கட்டழகிகளைத் தங்களுக்குக் கன்னிகாதானம் செய்யக் கொண்டுவந் திருக்கிறேன் ; தமிழ் வேந்தர் மூவரும் இவர்களைத் தங்களுக்குத் தரும்படி தனித் தனியாகத் தூதனுப்பினதும், அதன் காரணமாகச் சண்டை நடந்ததும், தாங்கள் அறியாதிருக்க வில்லை ; தந்தையையும் செல்வத்தையும் இழந்த இந்தச் சுந்தரீமணிகளுக்குத் தாங்கள் தலைவராக வேண்டும் ; இதுதான் எனது வேண்டுகோள்" என்று விநயமாய்ச் சொன்னர்.

விச்சிக்கோன் வித்துவான்களிடத்தில் விசுவாசம் வைக்காதவ னல்லன். பாரிவள்ளலின் பெருமையைப் பாராதவனுமல்லன். அந்தப் பெண்களை மணக்க வேண்டும் என்று, அவனும் முன்னர் விரும்பி யிருந்தவன்றுன். பெரிய வரசர்களின் பிரார்த்தனைகளை புறக்கணிக்கப்பட்டபோது தனக்குக் கிடைப்பது குதிரைக் கொம்புதானென்று, அவன் தீர்மானித்துக் கொண்டுவிட்டான் ; இப்பொழுது அவர்களாகவே வலுவில் வந்து வேண்டும்பொழுது அங்கீகரிப்பதற்கு ஆக்ஷேபணை இல்லை யல்லவா ! ஆயினும், விச்சிக்கோன் அவர்களை அங்கீகரிக்க வில்லை. வேண்டா மென்று சொல்லிவிட்டான்.

அவன் கபிலர்க்குக் கூறிய காரணங்கள் இவை :—"ஐயா ! தந்தையையும் செல்வத்தையும் இழந்து, தெருவில் நிற்கின்ற இவ்வேழைச் சிறுமிகளை நான் மணக்க வுடன்படேன் ; வள்ளல் இருக்கும் பொழுது மணந்திருந்தால், அவரது ஐந்நூறு கிராமங்களும் பறம்புமலையும் எனக்கு உரிமையா யிருக்கும் ;

வறுமைப் பிணியில் வருந்துகின்ற இந்தக் கட்டழகிகள் அரசச் செல்வத்திலுள்ள என்னை அடையத்தக்கவ ரல்லர்; தாங்கள் வேறு தக்க விடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று சொல்லி யனுப்பிவிட்டான்.

அப்புறம், கபிலர் அவர்களைத் துவராபதி யரசனான இருங்கோவேளிடம் அழைத்துச்சென்று, மணம் செய்து கொள்ள வேண்டினர். விச்சிக்கோன் போலவே அவனும் 'செல்வமும் செல்வாக்கும் இழந்த ஏழைப்பெண்கள் தனக்கு வேண்டாம்' என்று, வெறுத்துக் கூறி விட்டான். அந்தப் பெண்கள் எல்லா நலங்களும் இயைந்தவர்களாயிருந்தும், இளம் பருவத்தில் நேர்ந்த வறுமையினால் தங்கள் போன்ற அரசர்களால் இகழப்பட்டுப்போனார்கள். ஆதலால், இளமையில் வறுமை எவற்றினும் கொடியது. —புறநானூறு.

இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னா வளவில் இனியவும்—இன்னாத
நாளில்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

4. குமணவள்ளல் கொடை

பலாவும் மூங்கிலும் பழுத்துக் குலுங்குகின்ற முதிரம் என்ற மலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் முன்னர்க் குமணன் என்ற அரசர் தலைவரா யிருந்தார். அவர் பாரி வள்ளலைப் போல யாசகர்க்கு எந்தப் பொருளையும் இல்லையென்னமல் ஈந்து வருகின்றவர். அவர் இம்மையிற் செய்த வொன்று மறுமைக்குப் பயன்படும் என்ற எண்ணம் இல்லாமலேயே இயல்பில் அளிக்கின்ற எழிற்பெரும் வள்ளல். தம்மைப் பாடும் புலவர்க்கு யானை குதிரை முதலிய வாகனங்களையும், அவற்றைக் காத்தற்குப் போதுமான செல்வங்களையும், கொடுத்தனுப்புவார்.

குமண வள்ளலுக்கு இளங் குமணன் என்று ஒரு சகோதரன் இருந்தான். அவன் பிறர்க்கு உதவி செய்வதில் எண்ணம் இல்லாதவன். பெரும்பாலும், உலோப குணமே அவ்வுருவம் கொண்டு வந்ததென்று அவனைச் சொல்லிவிடலாம். அவ்விளங் குமணன் 'தன் சகோதரன் யாசகர்க்கு எல்லாவற்றையும் கொடுத்துப் பொக்கிஷங்களை வரட்டி விடுகிறான்' என்று, மந்திரிகளிடத்தில் முறை சொல்லிக்கொண் டிருப்பான். அவனுடைய நண்பர்கள் முருடரும் மூர்க்கருமாக இருந்துவந்தார்கள்.

இளங் குமணன் அவர்கள் தூண்டுதலின்மீது ஒரு நாள் இராஜசபைக்குச் சென்று, குமணனை வணங்கி, "அண்ணா! தாங்கள் இதுவரையில் யாசகர் விரும்பின எல்லாவற்றையும் கொடுத்து, அவர்கள் மனத்தைக் களிக்கச் செய்திருக்கிறீர்கள்; தங்களை விரும்பி வந்தவர் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றதில்லை; நான் தங்கள் சகோதரன்; நான் சிங்காசனத்தில் அமர்ந்து அரசனாக வேண்டும் என்று ஆசை கொண் டிருக்கிறேன்; இனி, அவ்விருப்பத்தைத் தாங்கள்தாம் நிறைவேற்ற வேண்டும்" என்று கூறினான். குமண வள்ளல் உடனே கீழேயிறங்கி வந்து, சகோதரனைத் தழுவிக்கொண்டு, "இளங் குமணா! நீ இன்றுமுதல் இந்நாட்டுக்கு இறைவனா யிரு! இந்நாட்டில் எனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் உனக்கு ஒப்புவித்துவிட்டேன்" என்று சொல்லிச், செங்கோலையும் முத்திரை மோதிரத்தையும் அவனிடம் கொடுத்துச் சென்றுவிட்டார்.

இளங் குமணன் சிங்காசனத்தைக் கைப்பற்றித், தன் நண்பர்க்கு உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்துப், பொக்கிஷங்களை நிரப்பிக் கொண்டுவந்தான். அப்புறம், அவனுக்கு அமைதி

யுண்டாகவில்லை. தன் சகோதரன் எப்பொழுது வந்து, நாட்டைக் கவர்ந்து கொள்வானோ வென்று, எண்ணமிட்டு வருந்தினன். அதனால், 'குமண வள்ளலின் தலையைக் கொண்டுவருகின்றவர்க்குப் பாதி ராஜ்யம் தருகிறேன்' என்று, பட்டணத்தில் பறை சாற்றினன். ஆனால், அந்தக் கொடுஞ் செயல் செய்ய எவரும் துணிந்து வரவில்லை.

சில நாட்களுக்குப் பிற்பாடு, ஆமூரில் வணிகர் குலத்திற் பிறந்த பெருந்தலைச் சாத்தனரென்ற புலவர் குமண வள்ளலிடத்தில், பரிசில் பெற வந்தார். வள்ளல் வருந்துவது பண்டிதர்க்குத் தெரியாது. வள்ளல், முதிர நாட்டில் முன்னர்ப் போலவே விளங்கி வருகிறாரென்பது அவர் தம் மெண்ணம். குமண வள்ளல் வசிக்கின்ற வனத்தைக் கடந்துதான் எவரும் முதிரம் செல்லவேண்டும். புலவர் பெருமான் அந்தப் பெருங் காட்டில் நுழைந்து, வழி தெரியாமல் மயங்கி, வருந்தி வருகையில், தற்செயலாகக் குமண வள்ளலைக் கண்டார். வள்ளல் வேட்டையை முன்னிட்டு வனத்துக்கு வந்திருக்கிறாரென்று, பண்டிதர் நினைத்துக் கொண்டார்.

வரையாது கொடுக்கின்ற வள்ளல்களுக்கு எச்சமயமும் நற்சமயமே யாதலால், கானகமா யிருந்தாலும் தாம் கருதி வந்த பரிசிலைப் பெற்றுச் செல்லக் கூடுமென்று நினைத்து, அவர் எதிரிற் சென்று வணங்கி, "வள்ளலே! நான் பெருந்தலைச் சாத்தனென்ற புலவன்; புலவர்க் குரிமையான வறுமைப் பிணி என்னையும் வருத்துகின்றது; சமையல் செய்யப்படாத காரணத்தினல் அடுப்பில் காளான்கள் குடைகள்போல விளங்குகின்றன; உணவில்லாமையால் மனைவி உடல் மெலிந்து, குழந்தை சுவைப்பதற்கும் பாலில்லாமல் வற்றி, உலர்ந்து கிடக்கிறாள்; குழந்தை தாயையும், தாய் தன் கணவனுகிய என்னை

யும் நோக்கிக் கண்ணீர் வடிப்பதனுல், நான் நெடுந் தூரத்திலி ருந்தும் வள்ளற் பெருமானுகிய தங்களை நோக்கி வந்தேன்; எனக்கு இல்லை யென்னுமல் இப்பொழுதே ஏதேனும் பரிசில் தாருங்கள்'' என்று பொருள் படும்வண்ணம் ஒரு பாட்டைப் பாடினுர்.

குமண வள்ளல் மனம் வருந்திப், "புலவர் திலகரே! தங் கள் நிலைமை தாழ்ந்திருக்கின்றதென்று, தங்கள் செய்யுள் தெரி விக்கின்றது; தங்களுக்கு இல்லை யென்று சொல்ல லாகாது; ஏதேனும் தந்தே யனுப்ப வேண்டும்; நான் சொல்வதைக் கேளுங்கள்; என் சகோதரன் 'எனது பயனற்ற சிரத்துக்குப் பாதி நாட்டைத் தருகிறேன்' என்று, பறை சாற்றி யிருக்கிறுன்; தாங்கள் இப்பொழுதே என் தலையை எடுத்துக்கொண்டு சென்று, அவன் கையிற் கொடுத்து, அரசிற் பாதியை அடைந்து, தங்கள் வறுமைப் பிணியை மாற்றிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி, அவருக்குத் தம் கையில் இருந்த வாளைக் கொடுத்துத் தலை குனிந்து நின்ருர். என்ன பெருந்தன்மை பாருங்கள்! ஆதலால், உயர்ந்த கொடையைக் கொண்ட வுத்தமர்கள் செல் வம் சுருங்கித் தாழ்வடைந்த காலத்திலும், யாசித்தவர்க்கு இல் லையென்று சொல்லமாட்டார்கள். —புறநானூறு.

1 அட்டாலும் பால் சுவையிற் குன்ருது...
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

2 சீரியர் கெட்டாலும் சீரியரே.......
சீரிய பொன்னின் குடமுடைந்தாற் பொன்னுகும்.

3 சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலால்—தந்தம்
தனஞ்சிறிய ராயினும் தார்வேந்தர் கெட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

5. விதுரன் வில்லை யொடித்தது

முன்னர்த் துரியோதனன் பாண்டவர்களை வலுவில் வரவழைத்துச், சூதாட்டத்தில் அவர்களுடைய எல்லாச் செல்வங்களையும் அபகரித்துக் கொண்டுவிட்டானென்று, அறிந்திருக்கிறீர்கள். 'பாண்டவர் ஐவரும், அவர் மனைவி பாஞ்சாலியும், பன்னிரண்டு வருஷம் காட்டிலும், ஒருவரும் தங்களை அறிந்துகொள்ள முடியாமல், உருவங்களை மறைத்து, ஒரு வருஷம் நாட்டிலும், வசித்துவர வேண்டும் என்றும், அதன் பின்னர்த் துரியோதனன் அவர்களிடம் அபகரித்துக்கொண்ட உரிமைகளை ஒப்புவிக்க வேண்டும் என்றும், பீஷ்மர் முதலானவர் ஏற்பாடு பண்ணினார்கள். பாண்டவர் நிபந்தனையின் வண்ணம் வன வாசத்தையும் அஞ்ஞாத வாசத்தையும் கழித்துவிட்டார்கள். அப்புறம் அவர்கள் அத்தின புரத்தின் அருகாமையில் உள்ள உபப்பிலாவியம் என்ற பட்டணத்தில் இருந்துகொண்டு, தங்கள் உரிமைகளைப் பெற்றுவரும்படி துரியோதனனிடத்துக்குக் கண்ணனைத் தூது அனுப்பினார்கள்.

கண்ணன் அத்தின புரத்துக்கு வந்திருந்தபொழுது விதுரன் என்ற முதல் மந்திரி அவருக்கு விருந்தளித்து உபசரணை பண்ணினான். விதுரன் துரியோதனனுக்குச் சிறிய தந்தை ஆகவேண்டும். அவன் எல்லாச் சாஸ்திரங்களையும் எழுத்தெண்ணிப் படித்தவன். அரச நீதிகளை ஐயம் திரிபின்றிக் கற்றவன். நீதியும் நேர்மையு முள்ள எல்லா வரசர்க்கும் விதுரனிடத்தில் அதிக மதிப்புண்டு.

துரியோதனனையும் அவன் சகோதரர்களையும் விதுரன் தூக்கி யெடுத்தும், தோள்மே லேற்றியும், உச்சி முகந்தும், முத்த மிட்டும், வளர்த்து வந்தான். அப்புறம், பருவம் வந்த

பிற்பாடு, அவர்களுக்கு ஆவன செய்தும், அல்லன வகற்றியும், நேர்மையை யுரைத்தும், கீழ்மையைக் குறைத்தும், புத்தி போதித்து வந்தான். ஆனால், துரியோதனன் கெடுமதியும் குடில வெண்ணமும் கொண்டவன். கோடரிக் காம்பு குலத்தைக் கெடுப்பதுபோலத், துரியோதனன் சந்திர குலத்தின் பெருமையைக் குலைக்கத், தூமகேதுவாய்த் தோன்றினான்.

கண்ணன் மறுநாள் துரியோதனனைக் காணக், கொலுக் கூடம் வந்தார். பாண்டவர்களின் வியவகாரம் சபையில் பேசப் பட்டது. அரவக்கொடியோன் ஆதிநாளின் உடன்படிக்கையை அங்கீகரிக்க வில்லை. 'பாண்டவர்கள் போரின் முன்னிலையிற் றான் பாகம் பெறவேண்டும்' என்று, தீர்மானமாய்ச் சொல்லி விட்டான். இன்னமும், கண்ணனுடைய கலகப் பேச்சுக்களாற் றான் பாண்டவர்கள் பாகம் பாகம் என்று, பேசி வருகிறார்கள் என்று, பாண்டவர்களையும் கண்ணனையும் சேர்த்துத் தூஷிக் கவும் தலைப்பட்டான். கோபம் கொண்டவர்களுக்குக் கண் மண் தெரியாதல்லவா! அந்தத் தூஷணைச் சொற்கள் மெள்ள மெள்ள அவர்களை விட்டுக், கண்ணனுக்கு விருந்தளித்த விது ரன்மீதிற் றிரும்பின.

அவன் விதுரனைத் தன்கீழ்க் கையேந்திக் கிடக்கின்ற ஒரு வுத்தியோகஸ்தன் என்று, உள்ளத்திற் கொண்டுவிட்டான். அதனால், விதுரனை நோக்கி, "மரியாதை தெரியாதவனே! நீ பகைவன் றாதனுக்கு என் கட்டளை யில்லாமல் எப்படி விருந் தளிக்கின்றனை? நீ அற்பபுத்திக்கு ஆலயமானவன்; நன்றி யற் றவன்; யஜமானத் துரோகி; குற்றேவல் செய்யும் குலத்திற் பிறந்தவன்; குலத்தளவே யாகும் குணம்; உன் குலத்துக் குத் தகுதியாகவே நடந்துகொண் டிருக்கின்றனை; உன்னை இதுவரையில் தகுதியுள்ளவனாகக் கருதி வந்த என்னைத்தான்

நொந்து கொள்ளவேண்டும்;" என்று, பலவாறு நிந்தித்துப் பேசினன். சபையில் உள்ளவர்கள் 'சீ! சீ! துஷ்டன்! துஷ்டன்!' என்று துரியோதனனைத் தூஷிக்கத் தொடங்கினர்கள்.

விதுரனுக்கு அவமானம் அதிகமாயிற்று. அவன் அளவு கடந்த கோபத்தோடு ஆசனம் விட்டெழுந்து, வாளை உருவிக்கொண்டு, "சீ! துஷ்டா! நீ கெட்டாய்; என்னைப் பழுது பேசின உன் நாவை இப்பொழுதே இரண்டு துண்டம் செய்வேன்; சகோதர வாஞ்சையும் தருமமும் என்னைத் தடுக்கின்றன; இவையல்லாமல், இன்னமும் ஒன்று இருக்கின்றது; பயனற்றவனும், அற்பனும், மனிதப்பதருமான உன்னிடத்தில் என் கோபம் பெருமை யடையாது; உன் பேராசையாலும் பொறாமையாலும் உண்டான பெருஞ் சண்டையில் என் உதவியை அடைய முடியாவண்ணம் உன்னுடைய துண்டிக்கத் தூக்கின வாளினால் என் பெரிய வில்லை வெட்டிப்போடுகிறேன்" என்று சொல்லி, உயர்ந்ததும் சிறந்ததுமான தன் கோதண்டத்தை வெட்டி யெறிந்து, வெளியில் வந்துவிட்டான். அப்புறம், பாரதச் சண்டையில் அவன் துரியோதனனுக்கு உதவி செய்யவே யில்லை. ஆதலால், அற்பர்களின் நட்பு எப்பொழுதும் ஆபத்தையும் அவமானத்தையுமே விளைக்கும்.

—மகா பாரதம்.

....அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்.

---

6. கண்ணனும் ஜராசந்தனும்

முன்னொரு காலத்தில் கிரிவிரஜ மென்னும் பட்டணத்தில் ஜராசந்தன் என்று ஒரு பெரிய வரசன் இருந்தான். அவன் பலம், பராக்கிரமம், படை, பொக்கிஷம், முதலியவற்றில் பெயர்

பெற்றவன். அவனுக்கு இரண்டு பெண்கள் இருந்தார்கள். அவர்களை வட மதுரையை ஆண்டு வந்த கம்ஸனுக்குக் கொடுத்து, மணம் செய்திருந்தான். கம்ஸன் கண்ணனுக்கு மாமன் ஆக வேண்டும். கண்ணன் தாய் தேவகியும் கம்ஸனும் சகோதர சகோதரிகள். 'உன் சகோதரியின் வயிற்றில் பிறக்கின்ற எட்டாவது புத்திரனால் உனக்கு மரணம் உண்டாகும்' என்று, கம்ஸனுக்கு ஒருசமயத்தில் அசரீரி தெரிவித்திருந்தது. தேவகியின் வயிற்றில் எட்டாவது புத்திரனாக ஸ்ரீமகாவிஷ்ணு பிறந்து, ஆயர்ப்பாடியில் வளர்ந்துவந்தார். அவருக்குத்தான் கண்ணன் என்று பெயர். கம்ஸன், நாரதர் முதலிய முனிவர்களினால் அதனைத் தெரிந்துகொண்டு, கண்ணனைக் கொல்லும் பொருட்டுப், பூதனை முதலான சில துஷ்டப் பெண்களையும், சகடாசுரன் முதலான சில துஷ்ட வரக்கர்களையும், ஆயர்ப்பாடிக்கு அனுப்பினான். அவர்கள் அனைவரும் கண்ணனால் கொலையுண்டு போனார்கள். அந்தக் காரணத்தினால் கண்ணனுக்கும் கம்ஸனுக்கும் பகை பெருகிற்று. சில வருஷங்களுக்குப் பின்னர்க், கண்ணன் வட மதுரையை அடைந்து, கம்ஸனைக் கொன்று, அவன் பட்டணத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

கம்ஸன் மனைவிகள் கைம்பெண்களாகிக், கண்ணன் அக்கிரமங்களைத் தந்தைக்குத் தெரியப்படுத்தினார்கள். ஜராசந்தனுக்குப் பெண்களின் துன்பத்தைப் பார்க்க முடியவில்லை. சூரனனபடியினால், படைகளுடன் சென்று, வட மதுரையை முற்றுகை யிட்டான். அந்தச் சண்டை தொடர்ச்சியாக முப்பது நாட்கள் வரையில் நடந்தது. இருதிறத்து வீரர்களும் இனி இல்லை யென்னும்படி எதிர்த்து நின்று சண்டை செய்தார்கள். முடிவில், வெற்றி ஜராசந்தனுக்கும், தோல்வி கண்ணனுக்கும் சொந்தமாயின. ஜராசந்தன் அந்தப் பட்டணத்தில்

அகப்பட்டவற்றை அபகரித்துக்கொண்டு பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

'உருசி கண்ட பூனை உரியை உரியைத் தாவும்.' ஜராசந்தன் அடுத்த வருஷத்திலும், அதற்கு அடுத்த வருஷத்திலுமாகத், தொடர்ச்சியாய்ப் பதினெட்டுத் தடவை வட மதுரையை வளைந்து, முன்னர்ப் போலவே முற்றுகை செய்தான். கண்ணபிரானுக்கு ஒரு தடவையிலாவது வெற்றி கிடைக்க வில்லை. படைகளும் தாமுமாகப் பெருமுயற்சி செய்து சண்டையிட்டுங் கூட, ஜயமடந்தை ஜராசந்தனையே சேர்ந்து கொண்டு விட்டாள். தோல்வியைப் பொறுத்துக்கொள்வதில் கண்ணன் பொறுமைக் கடலாகவே யிருந்தார்.

ஒரு சமயத்தில் கண்ணனும், அவர் சகோதரர் பலராமரும், மலைவளம் காண, ரைவதக மலையில் வந்திருந்தார்கள். ஜராசந்தன் படைகளை அனுப்பி, அம்மலையை நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டான். அடிக்கடிவந்து செய்கின்ற அவன் உபத்திரவத்துக்கு ஆற்றாமல் கண்ணன் வட மதுரையை விட்டுத் தொலைத்து, மேல்கடலில் துவாரகை யென்ற பட்டினத்தைப் படைத்து, அதிற் குடிபுகுந்து, ஜராசந்தனைத் தொலைக்கச் சூழ்ச்சி செய்து வந்தார். பின்னரும் சில வருஷங்கள் சென்றன.

பிற்பாடு, யுதிஷ்டிர சக்ரவர்த்தி இந்திரப்பிரஸ்தத்தில் ராஜசூயம் என்னும் வேள்வி செய்யத் தொடங்கினர். அஃது எல்லா வரசர்களையும் அடக்கிச் செய்யவேண்டிய ஒரு அரும் பெரும் வேள்வி. கண்ணன் ஜராசந்தனைக் கொன்றாலல்லாமல், அவ்வேள்வி முற்றுப்பெறாதென்று, சக்ரவர்த்திக்குச் சொல்லி, ஜராசந்தனை அமரில் அழிக்கும்பொருட்டுப், பீமன் அர்ச்சுனன் என்ற அவர் சகோதரர்களை அழைத்துக்கொண்டு, அந்தண வேஷத்தோடு சென்று, ஜராசந்தனைக் கண்டார். அவ்வரசன்

மூவருக்கும் அதிதிபூஜை செய்து, வந்தகாரியத்தை விசாரித்தான். கண்ணன் தங்கள் மூவரையும் தெரிவித்துக்கொண்டு, 'யுத்த பிக்ஷையை விரும்பி வந்தோம்' என்றார். அவர் பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டது.

உடனே ஜராசந்தனும் பீமனும் எதிர்த்து நின்று மற்போர் செய்தார்கள். சண்டை நடுவில் ஜராசந்தன் பீமசேனனால் பலதடவை கிழித்தெறியப்பட்டும், மரண மடையவில்லை. அப்புறம், பீமசேனனுக்குக் கண்ணனே ஒரு தந்திரம் செய்து காட்டினார். பீமன் அதனை அறிந்து, ஜராசந்தனைக் கிழித்து, உடற் பிளவுகளை மாற்றிப் போட்டு, அவனுக்கு மரணத்தை விளைத்தான். கண்ணன் அடுத்தடுத்துப் பலதடவை போர் தொடுத்தும் கிடைக்கப் பெறாத வெற்றியைப் பீமசேனன் ஒரேதடவையில் தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். ஆதலால், அடுத்தடுத்து முயற்சி செய்தாலும், ஆகுங்காலம் வந்தாலன்றிச், செய்யும் தொழில் பலன் தராது. —பாகவதம்.

அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
யெடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
வுருவத்தால் நீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

---

7. இரணியன் மரணம்

முன்னொரு காலத்தில் காசியப முனிவருக்கு இரணியன் என்று ஒரு புத்திரன் இருந்தான். அவன் அதிக பலசாலி. பராக்கிரமம் பொருந்தியவன். மலைகளைக் கரத்தில் எடுத்துப் பந்தாடும்படியான பெரிய வடிவத்தைப் பெற்றவன். அவன் நான்முகக் கடவுளை நினைந்து, நெடுங்காலம் வரையில் தவம் செய்து, உயர்ந்த வரங்களை அடைந்தான். தேவர் மனிதர்

விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன நிற்பன வென்ற ஏழு வகையான உயிர் வர்க்கங்களினாலும் அவனுக்கு மரணம் உண்டாகாது. அவ்விரணியன் திருமால் மீதில் தீராப் பகை கொண்டிருந்தான். மற்ற இந்திரன் முதலான எல்லாத் தேவர்களும் அவனுக்கு மூட்டுப்பூச்சியும் சிற்றெறும்பும் போன்றவர்கள். அவர்கள் அனைவரும் இரணியனுக்கு அடிமை வேலை செய்து வந்தார்கள். இரணியன் ஆளுகையில் எவரும் அச்சுதன் பெயரை உச்சரிக்கலாகாது. அந்தக் கட்டளையைக் கடந்தவர் கடுந் தண்டனையை அடைவார்கள். அவன் வரத்தின் மகிமையினால் பலவிதமான வடிவங்களைப் பெற்று, எல்லா வுலகங்களிலும் தடையின்றிச் சஞ்சரிப்பான். தேவர் மனிதர் முதலியவர் அவனையே கடவுள் என்று கொண்டாடி வந்தார்கள். எல்லா வேள்விகளும் அவனைக் குறித்தே செய்யப்பட்டு வந்தன. அவன் ஆளுகையில் பள்ளிப் பிள்ளைகள் கூட 'ஹிரண்யோ நமஹா' என்றுதான் முதலில் ஆரம்பம் செய்யவேண்டும்.

அவன் வயிற்றில் பிரஹ்லாதன் என்பவன் பிறந்தான். அவனுக்குச் சண்டன் அமர்க்கன் என்ற சுக்கிரபகவான் புத்திரர் இருவரும் ஆசிரியரானார்கள். அவர்கள் உபதேசத்தைப் பிரஹ்லாதன் அங்கீகரிக்கவில்லை. அவன் முதலிலேயே 'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாக்ஷர மகா மந்திரத்தைச் சொல்லத்தொடங்கி விட்டான். பிரஹ்லாதனைத் திருப்பும் பொருட்டுச் செய்த உபாத்தியாயர் முயற்சிகள் பயன் படாமற் போயின.

அந்தச் செய்தி மெள்ளமெள்ள இரணியனுக்குத் தெரிந்தது. அவன் புத்திரனை நோக்கிக், "குழந்தாய்! நீ விஷ்ணுவின் பெயரை உச்சரியாதே; அவர் நம் குலத்துக்குப் பகைவர்; அதிக பராக்கிரம சாலியான உன் சிறிய தந்தையை அவர் அழி

யாயமாகக் கொலை செய்திருக்கிறார்; அதனுற்றான் எவரும் அவர் பெயரை உச்சரிக்கலாகா தென்றும், அவர் பொருட்டு வேள்வி செய்யலாகா தென்றும், கண்டிப்பாய்க் கட்டளை யிட்டிருக்கிறேன்; இப்பொழுது நாட்டில் நடக்கும் எல்லாச் சடங்குகளையும் நானே திவ்வியவடிவம் பெற்று அடைந்துவரு கிறேன்; நீயும் அதனைப் பின்பற்றி நட" என்று கூறினன். பிரஹ்லாதன் அவ்வுபதேசத்தை அங்கீகரியாமல் முன்னர்ப் போலவே நடந்து வந்தான்.

அப்புறம், இரணியன் அவனுக்குப் பல வகையான தண் டனைகளை விதித்தான். பிரஹ்லாதன் கடவுள் கருணையினல் எல்லாவற்றையும் எளிதில் நீக்கிக்கொண்டு விட்டான். உலகம் யாவும் தன் கட்டளைக்கு அடங்கி வரும்பொழுது தன் வயிற் றிற் பிறந்த சிறுவன் ஒருவன்மாத்திரம் அதனை அலக்ஷியம் செய்து, பகைவன் பெயரைத் தன்னெதிரிலேயே உச்சரித்து வருவதும், அவனை அடக்கத் தன்னல் சிறிதும் முடியாதிருப்ப தும், இரணியனுக்கு அவமானமா யிருந்தன.

அவன் ஒரு நாள் மனம் புழுங்கிப் புத்திரனை நோக்கித், "துஷ்டச் சிறுவனே! உன் அக்கிரமங்களைப் பொறுக்க முடிய வில்லை; நான் எல்லா வுலகத்திலும் கடவுள்போலப் பிரகாசிக் கிறேன்; நான் இரண்டு தடவை வைகுண்டம் சென்றும் உன் கடவுள் ஓடிச்சென்று, ஒளிந்துகொண்டு விட்டான்; எதிர்த்தி ருந்தால், இரண்டு துண்டம் செய்திருப்பேன்; எதிரில் வரப் பயந்து, மறைந்து திரிகின்ற அந்தத் திருடன் உன்னைத் தூண்டி வருவது ஆச்சரியமா யிருக்கின்றது; உன்னல் எனக்கு அவ மானம் அதிகரிக்கின்றது; இஷ்டமிருந்தால், கட்டளைக்குக் கீழ்ப்படி; இல்லாவிட்டால், பகைவனையாவது காட்டிக்கொடு;" என்று சொன்னன்.

பிரஹ்லாதன் "தந்தையே! ஒரு மகன் தந்தைக்குச் செய்யும்படியான மரியாதைகளை நான் தங்களுக்குச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறேன்; ஆனால், தங்களையே கடவுளாகக் கொள்வது முடியாத காரியம்; தந்தை மரியாதை வேறு; கடவுள் மரியாதை வேறு; தாங்கள் இரண்டையும் ஒன்று படுத்தப் பார்க்கிறீர்கள்; இனிக், கடவுளைத் தாங்கள் நினைத்தவிடத்திற் காணலாம்; அவர் எல்லாவற்றிலும் விளங்கி வருகின்றார்" என்றான். இரணியன் கோபம் கொண்டு, எதிரிலிருந்த ஒரு கற்றூணைக் காட்டி, "இதில் உன் கடவுளைக் காண்பிக்க முடியுமா?" என்று கேட்டான். பிரஹ்லாதன் 'பரிக்ஷித்துப் பாருங்கள்; கட்டாயம் காணப்படுவார்" என்றான்.

உடனே இரணியன் தனது வெற்றி வாளினால் கற்றூணைத் தாக்கினான். அதிலிருந்து ஸ்ரீ மகாவிஷ்ணு உக்கிர நரசிங்க வடிவமாக வெளிப்பட்டு வந்தார். இரணியன் "திருடா; இனியுன்னை உயிருடன் விடேன்; சௌரியமிருந்தால், சண்டை செய்யவா! சகோதரனைக் கொன்ற பழியைத் தீர்த்துக்கொள்கிறேன்" என்று, அவருடன் வாட்போர் செய்யத் தொடங்கினான். பிரஹ்லாதன் "தந்தையே! கடவுளுடன் சண்டை செய்யவேண்டாம்; வணங்கி வழிபடப் பாருங்கள்" என்று பரிதாபத்தோடு வேண்டினான். அசுர மன்னவன் அதனை அங்கீகரிக்கவில்லை. அவன் "பராக்கிரமமுள்ளவர் பகைவனை வணங்கி வழிபடமாட்டார்கள்; இவன் இரண்டு தடவை ஒளிந்துகொண்டிருக்கிறான்; இப்பொழுது என் வாளுக்கு இரையாக வேண்டியதுதான்; இருவரில் ஒருவர்தாம் உலகத்தில் இருக்கவேண்டும்; சக்தி யிருந்தால், வெற்றி கொள்ளட்டும்" என்று சொல்லி, அவருடன் ஒருநாள் முழுவதும் கடும்போர் புரிந்து, முடிவில்

இறந்து போனான். ஆதலால், மானமுள்ள சூரர்கள் பகைவனை வணங்கி வாழ்வதைக் காட்டிலும், அவனுடன் சண்டை செய்து மடிவதையே சிலாக்கியமென்று கொள்வார்கள். —பாகவதம்.

உற்ற விடத்தி லுயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

---

8. ஒட்டக்கூத்தன் பாட்டுச்சொன்னது

ஔவை யென்ற மூதாட்டியைத் தமிழுலகத்தில் தெரியாதவர் இரார். பண்டிதர் பாமரர் முதலிய பலரும் ஔவையின் பெருமையை அறிந்தே யிருக்கிறார்கள். தமிழ் நாட்டு மன்னவர் மூவரும் ஔவையினிடத்தில் அபிமானம் பூண்டு, " இன்னும் சிலநாள் இருந்து செல்லுங்கள்; இன்னும் சிலநாள் இருந்து செல்லுங்கள் " என்று வேண்டிக் கொள்வார்கள். ஔவை ஒருவரிடத்திலும் இருப்பதில்லை. அவள் ஏழை எளியவர் என்று எண்ணம் கொள்ளாமல், எல்லாரிடத்திலும் தாராளமாக உறவு கொண்டாடுவாள். தனக்கு அரசர் தருகின்ற பரிசில்களை யெல்லாம் அண்டினவர்களுக்கு அன்புடன் அளித்து ஆதரவு காட்டுவாள். உலகப்பற்றைத் துறந்த உத்தம சந்நியாசியைப் போல ஔவை ஒன்றிலும் ஒட்டாமல் தமிழ் நாட்டில் சஞ்சரித்து வந்தாள். ஆனால், புலவர் செருக்கை அடக்குவதில் மாத்திரம் அவள் சிறிதும் தாக்ஷண்யம் பார்ப்பதில்லை. எல்லாப் புலவர்களையும் நிமிஷத்தில் அடக்கி, நேர் வழியில் நடக்கச் செய்துவிடுவாள். ஔவை வந்தாள் என்றால், புலவர் யாவரும் புலியின் வரவைக்கண்ட புல்வாய்க் கூட்டம் போல அடங்கிப் போவார்கள்.

முன்னர் உறையூர்ப் பட்டணத்தில் இருந்த குமார குலோத்துங்கன் சபையில், கம்பர் புகழேந்தி முதலான தமிழ்ப் புலவர்கள் பிரபலமா யிருந்தார்கள். ஒரு சமயத்தில் ஔவை உறையூருக்குச் சென்ருள். மன்னவன் அந்தப் பண்டிதைக்கு மரியாதை செய்து, தன் அரண்மனையில் சிலநாள் தங்கிப்போக வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். புலவர் பெருமாட்டி யும் இருக்க வொப்புக் கொண்டனள். ஒவ்வொரு நாளும் புலவர்கள் இராஜசபைக்குச் செல்வது வழக்கம். ஔவை அங் குள்ள அனைவரிலும் அறிவிலும் வயதிலும் உயர்ந்தவளாதலால், அவள் காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பாள். அவள் சில புலவர்க்கு மரியாதை செய்வது முண்டு. அது விநோதமா யிருக்கும். எப்படி யென்ருல், கம்பருக்கு இரண்டு கால்களை யும் மடக்குவாள். புகழேந்திக்கும் அரசனுக்கும் ஒற்றைக் காலை மடக்குவாள். ஒட்டக்கூத்தன் வந்தால், இரண்டு கால்க ளையும் நீட்டிக்கொண்டு விடுவாள்.

இந்த மரியாதை ஒட்டக்கூத்தனுக்குச் சம்மதமில்லை. அவன் அரசனுக்கு ஆசிரியன். சபையில் செல்வாக்குப் பெற்ற வன். கல்வியை அதிகம் கற்றுவிட்டதாகக் கருவம் கொண்டி ருப்பவன். தன்னை அவமானப்படுத்தும் பொருட்டாகவே ஔவை அங்ஙனம் செய்கிருளென்று அவன் தீர்மானித்துக் கொண்டான். 'ஏன் அப்படிச் செய்கிரு' யென்று, ஔவை யை நெருங்கிக் கேட்பதற்கு, நெஞ்சம் துணியவில்லை. எல்லா ருக்கும் எதிரில் ஔவை எடுத்துக் கவிழ்த்துவிடுவா ளென்று, அவனுக்குத் தெரியும். கூத்தன் அரசனைத் தனக்குக் கொள் கொம்பாகக் கருதிக், குறை கூறிக்கொண்டான்.

அரசன் ஒரு நாள் ஔவை மூதாட்டியோடு அளவளாவி யிருக்கும்பொழுது " தாயே! கூத்தர் தங்கள்மீது குறைசொல்

லுகின்றனர்; புகழேந்திப் புலவரைக் காட்டிலும் தாங்கள் கூத்தரைத் தாழ்த்துகின்றீர்களாம்; அதன் காரணத்தை அவருக்கு விளங்கச் செய்யுங்கள்'' என்று கூறினன். ஔவை சிரித்துக்கொண்டு 'அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிவிட்டாள்.

மன்னவன் மறுநாள் சபைக்குச் சென்று, சிங்காசனத்தில் அமர்ந்தான். புலவர்கள் வழக்கம்போல வந்து வீற்றிருந்தார்கள். பழைய காலங்களில் அரசர்கள் அன்றாடம் நியாய விசாரணை முடிந்த பிற்பாடு, சற்றுநேரம் வரையில் பண்டிதர்களைச் சாஸ்திரவாதம் செய்யச் சொல்வார்கள். அதன் பயன் பாஷையிலும் நூல்களிலும் தாங்கள் பழகிக்கொள்ளவேண்டும் என்பதுதான். கற்றலிற் கேட்டலே நன்று. அரச காரியங்களில் அலுப்புண்ட மனத்துக்கு அவர்கள் சம்பாஷணை ஆறுதலைத் தரும்.

அப்பொழுது ஔவை ஒட்டக்கூத்தரை நோக்கிப், 'புலவரே! கடைசியடியில் சந்திரன் பெயர்களில் ஒன்றைப் பொருள் வேறுபாட்டோடு மூன்று தடவை வரும்படி ஒரு செய்யுள் சொல்லுங்கள்' என்றாள். கூத்தர் உடனே,

"வெள்ளத் தடங்காச் சினவாளை வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்கும் சோணாடா!
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா! அண்டர் கோபாலா!
பிள்ளைமதிகண் டெம்பேதை பெரிய மதியு மிழந்தாளே."

என்று கடைசி யடியில் இரண்டு சந்திரன் வரப் பாடினர். ஔவை அதனைக் கேட்டுச் சிரித்து, 'ஒட்டா ஒருமதி கெட்டாய்' என்று இகழ்ந்து சொல்லிப், புகழேந்திப் புலவரைப் பார்த்து, 'நீங்கள் ஒன்று சொல்லுங்கள்' என்றாள்.

புகழேந்தி,

"பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததெனச்
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியும் தமிழ் நாடா!
கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே! ராஜகுல திலகா!
வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே."

என்று சரியாய்ச் சொல்லி முடித்தார்.

பின்னர் ஔவை "கூத்தரே! ஒவ்வொருவருக்கும் கற்றவற்றிற்குத் தக்கபடி அறிவு அமைகின்றது; சட்டியில் உள்ளதுதான் அகப்பைக்கும் கிடைக்கும்; இப்பொழுதாவது புகழேந்திப் புலவருக்கும் தங்களுக்கு முள்ள ஏற்றத் தாழ்வுகளை எளிதில் உணர்ந்து கொள்ளுங்கள்; இனி அரசரிடத்தில் குறை சொல்ல மாட்டீர்களல்லவா!" என்று எல்லாருக்கும் எதிரில் ஏளனம் பண்ணினள். ஒட்டக்கூத்தர் 'அந்தோ! தெரியாதவர்க்கும் தெரியச் செய்துவிட்டாளே' யென்று உள்ளம்வருந்தி, ஒன்றும் தோன்றாமல் எழுந்துபோய் விட்டார். ஆதலால், ஒருவன் அறிவு அவன் கற்ற கல்வியின் அளவாகவே யிருக்கும் என்பது வெளிப்படை. **விநோதரச மஞ்சரி.**

**நீரளவே யாகுமாம் நீராம்பல்; தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு.**

---

9. இராமன் மனைவியை யிழந்தது

அயோத்திக் கரசரும் உலகத்துக்குச் சக்ரவர்த்தியுமான தசரத மன்னவருக்கு இராமன் முதலான நான்கு பிள்ளைகள்

பிறந்தார்கள். அவர்களில் இராமன் உத்தம குணங்களுக்கு உறைவிட மானவன். பார்த்தவர் விரும்பும் பேரழகு பொருந் தினவன். அவனுக்குச் சமமான பராக்கிரம முள்ளவர் இல்லை. கம்பீர ஸ்வபாவமுடைய அவன் தன் சிறு பருவத்தில் வசிஷ்ட ரிடத்தில் வேதங்களையும் கலைஞானங்களையும் கற்றான். அவ னுக்கு வசிஷ்டரும் விசுவாமித்திரரும் வில்லாசிரியர்கள்.

அவன் தனது பதினைந்தாம் பருவத்திலேயே தாடகை யென்ற அரக்கியைக் கொன்று, விசுவாமித்திரர் வேள்வியைக் காப்பாற்றினான். மிதிலைப் பட்டணத்தில் பிற வரசர்களால் வளைக்க முடியாததான சிவபெருமானது பெரிய வில்லை முரித்து, ஜானகியைக் கைப்பற்றினான். இருபத்தொரு தலை முறை வரையில் சூரிய வம்சத் தரசர்களைத் தொலைத்து, அவர் கள் உதிரத்தில் தர்ப்பணம் செய்தவரும், திருமாலின் அவ தாரமுமான பரசுராமரை வெற்றிகொண்டு, அவர் தவங்களைக் காணிக்கையாகப் பெற்றான். முடிவாய்ச் சொல்வோமானால், இராமன் எல்லா வுயிர்க்கும் காட்சிக் கினியனும், கேள்விக் கினியனுமா யிருந்தான்.

அப்படிப்பட்ட விராமனுக்குத் தசரதர் மகுடாபிஷேகம் செய்ய முகூர்த்தம் நிச்சயித்தார். அயோத்திப் பட்டணம் முழுவதும் அழகாகச் சிங்காரிக்கப்பட் டிருந்தது. ஜனங்கள் மாடங்களிலும் மேடைகளிலும் நின்றுகொண்டு பட்டத்து யானைமீது பவனி வரவிருக்கும் புதியவரசன் வருகையை ஆவ லுடன் எதிர்பார்த் திருந்தார்கள். விதேச மன்னவர்களும், படைவீரர்களும், யானை குதிரை முதலான வாகனங்களின்மீது வரிசை வரிசையாக வந்துகொண் டிருந்தார்கள். வேதமந்திர வொலியும், வாத்திய கீதவொலியும், மிக்கெழுந்து பரவின. முகூர்த்த காலமும் நெருங்கி வந்தது.

அப்பொழுது இராமன் எவரும் எப்பொழுதும் எதிர் பாராத விதமாக மரவுரி யாடையும், சடைமுடி வேடமும் பூண்டு, வில்லேந்திய கரத்துடன் அரண்மனையை விட்டு வெளிப் பட்டு வந்தான். அவன் மனைவி வைதேகி தவப் பெண்ணைப் போலத் தாழ்ந்த வேஷம் தரித்துத், தலைவனைப் பின்பற்றினாள். இராமனைப் போலவே இலக்ஷ்மணன் என்ற சகோதரனும் தவக் கோலங் கொண்டு தமையனைத் தொடர்ந்து நின்றான். பட்டத்து யானையின்மீது பவனி வரவேண்டிய ராஜவீதியில் இராமன் மனைவியும் சகோதரனும் தொடரக், காலால் நடந்து கானகம் சென்றான். வசிஷ்டரால் நிச்சயிக்கப்பட்டிருந்த அவன் மகுடாபிஷேக முகூர்த்தமானது வனவாச முகூர்த்தமாக நிமிஷத்தில் மாறிப் போயிற்று. அந்தோ! அந்தப் பெருநகரில் அவன் செலவுக்கு வருந்திக், கண்ணீர் வடியாதவர் இல்லை. அவன் பதினான்கு வருஷம் வரையில் வனத்தில் வாசம் செய்து வரும்படி தாய் தந்தைகளால் கட்டளை பெற்றுக் கானகம் போய்ச் சேர்ந்தான்.

அவன் விதி அதனுடனும் அடங்கவில்லை. வனத்தில் வசித்து வருகையில் இலங்கைத் தீவுக் கரசனாகிய இராவணன் என்ற கொடுங் கோலரசன் அவ் வீராதி வீரனுடைய அருமை மனைவியைத் தூக்கிச் சென்றுவிட்டான். அந்தக் கொடிய வனத்தில் இராமன் தன்னை ஆற்றுவா ரில்லாமல் வருந்தியும், தன் பெருந்தன்மை முதலியவற்றைப் போக்கிப் புலம்பியும், தனக்கு உதவி செய்வதற்கு மனித வர்க்கத்தில் ஒருவரும் நேரப் பெறாமல், குரங்குகளோடு பழகியும், மனைவியைக் கண்டு பிடிக்க அந்தக் குரங்குகளை யேவியும், வருத்தப்பட்டுக் கலங்கினான். முடிவில், அந்தப் புன்குரங்குகளையே படைகளாய்த் திரட்டிக்கொண்டு, கடலில் அணைகட்டி இலங்கைக்குச் சென்று,

இராவணனைக் கொன்ற பிற்பாடுதான் இராமனுக்கு மனைவியை அடைய லாயிற்று. இலங்கைப் பட்டினத்தில் இராமன் அடைந்த கஷ்டங்களைச் சொல்லி முடியாது. ஆதலால், உலகத்தில் யாவரா யிருந்தாலும் ஊழ்வினை அநுபவித்தே தீர வேண்டும்.

—இராமயணம்.

1 ....மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்.

2 ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலில்
நாழி முகவாது நானாழி—தோழீ!
நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்.

---

10. வண்ணார மந்திரி

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வங்க தேசத்தில் விக்கிரமகேது வென்று ஒரு அரசகுமார னிருந்தான். அவன் தன் பாலியப் பருவத்தில் அழகில் மிகுந்த ஒரு வண்ணாரச் சிறுவனோடு நட்புப் பூண்டு வந்தான். அச்சிறுவன் இழிகுலமென்றும், அவன் நட்பு அல்லலை விளைக்குமென்றும், அமைச்சர்கள் சொல்லியுங்கூட அரசகுமாரன் பொருள் பண்ணாமற் போனான். வயது வளர வளர, மன்னவன் மகனுக்கு வண்ணாரச் சிறுவன் நட்பு விடக்கூடாமற் போயிற்று. அந்தச் சிறுவன் சமயம் நேர்ந்தபோதெலலாம் அமைச்சர் முதலானவர்களைப் பற்றி அரச குமாரனிடத்தில் கோள் சொல்லிக் கொண்டிருந்தான்.

அப்புறம், அரச குமாரனுக்கு அரசாட்சி உரிமையாயிற்று. தன் நண்பனை நன்னிலைமையில் நிறுத்தும் பொருட்டு அவ்வேகாலிச் சிறுவனுக்கு அமைச்சுத் தொழில் அளித்து

ஆதரவு காட்டி வந்தான். அதனுல், அறிவிலும் அநுபவத்திலும் உயர்ந்த பழைய வமைச்சர்கள் வேலையைவிட்டு விலகிப் போனுர்கள். அவர்கள் பதவிகளைக் குலம் அறிவு ஒழுக்கம் முதலியவற்றில் கீழ்ப்பட்ட கசடர்கள் வந்து கைக்கொண்டு விளங்கினுர்கள். விக்கிரமகேது அரச காரியங்களை யெல்லாம் புதிய வமைச்சர் தலையில் ஒப்புவித்துவிட்டு, அரச சுகத்தில் அமிழ்ந்தி ஆடிக் களித்து வந்தான்.

அரச காரியம் யாவும் முறைமை கெட்டுத் தடுமாறிப் போயின. அவன் அரசின் அலங்கோலங்களை அடுத்த நாட்டரசர்கள் அறிந்து கொண்டுவிட்டார்கள். சதுரர்கள் சமயத்தை நழுவ விடார்களன்றே! அவர்கள் அனைவரும் கலிங்கப் பட்டணத்தை முற்றுகை யிட்டார்கள். ஏற்கெனவே புதிய வமைச்சர்கள் படைச் செலவின் அதிகத்தை நினைந்து, சைனியங்களைக் கலைத்துவிட் டிருந்தபடியினுல், சண்டை செய்வதற்குரிய முயற்சிகளில் ஒன்றும் செய்யப்பட வில்லை.

அரசன் 'பகைவர்களை வெல்ல என்ன வாலோசனை பண்ணுகின்றனை?' யென்று புதிய மந்திரியைக் கேட்டான். ஏகாலியமைச்சன் "மகாராஜாவே! தாங்கள் கவலையுற வேண்டாம்; நான் பார்த்துக்கொள்கிறேன்; தாங்கள் அந்தப்புரம் செல்லுங்கள்'' என்று சொல்லிவிட்டான். அன்று முழுவதும் எதிர்க்கும் முயற்சி யொன்றும் இல்லாமற் போகவே பகைவர்கள் மறுநாள் பட்டணத்தில் பிரவேசித்துவிட்டார்கள்.

அரசன் அமைச்சனை யழைத்துப் 'பகைவர் பட்டணத்துக்குள் புகுந்து விட்டார்களே; அவர்களை வெல்ல, என்ன வாலோசனை செய்திருக்கின்றனை? சீக்கிரம் சொல்' என்று கேட்டான். வண்ணர மந்திரி, "பிரபுக்களே! தீர்மானம் செய்துவிட்டேன்; அரசு செய்வதில் ஆபத்துக்கள் அதிகமாகின்றன;

என்ன வருமோ என்ன வருமோவென்று, இரவும் பகலும் எண்ணமிட்டு வருந்த வேண்டி யிருக்கின்றது; ஆபத்தில்லாத சாப்பாடு அரைவயிற்றுக்கும் போதும்; அரசாட்சியின் கஷ்டங்களைப் பகைவர்களே அநுபவித்துக் கொள்ளட்டும்; அவை நமக்கு வேண்டியதே யில்லை; முன்னர் என் றந்தை இந்தப் பட்டணத்தில் நூறு வீடுகளுக்குச் சலவை செய்து கொடுத்து ஜீவனம் பண்ணிவந்தார்; அதில் சரிபாதியைத் தங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்; அந்தத் தொழிலில் உபத்திரவம் உண்டாகாது; மனக்கவலை யில்லாமல் வாழ்ந்துவரலாம்" என்று சொன்னான்.

அந்த மூட வரசனுக்கு அப்பொழுதுதான் உணர்ச்சி யுண்டாயிற்று. இடி விழுந்தவன்போல அப்படியே ஏங்கிப் போய்விட்டான். ஆயினும் என்ன செய்யலாம்? காரியம் மிஞ்சிப் போயிற்று. 'மடையா! என்னை அநியாயமாய்க் கெடுத்து விட்டாயே' யென்று, முகத்தில் அறைந்துகொண்டும், தலைமயிரைப் பிய்த்துக்கொண்டும், ஒன்றும் தோன்றாமல் வருந்தினான். தடை செய்கின்றவர் இல்லாமற் போகவே, படைவீரர்கள் அரண்மனையிற் புகுந்து அரசனைச் சிறை செய்துவிட்டார்கள். குலத்துக்கும் தொழிலுக்கும் தகுந்தவாறுதான் குணமும் அறிவும் உண்டாகுமென்று, இதனால் வெளியாகின்றதல்லவா!

—கதாரத்நாவலி.

குலத்தளவே யாகும் குணம்.

---

11. யயாதி சுவர்க்கம் சென்றது

ஒரு சமயத்தில் இந்திரன் சுவர்க்கத்தில் கொலுக் கொண்டிருந்தான். அந்தச் சபையில் எல்லாப் புண்ணிய புருஷர்களும் திரண்டிருந்தார்கள். அரம்பை, மேனகை, ஊர்வசி முதல

லான: தெய்வப் பெண்கள் ஆடல் பாடல் முதலியவற்றில் தங்கள் சாமர்த்தியங்களைக் காட்டிச், சபையைக் களிப்பித்தார்கள். அப்பொழுது கண்கள் கூசும்படியான காந்தியோடு கூடின யயாதி மன்னவர் வந்து சேர்ந்தார். அவர் சந்திர வம்ச சக்ரவர்த்தி. அம்மன்னவர் உயர்ந்த வேள்விகளையும், சிறந்த தருமங்களையும் உலகத்திற் செய்து, அவற்றின் பயனால் தெய்வ லோகம் சென்று, நெடுங்காலம் வரையில் தெய்வ சுகங்களை அநுபவித்துக் கொண்டிருந்தார். இந்திரன் ஆசனம் விட்டெழுந்து, அவருக்கு மரியாதை செய்து, அருகில் அமரப் பண்ணினான். சபை நடந்துகொண் டிருந்தது.

சற்று நேரம் கழித்து, இந்திரன் அருகில் இருந்த அந்த யயாதி மன்னவரை நோக்கி, 'அரசர் தலைவரே! தவத்திலும் புண்ணியத்திலும் தங்களுக்குச் சமானம் யாவர்? உண்மையைச் சொல்லுங்கள்' என்று கேட்டான். யயாதி யரசர் 'தேவர்க்கரசனே! தவத்திலும் புண்ணியத்திலும் நான் தேவர்களையும் மனிதர்களையும் மிஞ்சி யிருக்கிறேன்; சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்ற மூன்று உலகங்களிலும், எனக்குச் சரியானவர் இல்லை; இப்பொழுது நான்தான் அனைவரிலும் உயர்ந்தவன்' என்று சற்றுக் கருவமாய்க் கூறினார். இந்திரன் அதற்குக் கோபித்துக்கொண்டு, 'ராஜரிஷியே, இந்தப் பெரிய சபையில் அடக்க மில்லாமல் தங்களைப் புகழ்ந்து கொண்ட குற்றத்தினால் தெய்வ சபைகளில் இனித் தாங்கள் இருக்கத் தகாது; நிலத்திற்குச் செல்லுங்கள் என்று சொல்லிவிட்டான்.

அப்பொழுது யயாதி இந்திரனை நோக்கிப், 'பெருமையுள்ளவனே! என்னை நல்லவர்களுக்கு நடுவில் இருக்கச் செய்; நான் வேண்டும் வரம் அந்த ஒன்றே யொன்றுதான்' என்று கேட்டுக் கொண்டார். இந்திரன் 'அவ்வண்ணமே யாகட்டும்' என்று

கூறினன். அப்புறம் யயாதி, வனத்தில் தவம் செய்து கொண்டிருந்த அஷ்டகன் முதலான நான்கு முனிவர்களிடம் வந்து சேர்ந்தார். அம்முனிவர்கள் தங்கள் ஆச்சிரமத்தில் அவர் தங்கியிருக்க இடம் கொடுத்து, ஆதரித்தார்கள். யயாதி மன்னவர் அம்முனிவர்களைப் பிரியாமல் இருந்து, அவர்கள் தம்மைக் கேட்ட தரும சந்தேகங்களுக் கெல்லாம் தக்கவாறு விடை சொல்லி, நட்புப் பூண்டிருந்தார்.

சில காலத்துக்குப் பிற்பாடு, இந்திரன் அஷ்டகன் முதலான அந்நான்கு முனிவர்களையும் அழைத்து வரும்படி தெய்வ விமானத்தை அனுப்பினன். அம்முனிவர்கள் 'யயாதி மன்னவர் இல்லாமல் நாங்கள் மாத்திரம் சுவர்க்கத்துக்கு வர மாட்டோம்' என்று சொல்லி, யயாதி மன்னவருக்குத் தங்கள் தவத்தில் ஒரு பாகத்தைக் கொடுத்துப், புண்ணிய புருஷராக்கி, அவரையும் சுவர்க்கத்துக்கு அழைத்துக்கொண்டு போனர்கள். ஆதலால், ஒருவனுக்குப் பெரியவர் பழக்கம் வீண்போகமாட்டாது. —மகாபாரதம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

12. கர்ணனும் துரியோதனனும்

முன்னர்ச் சூரியனுக்குக் கர்ணன் என்று ஒரு புத்திரன் இருந்தான். அவன் குந்திதேவியின் வயிற்றில் பிறந்தவன். திருதராஷ்டிரன் தேர்ப்பாகனகிய ராதன் என்பவன் அவனை எடுத்து வளர்த்தான். கர்ணன் கல்வியைக் கசடறக் கற்றவன். தரும சாஸ்திரங்களைச் சந்தேக மின்றித் தெரிந்தவன். தனுர்

வேதத்தைத் தெளிவாக்கி யுண்டவன். பெரியவர்களுக்குப் பணிவிடை புரிந்தவன். இரப்பவர்களுக்கு இல்லை யென்னுமல் ஈபவன்.

இவ்வளவு பெருமைக்கும் உறைவிடமாகிய கர்ணன் பழ வினை வசத்தினால் துரியோதனனை நட்புக் கொள்ள நேர்ந்தது. வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும், ஒரு வர்க்கொருவர் ஒத்தாசை செய்துகொள்வ தென்று நெருப் பின் முன்னிலையில் இருவரும் நட்புப் பூண்டார்கள். பகலும் இரவும் போலக் கர்ணனும் துரியோதனனும் மாறுபாடான குணம் கொண்டவர்கள். துரியோதனன் அதருமத்தின் அவ தாரம். பேராசை பொறாமை முதலான துர்க்குணங்களின் பிறப்பிடம். அவன் பாவ காரியங்களில் ஒன்றையாவது பாக்கி யில் வைக்கவில்லை. திருத்தமும் அழுத்தமுமாக எல்லாவற் றையும் செய்தே தீர்த்துவிட்டான்.

தொடக்கத்தில் துரியோதனன் குடில வெண்ணங்கள் கர்ணனுக்குத் தெரியாமல் இருந்தன. பழக்கம் அதிகமாக வாகக், கொஞ்சம் கொஞ்சமாக அவை வெளிப்படத் தொடங் கின. தெரிந்தோ தெரியாமலோ சத்தியம் செய்து கொடுத்து விட்டான். அப்புறம் மாறுபடுவது முடியாத காரிய மல்லவா! கர்ணனுக்குக் கல்வி ஒழுக்கம் முதலியவற்றிற் கிடைக்கின்ற கீர்த்தி யென்னும் கிளர்கடற் பரப்பைத், துரியோதனன் வட வைக் கனலாகி வற்றச் செய்து வந்தான். துரியோதனன் தன்னை ஆலோசனை கேட்கவரும் சமயங்களி லெல்லாம் 'நண்பனே! பாண்டவர்களையும் பெரியவர்களையும் பகைப்பது பாவகாரிய மாகும்; சண்டையில் வெல்வதுதான் க்ஷத்திரியர் தருமம்; இன்னமும் சண்டை முன்னிலையில் உண்டாகும் வெற்றியே ஸ்திரமான வெற்றியாகும்; மற்ற சாமம் பேதம் தான மென்ற

மூன்று உபாயங்களினும் உண்டாகின்ற வெற்றிகள் சமயங்களை நினைந்து செய்யப்படுவன வாதலால், மாறுந்தன்மையை யுடையன. இனி உன் இஷ்டம்.' என்று சொல்லிவிடுவான். அவன் பெருந்தன்மையும் பேரறிவும் பலரும் விரும்பத்தக்கன.

ஒரு சமயத்தில் கண்ணன் பாண்டவர்களின் பொருட்டுத் துரியோதனன் சபைக்குத் தூது வந்திருந்தார். அப்பொழுது துரியோதனன் 'கண்ணனுக்கு என் கட்டளை யில்லாமல், எவரும் எழுந்து மரியாதை செய்யக்கூடா தென்று, கட்டளை யிட்டிருந்தான். பீஷ்மர் துரோணர் முதலான பெரியவர்கள் அவன் கட்டளையைப் பொருள் பண்ணவில்லை. கண்ணன் சபையில் நுழைந்ததும், அவர்கள் ஆசனம் விட்டெழுந்து, மரியாதை பண்ணினர்கள். கர்ணன் தானும் எழுந்து அங்ஙனம் செய்ய நினைந்தான். ஆயினும், முடியவில்லை. அவன் துரியோதனன் கட்டளைக்கு அடங்கவேண்டிய தாயிற்று. அப்பொழுது அவன் பட்ட வருத்தத்தைப் பகரத் தரம் அன்று. 'அகில காரணராகிய கடவுள் வலுவில் வந்து தரிசனம் தந்தும் கூட, வழிபட முடியாமற் போய்விட்டதே' யென்று, பலவிதமாக வருந்திக் கண்ணீ ருதிர்த்தான்.

நாட்டில் உள்ளவர் துரியோதனனைத் தூஷிக்கும்பொழுது கர்ணனையும் கூட்டிக்கொள்வது வழக்கம். துரியோதனன், கர்ணன் சகுனி துச்சாதனன் என்ற நால்வருக்கும்தாம் துஷ்ட சதுஷ்டர் என்று பெயர். துரியோதனன் சகவாசத்தினல் கர்ணன் அடைந்த பலன், பழிப்பும் அவமானமும் பாபமுமே யாகும். துரியோதனனை நட்புக்கொள்ள நேர்ந்ததே யென்று, அவன் எத்தனையோ சமயங்களில் கண்ணீர் விட்டுக் கதறியும் புலம்பி யிருக்கிறுன்.

மற்றொரு சமயத்தில் அவன் குந்திதேவியுடன் சம்பாஷிக்க

நேர்ந்தது. அப்பொழுது கர்ணன் "அன்னையே! துரியோதனன் சண்டையில் அனைவரையும் மடிவித்துத், தானும் மடியப் போகிறான்; அக்கிரமம் செய்பவனுக்கு வெற்றி கிடைக்காது; பழவினை முதிர்ச்சியினால் அவனுடன் நட்புப் பூண்டு விட்டேன்; நான் இத்தனை நாளும் அவன் செல்வங்களைச் சொந்தமாக அநுபவித்துவிட்டு, ஆபத்துச் சமயத்தில் பிரிந்துசெல்வது பெரும் பாபமாகும்; பாண்டவர்களின் சகோதரனென்ற பெருமையை எண்ணியாவது நான் சமரில் அவனுக்குச் சகாயம் செய்யவேண்டாமா? பாண்டவர்கள் பணிவிடை செய்யும்படியான பாக்கியத்தை மகாபாபியாகிய நான் பெற்றிருக்கவில்லை; தாங்கள் சென்று வாருங்கள்" என்று சொல்லியிருக்கிறான். முடிவில், கர்ணன் துரியோதனன்பொருட்டு அவமானம் பழிப்பு முதலியவற்றை உரிமையாக்கிக்கொண்டு சமரில் மரணமடைந்து போனான். இதனால், அற்ப சகவாசம் எப்பொழுதும் ஆபத்தையே உண்டுபண்ணுமென்பது வெளிப்படையாகின்றது.

—மகாபாரதம்.

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் தீது.

---

13. கலைக்கோட்டுமுனிவரும் மழையும்

முன்னொரு காலத்தில் அங்கதேசத்தில் உரோமபாதன் என்று ஒரு உயர்ந்த வரசன் இருந்தான். அவன் நீதிநெறி வழுவாமல் ஆறிலொரு கடமை பெற்றுக், குடிகளைக் காப்பாற்றி வந்தான். அவன் நாட்டில் ஆச்சிரம தருமங்களும், சமயப் பயிர்களும், செழித்து வளர்ந்தன. சில வருஷங்களுக்குப்

பிற்பாடு யார் செய்த தவக் குறையினலோ அங்க நாட்டில் மழை வளம் குறைந்தது. கொடிய பஞ்சம் கடுகிப் பரவிற்று. நாளடைவில் அந்தப் பஞ்சம் தொத்து நோயைப்போலப் பரவி, உயிர்களை வருத்தி உபத்திரவிக்கத் தொடங்கிற்று.

அரசன் அதன்பொருட்டு வருந்தி, அந்தணரை அழைத்து, 'என்ன காரியம் செய்தால் பஞ்சம் தெளியு' மென்று கேட்டான். அந்தணர் "அண்ணலே! இது தங்கள் அநீதியாலும் எங்கள் ஒழுக்க மின்மையாலும் உண்டான தன்று; ஜபம் பூஜை முதலியவை நியமம் தவருமல் நடந்து வருகின்றன; செய்யவேண்டியது ஒன்றே யொன்றுதான்; வனத்தில் விபாண்டகர் என்ற முனிவர்க்குக் கலைக்கோட்டு முனிவரென்று ஒரு புத்திரர் இருக்கிருர்; அவர் பிரமசரியத்தில் இருந்துகொண்டு வேதங்களையும் சாஸ்திரங்களையும் விதிப்படி அப்பியாசம் செய்தவர். அவர் தந்தையின் ஆச்சிரமத்தை யல்லாமல் வேருென்றையும் அறிந்ததே யில்லை; காமம் முதலிய கெட்ட விச்சைகள் அவர் மனத்தில் பதிவதில்லை; களங்கமற்ற பளிங்கு மணியைப் போல அவர் பரிசுத்தமாயிருந்து, தந்தைக்குப் பணிவிடை புரிகிருர்; அவர் இருக்கு மிடத்தில் மழைவளம் பெருகும்; அந்த முனிகுமாரர் நம் நாட்டுக்கு வந்தால், நம்மைப் பீடிக்கின்ற பஞ்சம் முதலியவை பறந்து மறைந்து போகும்; இது செய்யத்தக்கது;" என்று சொன்னுர்கள்.

அரசன் 'அவரை எப்படி யழைத்து வரலாம்?' என்று கேட்டான். அப்பொழுது சபையில் இருந்த நடனப் பெண்களில் இருவர் அரசனைப் பணிந்து, 'அண்ணலே! சமுகத்துக்கு ஆக்ஷேபணை இல்லாதிருக்குமாளுல், நாங்கள் சென்று அம் முனிவர் பெருமானை அழைத்து வருகிறேம்;' என்றுர்கள்.

அரசன் 'அப்படியே செய்யுங்கள்' என்று விடை கொடுத்தனுப்பினன்.

அந்தச் சுந்தரிகள் புருஷவேஷம் புனைந்து, தங்களை மறைத்துக்கொண்டு தபசிகளாகி, விபாண்டகர் வசிக்கின்ற வனத்துக்குப் பக்கத்தில் தங்களுக்கு ஒரு தழைக் குடிசையை அமைத்துக் கொண்டார்கள்.

அப்பெண்கள் பின்னர் ஒருநாள் ஆச்சிரமத்தில் தந்தை இல்லாத சமயம் பார்த்துவந்து, கலைக்கோட்டு முனிவரைக் கண்டார்கள். முனிகுமாரர் அதிதிபூஜை புரிந்து, தம்மிடத்துள்ள கனிகளையும் கிழங்குகளையும் அளித்துச், சற்று நேரம் வரையில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். போலித் தபசிகள் விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினர்கள். அவ்வதிதிகள் பார்த்தவர் விரும்பும்படியான பேரழகைப் பொருந்தியிருந்தபடியினல் முனிபுத்திரர் அவர்களைப் பிரிய மனம் வராமல், அடிக்கடி அவர் ஆச்சிரமம் சென்று சம்பாஷிக்கத் தொடங்கினர். அன்று முதல் அச்சிறுமிகள் கலைக்கோட்டு முனிவரைத் தாங்கள் சென்று கண்டும், அவரைத் தங்கள் இருப்பிடத்துக்கு அழைத்தும், மெள்ள மெள்ள வசப்படுத்திக் கொண்டார்கள் : இங்ஙனம் சில நாட்கள் சென்றன.

ஒரு சமயத்தில் அந்தச் சுந்தரிகள் "முனிவர் தலைவரே! நாங்கள் தந்தையின் ஆச்சிரமம் சென்று வரவேண்டும் ; அவர் தங்களை அழைத்து வரும்படி பலதடவை எங்களுக்குச் சொல்லி யனுப்பி யிருக்கிறார்; நாங்கள் தங்களை விட்டுச் செல்ல முடியாமல் வருத்த மடைகிறோம்; தாங்களும் வந்தால் சந்தோஷமாயிருக்கும் ; இரண்டொரு தினங்களில் திரும்பி வந்துவிடலாம்" என்று கூறினர்கள். முனி புத்திரருக்கும் அவர்களைப் பிரிவது வருத்தமா யிருந்தது. அதனல் 'அவர்களோடு சென்று

வருகிறேன்' என்று, விபாண்டகரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு போலித் தவசிகளைத் தொடர்ந்தார்.

சாமர்த்தியத்தில் மிகுந்த அந்தப் பொய் வேஷப் பெண்கள் அவருடன் அரசன் ரதத்தில் அமர்ந்து, மெள்ள மெள்ள அங்க தேசம் வந்து சேர்ந்தார்கள். கலைக்கோட்டு முனிவர் அந்தத் தேசத்தை அடைந்த மாத்திரத்தில் ஏழு மேகங்களும் ஆகாயத்தில் நிறைந்து, இடி மின்னல்களோடு பரவிச், சோவெனப் பொழிந்து வெள்ளம் பெருக்கிற்று. பின்னர் உரோமபாத மன்னவன் முனிவர் வரவை யுணர்ந்து, எதிர்சென்று உபசரணை செய்து, அரண்மனைக்கு அழைத்து வந்தான். அங்க தேசத்தின் பஞ்சம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்தது.

அப்புறம், அந்த உரோமபாத மன்னவன் கலைக்கோட்டு முனிவருக்கு அழகிலும் ஒழுக்கத்திலும் நிறைந்த தன் புத்திரி சாந்தை யென்பவளைக் கன்னிகாதானம் செய்து, மருமகனாக்கிக் கொண்டான். முனிவர் அரசன் வேண்டுதலின் வண்ணம் சாந்தையை மணம் புரிந்து அரண்மனையிற் றங்கி, அன்றுமுதல் அரச சுகங்களை அநுபவித்து வந்தார். ஆதலால், பெரியவர் இருக்குமிடங்களில் மழைவளம் பெருகுமென்பது இந்தக் கதையினால் வெளியாகின்றது. —இராமாயணம்.

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்— தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை.

---

14. கார்த்தவீரியன் அழிவு

முன்னர் ஹைஹய தேசத் தரசனான கிருதவீரியன் என்பவனுக்குக் கார்த்தவீரியன் என்று ஒரு புத்திரன் இருந்தான்.

அவன் தத்தாத்திரேய முனிவரைக் குருவாய்க் கொண்டு, அவர்க்குப் பணிவிடை செய்து வந்தான். ஒரு சமயத்தில் அம்முனிவர் அரசனைப் பாதம் பிடிக்கக் கட்டளையிட்டு, நித்திரை போய் விட்டார். கார்த்தவீரியன் முனிவர்க்கு இதமுண்டாகும்படி அவர் பாதங்களை மெதுவாகப் பிடித்துவருகையில் முனிவர் உள்ளங்காலில் இருந்த நெருப்பு அரசன் கரத்தைப் பற்றி யெரிக்கத் தொடங்கிற்று. கார்த்தவீரியன் அதனைப் பொருள் பண்ணுமல் எரிந்து வருகின்ற கரங்களினுலேயே அவர் பாதத்தைத் தடவிக்கொண் டிருந்தான். மூன்று நாட்கள் வரையில் முனிவர் தூக்கம் கலையவில்லை. அவர் எழுந்திருந்த பொழுது அரசன் கைகள் முழங்கைப் பூட்டுவரையிலும் வெந்து குறைந்துபோயிருந்தன.

முனிவர் அரசன் செயலில் மகிழ்ந்து, "நீ ஊண் உறக்கங்களைத் துறந்து, மெய்வருத்தத்தையும் பாராமற் செய்த பணிவிடை பாராட்டத் தக்கது ; நீ என் உள்ளங்கால்களைத் தொட்டிருக்கக் கூடாது; நான் எச்சரிக்கவும் மறந்துபோய்விட்டேன்; நீ என் பணிவிடையினுல் கரம் குறைந்து வருந்தி யிருக்கிருய்; அதன் பொருட்டுத் தருகின்ற என் வரத்தைக்கேள்; இன்று முதல் உனக்கு ஆயிரம் கரங்கள் வளர்ந்து பெருகட்டும்;, உத்தம வரசனே! இன்னும் உனக்கு வேண்டியவற்றைக் கேள்; வெறுப்பின்றித் தருகிறேன்" என்று சொன்னுர்.

அரசன் "முனிவர் திலகரே! தாங்கள் அன்பு கொண்டிருந்தால், என் கரத்தைக் குறைத்த நெருப்பையே எனக்கு அம்பாகத் தாருங்கள்" என்று வணங்கினுன். தத்தாத்திரேயர் 'அவ்வண்ணமே யாகுக' என்று அநுக்கிரகம் செய்துபோனுர். கார்த்தவீரியன் அவ்வரத்தின் பெருமையினுல் கருவம் கொண்டு, உலகத் தரசர்களில் ஒருவரையும் பொருள் செய்யாமல், அவர்

களைச் சண்டைக் கிழுத்து, அக்னியாஸ்திரத்தினால் அபஜய மடைவித்தும், தனக்கு அடங்கப் பண்ணியும், அதிகாரம் செலுத்தி வந்தான்.

அவ்வரசன் ஒரு தருணத்தில் மக்களும் தானுமாகக் காட்டுக்கு வந்திருந்தான். அங்குக் கையும் மெய்யும் சலிக்க, வேட்டையாடி விடாய்த்துப், பட்டணம் திரும்புகையில், ஜமதக்னி முனிவர் கண்டு, அவனையும் அவன் பரிவாரங்களையும் விருந்துண்டு போகும்படி விளம்பினர். அரசன் அங்கீகரித்து, அவர் ஆச்சிரமம் அடைந்தான். காமதேநு வென்ற தெய்வப்பசு முனிவர் கட்டளைப்படி வந்து, அனைவருக்கும் அறுசுவை நிரம்பிய அன்னத்தைப் பரிமாறிற்று.

இந்திரன் அந்தப் பசுவை ஜமதக்னி முனிவருக்குக் கொடுத்திருந்தான். அந்தத் தெய்வப்பசு அன்றாடம் அவர் ஆச்சிரமம் வந்து அவருக்கும் ஆச்சிரமத்தில் உள்ள முனிவர்க்கும் அவசியமாகிய வேள்விப் பொருள்களையும், வீட்டுப் பொருள்களையும், விருப்பத்தோடு கொடுத்துச் செல்லும். கார்த்தவீரியன் போஜனம் செய்தபிற்பாடு, அந்தப் பசுவைத் தனக்குத் தரும்படி முனிவரைக் கேட்டான். அவர் 'கொடேட' னென்று மறுத்துவிட்டனர். பின்னர் அரசனும் அவன் மக்களுமாக அந்தத் தெய்வப் பசுவைப் பலத்தின் முன்னிலையிற் பிடித்துச் சென்றார்கள்.

ஜமதக்னி முனிவர் புதல்வருக்குப் பரசுராம ரென்று பெயர். அவர் தமது இளமைப் பருவத்தில் அந்தணருக்குரிய அருமறை நான்கையும் அத்தியயனம் செய்தும், சீக்ஷை முதலிய வாறையும் சந்தேக மின்றித் தெரிந்தும், அரசர்க்கு உரிமையான தநுர்வேதங்களைக் கற்றும், நிகரில்லாமல் விளங்கினர். அவர் அப்பொழுது ஆச்சிரமத்தில் இல்லை. கார்த்தவீரியன்

பசுவைக் கொண்டுபோன செய்தியை முனிவர்கள் தெரியப் படுத்தினார்கள்.

பரசுராமர் உடனே கோபங்கொண்டு சென்று, கார்த்த வீரியனைச் சண்டைக்கு வரும்படி கூறினர். அவனும் பராக் கிரமம் பொருந்தியவ னாதலால் பரசுராமரை யெதிர்த்துப் பெருஞ் சண்டை செய்தான். இருபது நாட்களுக்கும் அதிக மாக அவ்விரண்டு வீரர்க்கும் போர் விடாமல் நடந்தது. பின் னர்ப் பரசுராமர் தமது சாமார்த்தியத்தினுல் இந்திரன் மலை களின் சிறகுகளை அறுத்தெரிந்ததுபோல அவ்வரசனது ஆயி ரம் கரங்களையும் அறுத்துத்தள்ளிக், கருவம்கொண்ட அவன் சிரத்தையும் நிலத்திற் புரள வுருட்டினர்.

அவன் புத்திரர்கள் யுகாந்தகால ருத்திரன் போலக் கோடரியைக் கையிற் கொண்டு நிற்கின்ற அந்தப் பார்ப்பன வீரனை எதிர்க்கச் சக்தியில்லாமல், பசுவை ஒப்புவித்துச் சரண மடைந்துவிட்டார்கள். பரசுராமர் பசுவைப் பிடித்துக்கொண்டு வந்து தந்தையை வணங்கினர். அந்தப் பிதா புத்திரன் செய லில் சந்தோஷிக்க வில்லை. அவர் "அன்புள்ள குழந்தாய்! அந் தணர்க்கு அருள் அறமாகுமே யன்றிக், கொலை அறமாகாது; நீ க்ஷத்திரிய தருமத்தை முற்றிலும் கைக்கொண்டனை; அது நமக்கு அடுத்ததன்று; நீ அரசனைக் கொன்ற பாபத்தின் பிராயச்சித்தமாக ஒரு வருஷம் தீர்த்தயாத்திரை செய்துவா!" என்று கட்டளை யிட்டார். பரசுராமர் 'அப்படியே செய்து வருகிறேன்' என்று யாத்திரை சென்றுவிட்டார்.

கார்த்தவீரியன் மக்கள் அதனை ஒற்றர்களா லறிந்து, ஆச்சிரமத்தில் நுழைந்து, அந்தண ரென்றும் பாராமல், ஜம தக்னி முனிவரைக் கொன்றுபோய் விட்டார்கள். பரசுராமர் திரும்பிவந்தபொழுது தந்தையின் மரணம் தெரிந்தது. அவர்

தாய் ரேணுகை மார்பில் அறைந்துகொண்டும், தலைமயிரைப் பிய்த்துக்கொண்டும், அரசகுமாரர்கள் செய்த அக்கிரமங்களைக் கூறினாள்.

பரசுராமர் 'அன்னையே! எனக்கு இறந்தவர்களை எழுப்பித்தருகின்ற தெய்வத் திறமை இல்லாமற் போனாலும், அரசகுமாரர்களைக் கொன்று பழிதீர்க்கும் திறமை இல்லாமற் போகவில்லை; தாங்கள் இருபத்தொருமுறை மார்பில் அறைந்து கொண்டதாக எண்ணியிருக்கிறேன்; கார்த்தவீரியன் வம்சத்தில் பிறந்த அரசர்களை நானும் இருபத்தொரு தலைமுறை வரையில் கொன்று, அவர்கள் ரக்தத்தில் இறந்துபோன தந்தைக்குத் தர்ப்பணம் செய்கிறேன்' என்று சபதம் பண்ணினார்.

பரசுராமர் பிற்பாடு தம் சபதத்தின் வண்ணம் சூரிய வம்சத் தரசர்களைக் கொன்று, அவர்கள் உதிர வெள்ளங்களை மடுவாய்த் தேக்கினார். அந்த ரத்தவெள்ளம் வட விந்தியாவில் ஐந்திடங்களில் தேங்கி நின்றது. அதற்குத்தான் ஸ்யமந்த பஞ்சக மென்று பெயர். பரசுராமரை அடக்க, அந்தக் காலத்தில் ஒரு அரசருக்காவது திறமை அமைய வில்லை. அரசர்களுடைய பலம் பராக்கிரமம் முதலிய யாவும் அந்தணச் சிறுவரான பரசுராமருக்குமுன் அடங்கிக் கிடந்தன. ஆதலால், வரத்திலும் பலத்திலும் மிகுந்திருக்கிறோ மென்று எவரும் கருவம் கொள்ளக்கூடாது. நேர்மையும் நிதானமுமாக இருந்துவர வேண்டும்.

—பாகவதம்.

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

15. பரசுராமரும் பீஷ்மரும்

முன்னர்ச் சந்திர வம்சத்தில் சந்தநு வென்று ஒரு அரசர் இருந்தார். அவர் மனைவிக்குக் கங்கை யென்று பெயர். அவள் வயிற்றில் தேவவிரதரென்று ஒரு புத்திரர் பிறந்தார். அவர் பிறந்தவன்றே கணவனுக்கும் மனைவிக்கும் உண்டான ஒருவிதமான நிபந்தனையை அநுசரித்துக், கங்கை குழந்தை யுடன் பிரிந்துபோய் விட்டாள். தேவவிரதர் தாயினிடத்தில் தான் இருபத்தைந்து வருஷம் வரையில் வளர்ந்தார். அவர் தாயின் கவுரவத்தினால் வசிஷ்டரிடத்தில் வேதங்களையும், சுக்கி ரரிடத்தில் மந்திரங்களையும், பிருகஸ்பதியிடத்தில் சாஸ்திரங்க ளையும், பரசுராமரிடத்தில் தநுர் வேதங்களையும் கற்றுக், கல்வி யில் நிகரில்லாமல் விளங்கினார். அவரது இருபத்தாறுவது வயதில் தந்தை வந்து, அத்தினபுரத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். உடனே தேவவிரதர் யுவராஜா வானார். அவர் தம் ஆளுகையில் ஒருவரும் குறைசொல்ல முடியாதபடி செங்கோல் செலுத்திவந்தார்.

மற்றொரு சமயத்தில் சந்தநுமன்னவர் பரிமளகந்தி யென்ற ஒரு பெண்மணியை விரும்பினார். பரிமளகந்தியின் தந்தை அரசர் விருப்பத்தை அங்கீகரிக்க வில்லை. தேவவிரதர் 'தாம் இருக்கும் வரையில் மணம் செய்துகொள்ளாமல் பிரமசாரியாகவே இருந்துவிடுகிறேன்' னென்றும், 'பரிமளகந்தியின் வயிற்றிற் பிறக்கின்ற புத்திரர்களுக்குச் சந்திரவம்ச பாரம்பரியமான சிங்காசனத்தைச் சொந்தமாக்குகிறேன்' னென்றும், சத்தியம் செய்து கொடுத்துப் பரிமளகந்தியைப் பிதாவுக்கு மணம் செய் வித்தார். அப்பொழுது தேவவிரதருக்குப் பீஷ்மர் என்று பெயருண்டாயிற்று. பரிமளகந்தியின் வயிற்றில் சித்திராங்க

தன் விசித்திர வீரியனென்று இரண்டு புத்திரர் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவன் சண்டையில் இறந்துபோய்விட்டான். பீஷ்மர் இளையவனைச் சிங்காசனத்தில் இருத்தித், தாம் எல்லாக் காரியங்களையும் கவனித்துக்கொண்டு வந்தார்.

விசித்திர வீரியனுக்கு மணப்பருவம் வந்தது. அப்பொழுது காசி தேசத்து அரச குமாரிகளுக்குச் சுயம்வரம் நிச்சயித்திருந்தார்கள். தேவவிரதர் அந்தப் பெண்களைச் சகோதரனுக்கு மணம் செய்விக்க வெண்ணி, அவனை அழைத்துக்கொண்டு காசிப் பட்டணம் போனார். ராக்ஷஸ மணம் க்ஷத்திரியர்களுக்குச் சாஸ்திர சம்மதமான படியினால் சுயம்வர மண்டபத்துக்கு வந்த அம்மூன்று அரச குமாரிகளையும் தம்பியின் தேரில் தூக்கி வைத்துக்கொண்டு, எதிர்த்த வரசர்களை வென்று, அத்தினபுரம் அடைந்தார். அவ்வரச குமாரிகளில் மூத்தவளுக்கு அம்பை யென்று பெயர். அவள் அத்தினபுரத்தில் பீஷ்மரை வணங்கித், தனக்கும் சாளுவ மன்னவனுக்கும் நடந்திருக்கின்ற மண வுடன்படிக்கையைச் சொல்லி, விசித்திர வீரியனை மணக்க முடியாதென்று கூறினாள். பீஷ்மர் அம்பையின் கருத்தின்படி அவளைச் சாளுவ மன்னவன்பால் அனுப்பி, அம்பிகை அம்பாலிகை யென்ற இரண்டு பெண்களையும் விசித்திரவீரியனுக்கு மணம் செய்துவிட்டார்.

'வேற்றரசனால் கவரப்பட்டவள்' என்று அம்பையைச் சாளுவன் அங்கீகரிக்க வில்லை. அப்புறம், விசித்திர வீரியனையாவது மணக்கலாம் என்று அம்பை அத்தினபுரம் வந்தாள். 'தமக்கையின் கணவனைத் தங்கை மணக்கலாகுமே யன்றித், தங்கையின் கணவனைத் தமக்கை மணக்கலாகா' தென்று, பீஷ்மர் சாஸ்திரம் சொல்லித் தடுத்துவிட்டார். வாய்க்கொழுப்புச் சீலையால் வடிந்த தென்ற பழமொழி அம்பையினிடத்தில் நிச்ச

யமாய்ப் போயிற்று. அம்பை தன்னை மணப்பாரற்றுச் சாளு வனிடத்திலும் பீஷ்மரிடத்திலுமாக இரண்டு வருஷம் வரையில் அலைந்து, எப்படியாவது தன்னை அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென்று கெஞ்சியும், இருவரும் முடியாதென்று மறுத்துவிட்டார்கள்.

பின்னர் அவள் 'தவம் செய்தாவது தன் வாழ்க்கையைத் தொலைக்கலா' மென்று, வனத்துக்குச் சென்றாள். அங்குச் சில முனிவர்கள் 'பீஷ்மர் பரசுராமர் மாணாக்கர்; நீ அவரை அடைக்கல மடைந்தால், கட்டாயம் காப்பாற்றப்படுவாய்' என்று சொன்னார்கள். அம்பை 'அம்முயற்சியையும் செய்து பார்க்கலா' மென்று, பரசுராமரைக் கண்டு, அவர் பாதத்திற் பணிந்து, தன் வரன் முறையையும், பீஷ்மர் தனக்குச் செய்தவற்றையும் சொல்லி, எப்படியாவது தன்னைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டினாள். பரசுராமர் அம்பையை அழைத்துக் கொண்டு அத்தினபுரம் வந்தார்.

தேவவிரதர் ஆசாரியர் வரவை அறிந்து, பயபக்தியுடன் எதிர்கொண்டு சென்று, வலம் வந்துபணிந்து, "ஐயனே! அடியேனை நினைந்து இவ்வளவு தூரம் எழுந்தருளியது சாதாரணமானதன்று; அடியன் பிறப்பு இன்றுதான் பயன் பெற்றது. இந்நாளைப் போல வேறு எந்நாளும் எனக்கு நன்னாளாகமாட்டா' என்று புகழ்ந்து, 'குருநாதா! தங்கள் வரவுக்குத் தகுந்த காரணம் ஒன்று இருந்து தீரவேண்டும்; தயைசெய்து தெரிவியுங்கள்' என்றார்.

பரசுராமர் மாணாக்கனுடைய அடக்கம் முதலியவற்றைக் கண்டு அடங்கா மகிழ்ச்சி கூர்ந்து, 'தேவவிரதனே! இதோ நிற்கின்ற இந்தக் கன்னிகையைப் பார்! இவள் பெயர் அம்பை; காசி யரசன் மகள்; உன்னால் அநுக்கிரகிக்கத் தக்கவள்; என்

ளையும் என் வார்த்தையையும் நினைந்து, இவளை மனைவியாக்கிக் கொள்' என்று சொன்னார்.

தேவவிரதர் காதில் கரத்தை வைத்துக், “குருநாதா! தங்கள் கட்டளையைப் பிரமன் முதலானவர்களும் கடக்கத் துணியா ரென்றால், மிகவும் அற்பனாகிய நான் எங்ஙனம் கடக்கத் துணிவேன்? ஒருவிஷயத்தை மாத்திரம் விண்ணப்பித்துக் கொள்கிறேன்; தந்தைக்கு மணம் செய்விக்கும்பொருட்டு ‘என்றும் பிரமசாரியாக இருந்துவிடுகிறே' னென்று சபதம் செய்திருக்கிறேன்; தேவர்களும் அதனை அங்கீகரித்து விட்டார்கள்; சமுகத்துக்கு அந்த விவரம் தெரிந்திரா தென்று தோன்றுகின்றது; மேலும், இந்தக் கன்னிகையின் சம்பந்தமான விஷயங்கள் இவை” என்று, சுவயம்வர காலம் முதல் நடந்த அம்பையின் சரித்திரங்களை அவருக்குத் தெரியப் படுத்தி வணங்கினார்.

பரசுராமர் “தேவவிரதா! என் வார்த்தையைக் கேள்; நீ என் மாணாக்கன்; பெற்ற தந்தையைக் காட்டிலும் கல்வி கற்பித்தவன் பெரியவன்; ஐம்பெருங் குரவரில் குருவுக்கு மரியாதை அதிகம்; குருவின் கட்டளை எப்பொழுதும் நிறைவேற்றத் தக்கது; இயற்கையிலேயே பெண்கள் தூய்மை யுள்ளவர்கள்; அதனிலும் அம்பை கன்னிகை; உன்னை உண்மையில் விரும்புகின்றனள்; நான் உன் சபதத்தை அநியாயம் என்று சொல்லவில்லை; அந்தக் காரியம் நிறைவேறிப் போயிற்று; விவாகத்திலும், பெண்கள் மானத்திலும், பொய் பாவஞ்செய்யாது; இவளை மணப்பதனால் உண்டாகலா மென்று சந்தேகிக்கின்ற பாவத்துக்கு என் தவங்களில் ஒரு பாகத்தைக் கொடுக்கிறேன்; இனித் தடை சொல்லாமல் அங்கீகரித்துக்கொள்” என்று சொன்னார்.

பீஷ்மர் 'குருநாதா! என் சபதம் உண்மை யாகட்டும்; அதனை அழியப் பார்க்கவேண்டாம்; இவ்வொன்றை யல்லாமல் உயிரையும் உதவச் சித்தமாயிருக்கிறேன்; நான் தங்கள் அடைக்கலம்; அநுக்கிரகம் செய்யுங்கள்' என்று வணங்கினர். பரசுராமருக்குக் கோபம் பொங்கிப் போயிற்று. அவர் கண்களை உருட்டி விழித்துக்கொண்டு, 'தேவவிரதா! மூன்று உலகத்திலும் என் கட்டளைக்கு மதிப்புண்டு; அதனை எவனும் அநாதரவு செய்யப் பொறேன்; இப்பொழுதே யுத்தத்துக்கு வா! வெற்றி எனதாயின், அம்பையை அங்கீகரி; உனதாயின், ஊருக்குப் போகிறேன்' என்று சொன்னர். பீஷ்மர் 'ஐயா! சத்தியத்தை நினைந்து, அப்படியே செய்கிறேன்; அநுக்கிரகம் செய்யுங்கள்' என்று, ஆயுதங்கள் நிரம்பின ஒரு தேரை அவருக்குக் கொடுத்துத், தாமும் அதேவிதமான மற்றொரு தேரில் ஏறினர்.

இருவருக்கும் சண்டை மூண்டது. அந்தப் போர் பகலும் இரவுமாகப் பத்துநாள் வரையிலும் நடந்தது. முடிவில், பீஷ்மர் குருவின் கவசத்தைப் பிளந்தும், அவர் மார்பைத் தொளைத்தும், அம்புப் புட்டிலை அறுத்தும் அபஜயப் படுத்தினர். பரசுராமர் உதிர வெள்ளம்பெருக, உள்ளம் அழிந்து, 'இனி க்ஷத்திரியர்க்கு வில்வித்தை கற்பிப்ப தில்லை' என்று சொல்லி, வந்த வழியே யூர்போய்ச் சேர்ந்தார். பீஷ்மர் வெற்றியுடன் பட்டணம் திரும்பினர். கார்த்தவீரியன் முதலான அரசர்களின் உதிரத்தில் தந்தைக்குத் தர்ப்பணம் பண்ணின பரசுராமருக்குத் தேவவிரதரிடம் தோல்வி உரிமையாயிற்று. ஆதலால், எவரும் பேராற்றல் கொண்டிருக்கிறேமென்று, மனம் போன வண்ணம் காரியங்களை முடிக்க முயல லாகாது.

—மகாபாரதம்.

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபே
ராற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
யேற்ற கருமம் செயல்.

---

16. அளகையரசன் மகள் மரணமடைந்தது

ஆதிநாளில் பத்திராசலத்தில் சந்தனகுமாரன் என்று, ஒரு அரசகுமார னிருந்தான். அவன் அழகில் மிகுந்தவன். கல்விப் பருவத்தில் ஆசிரியர்க்கு அடங்காதிருந்த படியினால் எழுத்தின் மணத்தை இம்மியும் நுகராத மூடனாய்ப் பெருகினான். தந்தை அவனுக்கு நயத்திலும் பயத்திலுமாகப் பலதடவை புத்தி புகன்றும் பயன்படாமற் போயிற்று. அந்தச் சிறுவன் அப்படியே நாடோடியாகித், தேசம் திரியத் தலைப் பட்டான். ஒரு சமயத்தில் அவன் அளகை நகரத்தில் தங்கினான். அந்நாட்டரசன் மகள் தன் கன்னிகா மடத்தின் கீழ்த் தினமும் செல்கின்ற சந்தனகுமாரனைக் கண்டு, அவன் அழகில் ஆசைகொண்டு, அவனைக் கலியாணம் செய்துகொள்ளக் கருத்திற் கொண்டுவிட்டாள். சந்தனகுமாரன் அந்தத் தெரு வழியாகத் தினமும் செல்வானே யல்லாமல் அப்படி யிப்படித் திரும்பியும் பார்க்கமாட்டான். அவன் அங்ஙனம் செல்வது அரசகுமாரிக்கு உத்தம வொழுக்கம் உள்ளவ னென்று உறுதிப் படுத்திற்று. அவள் ஒருநாள் கடித மொன்றெழுதி அவன் முன்னர் எறிந்தாள்.

சந்தனகுமாரன் கடிதத்தைப் பார்த்தான். எழுத்துக்களாவது தெரிந்திருந்தால், கூட்டிப் படித்து ஒருவாறு பொருள் செய்துகொள்ளலாம். என்ன செய்வான்? அவனுக்கு ஒன்றும்

புரியவில்லை. பின்னர் ஒரு பழஞ்சத்திரத்தில் நுழைந்து, அங்குப் படுத்திருந்த ஒரு ஏழை மனிதனை யெழுப்பிச், "சோம்பேறியே! பகலிற் படுத்திருக்கின்ற நீ உலகத்தில் எப்படிப் பிழைக்கப்போகின்றனை? நான் யார் தெரியுமா? பத்திராசலமன்னவர் புத்திரன்; அந்தச் சிங்காசனத்துக்கு உரிமையானவன்; இப்பொழுது தேச சஞ்சாரம் செய்யவந்திருக்கிறேன்; அரச குமாரி இந்தக் கடிதத்தை எனக்கு அனுப்பி யிருக்கிருள்; இதனைப் படித்துச் சொல்" என்று, கடிதத்தைக் கொடுத்தான். அவ்வேழை பிரித்துப்பார்த்துக், 'கடவுள் படைப்பில் இப்படியும் ஒருவன் இருக்கிருனல்லவா!' என்று ஆச்சரிய மடைந்து, "ஐயா! நீங்கள் அரச குமாரி யிருக்கின்ற அரண்மனையின்கீழ்த் தினமும் உலாவித் திரிகின்றீர்களாம்; அது தனக்கு நிந்தைக் கிடமாகு மென்றும், உடனே தாங்கள் வேறுபட்டணத்துக்கு விரைந்து செல்லாவிட்டால், அரசருக் கறிவித்துத் தங்களுக்குத் தண்டனை வருவிக்கப் படுமென்றும், எழுதியிருக்கிருள்" என்று மாற்றிக் கூறினன்.

அரசகுமாரன் அதனை உண்மை யென்று நினைத்து, அப்பொழுதே புறப்பட்டு அடுத்த பட்டணம் சேர்ந்தான். மூன்ருவது மனிதனுக்குக் கடிதச்செய்தி தெரிந்துபோன குற்றத்தினுல் அரசகுமாரி துன்மரணமாக இறந்துபோக நேர்ந்தது. சந்தனகுமாரன் அப்பொழுது அவசரத்திற் சென்றுவிட்ட போதிலும் படித்துச் சொன்னவன்மீது சந்தேகங்கொண்டு ஒரு வாரம் கழித்து மறுபடியும் அந்தப் பட்டணத்துக்கு வந்தான். தன் பொருட்டு அரசகுமாரி மரண மடைந்த செய்தி அவனுக்குத் தெரிந்தது. அதனுல், மிகவும் துக்கமுற்றுத் தானும் அவளைப்போலவே துன்மரணமாக இறந்துபோய் விட்டான். ஆதலால், படிப்பறிவில்லாமலும், பிறர் குறிப்பைத் தெரிந்துகொள்ள முடியாமலு மிருக்கின்ற மூடர்கள் ஓரறிவு

உயிர்களாகிய மரங்களினும் கேடுகெட்டவர்களென்று இந்தச் சரித்திரத்தினல் வெளியாகின்றது.

—தமிழறியும் பெருமாள் கதை.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்ருன் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

17. வான்கோழியின் மரணம்

ஒருகாலத்தில் கருவம்கொண்ட வான்கோழி யொன்று தானும் உலகத்தில் மயிலைப்போல விளங்கவேண்டு மென்று விரும்பிற்று. அந்தப் பறவை தோகைகளினுற்ருன் மயிலுக்குக் கவுரவம் உண்டாகின்றதென்று நினைத்துக், காட்டில் உதிர்ந்து கிடந்த மயிலிறகுகளைப் பொறுக்கி வந்து, அவற்ருல் தன்னைச் சிங்காரித்துக்கொண்டது. அப்புறம், அழகில்லாத வான்கோழியின் இனத்தில் சேர்ந்து வசிக்க அந்தப் பறவைக்கு விருப்பம் உண்டாகவில்லை. அது மெள்ள மெள்ள மயில்களின் இனத்திற் கலந்துகொண்டு அவற்றைப் போலத் தானும் தன்னுடைய இறகை விரித்து ஆடத்தொடங்கிற்று.

இரண்டொரு நாட்களில் வான்கோழியின் விகாரமான நடையும், அது ஒட்டவைத்துக் கொண்டிருக்கின்ற தங்கள் இறகுகளும், மயில்களுக்குத் தெரிந்தன. பிற்பாடு, அம்மயிற் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து கோபித்துக்கொண்டு, வான்கோழியைக் கொத்திக் கொத்தி, அந்த பறவை ஒட்டவைத்திருந்த எல்லாச் சிறகுகளையும் உதிர்த்துவிட்டன. வான்கோழி பறவைகளின் எதிரில் அதிக அழகைக் காண்பிக்க ஆசைப்பட்டதற்கு உள்ள அழகுகூட இல்லாமற் போயிற்று. அந்த மூடம்

பறவை அப்புறம், தன்னுடைய வான்கோழியின் இனத்தில் வந்துசேருவதற்கு வெட்கமுற்று வருந்தி, அவ்வவமானத்தினு லேயே ஒதுக்கமாக இருந்து உயிரை விட்டுவிட்டது. ஆத லால், அற்பர்கள் தங்கள் வேஷத்தினுல் பெரியவர் போல நடிப் பது அவர்களுக்கு அவமானத்தையும் ஆபத்தையுமே உண்டு பண்ணும். —கதாமஞ்சரி.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகுவிரித் தாடினுற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

18. தருமபுத்திரர் உதவி

முன்னர்ப் பாண்டவர் வனத்தில் வசித்து வருகையில், துரியோதனன் அவர்களுக்கு அவமானம் விளைக்கக் கருதி, ராஜ ஸ்திரீகளோடு ஆடம்பரமாக வனத்தில் வந்து விளையாடிக்கொண் டிருந்தான். அப்பொழுது சித்திராங்கத னென்ற கந்தருவ மன்னவனுக்கும் அவனுக்கும் கடுஞ் சண்டை நடந்தது. அந்தச் சண்டையில் அவன் தோற்றுப்போன படியினுல் கந்தருவ மன்னவன் துரியோதனனையும் அவன் மனைவிமார்களையும் சிறை செய்து, தேரில் வைத்துக்கொண்டு போனுன்.

அந்த செய்தி அடுத்த வனத்திலிருந்த பாண்டவர்க்குத் தெரிந்தது. பாண்டவர்களில் பீமசேனன், துரியோதனன் சிறைப்பட்டதற்குச் சந்தோஷமடைந்தான். தருமபுத்திரர் தமக் கும் தமது சகோதரர்க்கும் துரியோதனன் செய்த அக்கிரமங் களை மனத்திற் கொள்ளாமல், கண்ணீர் சொரிந்து வருந்திப், "பீமா! நீ அறியாமற் பேசுகின்றனை; துரியோதனன் அக்கிர மங்களை நான் இல்லை யென்று மறுக்கவில்லை; நமக்குள் வருத்த

மிருந்தாலும் பிறருக்கு இடம் தரலாகாது; துரியோதனன் இப்பொழுது ஆபத்தில் அகப்பட்டுக்கொண் டிருக்கிறான் ; குற்றம் பாராட்டுவதற்கு இது தருண மன்று ; நீ அர்ஜுனனோடு புறப்பட்டுச் சென்று, கந்தருவனை வென்று, துரியோதனனை மீட்டு வா; இல்லாவிட்டால், நமது பரிசுத்தமான குலத்துக்கு அவமானமும் அபகீர்த்தியும் உண்டாகும்'' என்று சொல்லியனுப்பினார். பீமனும் மறுத்துச் சொல்லாமல் அவ்வண்ணமே அர்ச்சுனனோடுசென்று யுத்தம் செய்து, கந்தருவ மன்னவனை வென்று, துரியோதனனையும் அவன் மனைவிமார்களையும் மீட்டுக் கொண்டு வந்தான்.

தருமபுத்திரர் துரியோதனனைத் தழுவித், "தம்பீ! இனிப் பெண்களை அழைத்துக் கொண்டு, இப்படி அஜாக்கிரதையாக வெளியில் வராதிரு'' என்று புத்தி சொல்லி, உபசரித் தனுப்பினார். தருமபுத்திரர் இல்லாவிட்டால், துரியோதனன் அப்பொழுது தப்பமுடியா தல்லவா! ஆதலால், ஒருவனுக்கு ஆபத்து நேர்ந்த காலத்தில் அவன் செய்த பழங் குற்றங்களைப் பாராட்டாமல் உதவி செய்வதுதான் உறவினர்களின் இலக்கணம்.

—மகாபாரதம்.

அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறவா ருறவு.

---

19. ஔரங்கஜீப்பும் சகோதரர்களும்

முன்னர் டெல்லிப் பட்டணத்தில் ஷாஜஹானென்பவர் மொகலாய சக்ரவர்த்தியா யிருந்தார். அவர் மிகுந்த பொருட்செலவு செய்து, மயிலின் வடிவமான ஒரு ரத்தின சிங்காசன

மியற்றி, அதில் இருந்துகொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்தார். அவருக்குத் தாரா, ஷுஜா, ஒளரங்கஜீப்பு, மூராத் என்று, நான்கு புத்திரர் பிறந்தார்கள். நால்வரும் கல்விப் பருவத்தைக் கடந்தபிற்பாடு, ஷாஜஹான் சக்ரவர்த்தி அவர்களுக்கு ராஜ்யத்தில் ஒவ்வொரு உத்தியோகத்தைக் கொடுத்தார். இராஜ்யபரிபாலன முறையில் நால்வரும் பழக்க முள்ளவர்க ளாகவேண்டும் என்பது அவர்தம் எண்ணம்.

நால்வரில் தாரா அக்பர் சக்ரவர்த்தியைப் போல அனைவரிடத்திலும் அன்பு பாராட்டுகின்ற பெருந்தன்மை யுள்ளவன். ஸுஜா தைரியமும் சாமர்த்தியமு முள்ளவன். ஒளரங்கஜீப்பு யுத்தவீரன்; தந்திரத்திலும் பேராசையிலும் நிபுணன். மூராத் தைரியமுள்ளவன்; ஆனால், புத்தி யில்லாதவன். தாரா மூத்த குமார னுதலாலும், சக்ரவர்த்தி தளர்ந்தவயதில் இருந்து வருவதனுலும், தந்தையின் அருகிலிருந்து ராஜ்ய வியவகாரங்களையும், தர்ப்பாரின் நடவடிக்கைகளையும், கவனித்துக் கொண்டு வந்தான். ஸுஜா வங்காள நவாப்பாக விருந்து வரி வசூல் செய்துவந்தான். ஒளரங்கஜீப்பு படைத்தலைமை பூண்டு, அவசியம் நேர்ந்த சமயங்களி லெல்லாம் வெளியிற் சென்று சண்டை செய்து வந்தான். இன்னமும் ஒளரங்கஜீப்பு, பீஜப்பூர் கோல்கொண்டா ஸுல்தான்களை வென்று, அவ்விரண்டு பட்டணங்களையும் சுவாதீனம் செய்துகொண்டு, அவ்விடத்திலேயே இருந்துவரவும் தொடங்கினன். மூராத் குஜராத்தைப் பரிபாலித்து வந்தான். தந்தைக்குப் பிற்பாடு, தாங்களே சக்ரவர்த்தி யாகவேண்டும் என்று, சகோதரர் நால்வரும் தனித்தனி எண்ணமிட் டிருந்தார்கள்.

ஒரு சமயத்தில் ஷாஜஹான் நோயில் விழுந்துவிட்டார். பிள்ளைகள் அதுதான் சமயம் என்று, சிங்காசனத்தைக் கை

பற்றிக் கொள்ளும்பொருட்டு, டெல்லிக்கு வந்து ஒருவரோ டொருவர் சண்டை செய்யத் தொடங்கினர்கள். அந்தச் சண்டை வெற்றியும் தோல்வியும் இல்லாமல் ஐந்து வருஷம் நடந்தது. அதில் ஔரங்கஜீப்பு தன் கடைசி சகோதரன் மூராத்துக்குப் பின்வருமாறு ஒரு ஆசைக்கடிதம் அனுப்பினன்.

"எனது அன்புள்ள சகோதரனே! என் சண்டையின் பயனை நீ தான் பெறப் போகின்றனை; நான் வைதிக மார்க்கத்தில் இருக்கிறேன்; எனக்கு உலகப் பற்றில் ஆசை கிடையாது; இராஜ்யத்துக்கும் எனக்கும் நெடுந்தூரம் இருக்கின்றது; உன்னை அரசில் வைத்த பிற்பாடு, நான் பக்கிரியாகி மெக்காவுக்குச் செல்லப்போகிறேன்; மூத்த சகோதரர் இருவரும் மதாபிமானம் அற்றவர்கள்; அவர்களைச் சிங்காசனத்தில் ஏற்றலாகாது; அவர்கள் இருந்தால், முகம்மதிய மதம் நிலை குலைந்து நாட்டில் ஒடுங்கிப் போய்விடும்; நால்வரில் நீதான் சிங்காசனத்தில் இருக்கத் தகுதி யுள்ளவன்; உன் நிமித்தமே நான் இந்தப் பெருஞ் சண்டையை விடாமல் நடத்திவருகிறேன்."

இங்ஙனம், உன் க்ஷேமத்தை விரும்புகின்ற
பிரிய சகோதரன், ஔரங்கஜீப்பு.

மூராத் அந்தக் கடிதத்தைக்கண்டு மகிழ்ந்து, அப்பொழுதே படைகளோடு வந்து, ஔரங்கஜீப்பைக் கலந்துகொண்டான். ஔரங்கஜீப்பு அப்புறம் தாராவை எதிர்த்து, மதப்பற் றில்லாதவ னென்று, சண்டையில் கொலை செய்துவிட்டான். ஸுஜா மனைவி மக்களுடன் சண்டையில் உயிர்தப்பிச் சென்று, மாறுவேஷம் பூண்டு பலவருத்தங்களை நுகர்ந்து, மெல்ல மெல்ல ஆஸாம் தேசத்தை அடைந்தான். ஔரங்கஜீப்பு ஒற்றர்களினுல் அதனை யறிந்து, அந்தத் தேசத்தரசனைத் தனது ஒப்புயர்வற்ற நயவஞ்சகத்தினுல் சுவாதீனம் செய்துகொண்டு,

சகோதரனையும் அவன் குடும்பங்களையும், ஒருமிக்கக் கொன்று விடும்படி ஏற்பாடு பண்ணினன். ஔரங்கஜீப்பின் தந்திரத்தை உணர்ந்துகொள்ள முடியாத ஆஸாம் தேசத் தரசன் ஸுஜா வையும் அவன் குடும்பத்தையும், இரக்கமின்றிக் கொலை செய்து விட்டான். அப்புறம், ஔரங்கஜீப்பு மூராத்தினிடம் சக்ரவர்த் திக்குரிய யோக்கியதை கிடையாதென்று சொல்லி, அவனையும் அரண்மனையிற் கொன்றுவிட்டான். இங்ஙனம் மூன்று சகோ தரர்களையும் கொன்று, நோயிலும் கிழப் பருவத்திலும் கிடந்த தந்தை ஷாஜஹானைக் கொடுமையும் குரூரமுமாக ஜெயிலில் அடைத்துவிட்டு, டெல்லிப் பட்டணத்தில் சிங்காசனம் ஏறி ஞன்.

இன்னும் ஔரங்கஜீப்பு, அவற்ருேடும் அமைதி யடையா மல் இளஞ் சிறுவரான சகோதரர்களின் புத்திரர்களுக்கும் அரண்மனையில் விஷம் வைத்துக் கொன்ருன். பேராசையையே பிரதானமாய்க் கொண்டு தந்தை-சகோதரர் என்ற உறவையும் கவனியாமல், உலகப் பழிப்பையும் பாராமல், அனைவரையும் கொன்ற ஔரங்கஜீப்பைச் சகோதரன் என்று வெட்கமில்லா மல் எங்ஙனம் சொல்லிக்கொள்ள முடியும்? உடன் பிறந்த சகோதரர் யாவரும் இராம லக்ஷ்மணரைப் போலவும், பஞ்ச பாண்டவரைப் போலவும், ஒற்றுமை யுள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். பேராசைக்கும் பொருமைக்கும் அடிமைகளா கிச், சண்டையிட்டு மடிவதுதான் இந்தப் பரந்த பூமியில் பெரும்பாலும் நடந்து வருகின்றது. —இந்துதேச சரித்திரம்.

(1) உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா ;
உடன் பிறந்தே கொல்லும் வியாதி.

(2) ....மெல்விய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்.

———

20. சிங்ககுப்தன் உதவி

முன்னர்ப் பிரதிஷ்டானம் என்ற பட்டணத்தில் சாதவாகன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் இளமைப் பருவத்தில் கல்வியைக் கற்கக் கருத்துக் கொள்ளவில்லை. தநுர் வேதத்தை மாத்திரம் விரும்பிக் கற்று, அதில் தேர்ச்சி பெற்று விளங்கினன். அவன் பெயரைக் கேட்டாலும் பகைவர் நடுக்கம் கொள்வார்கள். அவன் ரணகளத்தில் எண்ணிறந்த வரசர்களை எதிர்த்து நின்று வெற்றிகொண் டிருக்கிறன். முடிவாய்ச் சொல்வோமானல், இந்தியாவின் பெரும் பாகத்தையும் அவன் தனக்கே உரிமையாய்க் கொண்டுவிட்டான். அவ்வரசன் ஒரு சமயத்தில் அந்தப்புரத்தில் பெண்கள் நடுவில் இருக்கும் பொழுது அரசகுமாரி யொருத்தி அவனைக் கல்வி கற்கவில்லை யென்று, அவமானப் படுத்திவிட்டாள். அது சாதவாகனுக்குப் பொறுக்க முடியாமற் போயிற்று. அவன் இருட்டறை யொன்றில் இருந்து, இங்ஙனம் சிந்தை செய்யலானன். "மனிதப் பிறப்பு பெறுதற் கரியது; அதனைப் பெற்ற பின்னர்க், கல்வியை வருந்திக் கற்றுக்கொள்ள வேண்டும்; மனிதர்க்குக் கல்வி கண்போன்றது ; செல்வம், அணி ஆடை முதலிய அலங்காரப் பொருள் போன்றது ; கண்ணில்லாதவன் குருடனவதுபோலக் கல்வி யில்லாதவன் மடையனுகிறன் ; இப்பொழுது நமக்குக் கல்வி அல்லது மரணம் இரண்டிலொன்று நிச்சயமாக வேண்டும்'' என்று தீர்மானித்துக் கொண்டான்.

மறுநாள் முழுவதும் அவன் கொலுவுக்கு வரவில்லை. அன்னமும் அருந்தவில்லை. எண்ணமிட்ட வண்ணமே யிருந்து, ஏக்கம் கொள்ளத் தொடங்கினன். அமைச்சர் முதலியவர் எவ்வளவோ ஆறுதல் சொல்லிப் பார்த்தார்கள். ஒன்றிலும் பயன்

படவில்லை. சாதவாகன் துன்பச் செய்தி மெள்ள மெள்ளப் பட்டண முழுவதும் தெரிந்துபோயிற்று.

அந்தப் பட்டணத்தில் சிங்கசுப்தன் என்று அரசகுமாரன் ஒருவன் இருந்தான். அவன் அன்றிரவு நடு யாமத்தில் எழுந்து, பூஜாத் திரவியங்களை யெடுத்துக்கொண்டு சண்டிகைப் பிராட்டியின் சந்நிதானத்துக்குச் சென்றான். அங்கு அம்பிகைக்கு அபிஷேகம் முதலியவற்றை நிறைவேற்றிச், சந்நிதானத்தில் நின்றுகொண்டு, "அன்னையே! தாங்கள் சருவமும் தெரிந்தவர்; நேற்று முதல் சாதவாக மன்னவர் கல்விக்கடலைக் கடக்க வேண்டுமென்று, துன்பக் கடலில் விழுந்து, தத்தளித்து வருகிறார்; அரச காரியங்களுக்கு மிகவும் அவசியமாகிய அவர் அல்லற்பட்டுக் கண்ணீர் வடிப்பது அழகா யிருக்கவில்லை; அவர் மன வமைதியினால் உலக வமைதி ஓங்கி வளர்கின்றது; அவர் பராக்கிரமத்தினால் அக்கிரமம் அடங்கி, அறம் தலை யெடுக்கின்றது; தவம் தானம் தெய்வபூஜை முதலிய பலவும் அவர் ஆளுகையில் அழகாய்ப் பிரகாசிக்கின்றன; உலகத்துக்கு இன்றியமையாதவரான அரசர் பெருமானது கல்விக் கருத்து நிறைவேறும் நிமித்தம் தங்கள் சந்நிதானத்தில் அடியன் சிரத்தைப் பலி கொடுக்கிறேன்; இந்தப் பலிப்பூஜை தங்கள் திருவுள்ளத்துக்குச் சம்மத மாகுமானால், அரசர் கல்விப்பொருளைக் கைக்கொள்ளச் செய்யுங்கள்" என்று சொல்லித், தன் சிரத்தைக் கண்டிக்கத் தொடங்கினான்.

அப்பொழுது அம்பிகை எதிராகி வந்து, "தைரிய முள்ளவனே! உன் பக்தி மெச்சத்தக்கது; ஸாகஸமாகிய இவ்வருந் தொழிலை இனிச் செய்யாமல் இரு; நான் உன் பொருட்டு அரசன் எண்ணம் நிறைவேறும்படி வரம் தருகிறேன்; சருவவர்மா வென்ற மந்திரியினால் சில நாட்களுக்குள் சாதவாகன் கல்விக்

கடலிற் களித்து விளையாடுவான்'' என்று, சொல்லி மறைந்தாள். சிங்கருப்தன் சந்தோஷ மடைந்து, மறுநாள் அந்தப்புரத்துக்கு வந்து, அம்பிகையின் வசனத்தை அரசனுக்கு அறியக்கூறி ஞன்.

சாதவாகன் அவனை ஆலிங்கனம் செய்துகொண்டு, "அன்புள்ளவனே! உன்னுதவி மறக்கக்கூடிய தன்று; என்னிடத்தில் உதவி பெறுகின்றவர்களிலாவது, அல்லது என் உறவினர்களிலாவது, எவரும் இப்படிச் செய்ய வந்ததில்லை; நான் இதுவரையில் உன்னை அறியமாட்டேன்; உனக்கு ஒன்றும் செய்ததும் கிடையாது; நீயாகவே வலுவில் வந்து, என் பொருட்டு உயிரையும் கொடுக்கத் துணிந்துவிட்டனை; உன்னுதவிக்குக் கடவுள்தாம் கருணை செய்யவேண்டும்'' என்று சொல்லி, அவனுக்குப் பலவிதமான வெகுமதிகள் புரிந்து, கவுரவப்படுத்தினன். அப்புறம் சருவவர்மா வென்ற மந்திரியினலேயே வேந்தன் சாதவாகன் ஒரு வாரத்துக்குள் சகல சாஸ்திரங்களையும் குறைவில்லாமல் கற்றுப் பண்டிதனுக விளங்கினன். ஆதலால், சில சமயங்களில் உறவின ரல்லாதவர்கள் சமயசஞ்சீவி போல வந்து, உயிரையும் கொடுத்து உதவி செய்வார்கள். —பிருஹத் கதை.

....உடன் பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

---

21. அநசூயையின் கற்பு

முன்னர்ப் பனிவரையைச் சார்ந்த கதலி வனத்தில் அத்திரி யென்ற முனிவர் தம் மனைவி அநசூயையுடன் அமர்ந்து தவம் செய்துவந்தார். அவர் தவப் பெருமையும், அநசூயையின் கற்பின் பெருமையும், தெய்வ பதங்கள் தோறும் திகழத்

தொடங்கின. ஒருசமயத்தில் நாரத முனிவர் தெய்வ லோகங் களிற் சென்று, அநசூயையின் பெருமையை அதிகமாகப் புகழ்ந்து பேசினுர். பிரமன் விஷ்ணு ருத்திரன் என்ற மூன்று தேவர்களும் ஒருவரை யொருவர் அறியாமல் வந்து, அதன் உண்மையை அறிய ஆவல் கொண்டார்கள்.

ஒரு நாள் சந்திரசேகரக் கடவுள் சந்நியாசி வேஷம் பூண்டு கபாலத்தைக் கையில் ஏந்தி, அத்திரிமுனிவர் ஆச்சிரமம் வந்து, பிக்ஷையை விரும்பினுர். அநசூயை அன்னம் படைக்க வந்த பொழுது, அந்தச் சந்நியாசி 'எனக்கு நிருவாணியாகிப் பிக்ஷ யிடவேண்டும்; இஃது என் விரதம்; இல்லையேற் கொள்ளேன்' என்று சொன்னுர். அநசூயை சிரித்துக்கொண்டு, 'தருகி றேன்; பெற்றுச் செல்லுங்கள்' என்று, சிறிது தண்ணீரை யெடுத்துவந்து சந்நியாசியின்மீது தெளித்துக், 'குழந்தை யாகுக' என்றுள். அந்நிமிஷத்திலேயே சந்நியாசி ஐந்துமாத மும் நிரம்பப் பெருத குழந்தையாய் விட்டார். அநசூயை அந்தக் குழந்தையை அணைத்துக்கொண்டு சென்று, பாலூட் டித், தொட்டிலிற் கிடத்தினுள். அப்புறம், ஸ்ரீமகா விஷ்ணு சந் நியாசியாகி வந்து, 'ஆடை யில்லாமல் அன்னம் அளிக்கவேண் டும்' என்றுர். அநசூயை முன்னர்ச் செய்ததுபோலவே அவ ரையும் குழந்தையாக்கித், தொட்டிலில் இட்டாள். மூன்றுவது பிரமன் வந்து பிக்ஷ கேட்டு, முன்னவர்களைப்போலவே குழந் தையாகி அவர்கள் பக்கத்திற் கிடந்தார்.

ஆற்றுக்குச் சென்றிருந்த அத்திரி முனிவர் அப்புறம் ஆச் சிரமம் திரும்பினுர். வீட்டில் வரிசையாக மூன்று குழந்தை கள் தொட்டிலிற் கிடப்பதைக் கண்டார். அவருக்கு ஆச்சரி யம் உண்டாயிற்று. பின்னர் மனைவியைக் கேட்டார். அநசூயை புன்சிரிப்போடு குழந்தைகளின் வரலாற்றைச் சொல்லி, அவற்

றைக் காப்பாற்றி வந்தாள். அப்புறம், சங்கரி லக்ஷ்மி சரஸ்வதி யென்ற மூன்று தேவிகளுக்கும் நாரதமுனிவர் அவர்களது கணவன்மார்களின் தன்மையைத் தெரியப்படுத்தினர். பிற்பாடு, அத்தேவிமார் மூவரும் திடுக்கிட்டுப் பயந்து, அநசூயைக் கண்டு தங்கள் கணவரைத் தரும்படி கேட்டுக் கொண்டார்கள். அநசூயை அவர்களுக்கு உபசரணை செய்து, மூன்று குழந்தைகளையும் ஒப்புவித்து, 'உங்கள் இயற்கை வடிவங்களை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லி, விடைகொடுத் தனுப்பினள். அனைவரும் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

அம்மூன்று கடவுளரும் அநசூயையை இன்னமும் ஒரு முறை பரிக்ஷிக்க வேண்டு மென்று நினைத்து, அத்திரி முனிவரது ஆச்சிரமக் காட்டிலும், அதனைச் சார்ந்த நாட்டிலும், மழை பொழியவொட்டாமல் தடை செய்துவிட்டார்கள். நீர் நிலைகளிலுள்ள தண்ணீர் யாவும் சூரிய வுஷ்ணத்தில் ஆவியாகி மறைந்தது. பயிர்ப் பச்சைகள் வற்றி யுலர்ந்து சாம்பராய்ப் போயின. நிலம் ஈரப் பசையின்றி வரண்டது. ஜனங்கள் உணவு உணவென்று மூலைக்கு மூலை கூச்சலிட்டுக் கலங்கினர்கள். அநசூயை அதன் காரணத்தை உணர்ந்து, நிரபராதிகளான அந்நாட்டு மனிதர்களும் உயிர்களும் தன்பொருட்டு வருந்துவதற் கிரங்கிக், கணவன் கட்டளை பெற்றுக், கற்பின் மேன்மையினல் தானே மேக வடிவமாகி, வானத்தை அடைந்து, ஐந்து வருஷம் வரையில் மழை பொழிந்து, அந்நாட்டைச் செழிக்கச் செய்துவந்தாள்.

திரிமூர்த்திகளும் அநசூயையின் அந்த அற்புதமான வாற்றலைக் கண்டு, ஆச்சரியம் அடைந்து, அவள் எதிரில் வந்து, "மேன்மை யுள்ளவளே! உன் கற்பின் பெருமையைக் கண்டு நாங்கள் களிகூர்ந் திருக்கிறோம்; விருப்பமான வரத்தைக் கேள்"

என்று கூறினார்கள். அநசூயை "பெருமை பொருந்தியவர்களே! மூவரும் எனக்குக் குழந்தைகளாவதுதான் எனக்கு விருப்பமான வரம்'' என்று கேட்டாள். அவர்கள் 'தந்து விட்டோம்' என்று, சொல்லி மறைந்தார்கள். பின்னர்ப் பிரமன் சந்திரனும், மகாவிஷ்ணு தத்தாத்திரேயரும், சந்திரசேகரர் துர்வாசருமாக வந்து, அநசூயையின் கர்ப்பத்தில் அவதாரம் செய்தார்கள். அவ்வளவு பெருஞ் சிறப்பும் அநசூயைக்குக் கற்பின் மகிமையினால் உண்டாயிற்றே யன்றி, வேறு பிறவற்றால் உண்டாக வில்லை. அத்திரி முனிவர்க்கும் அநசூயையினால் அதிக கீர்த்தி யுண்டாயிற்று. ஆதலால், நல்லொழுக்கமுள்ள மனைவியினால் வீட்டுக்கு எல்லாச் செல்வங்களும் எளிதில் எய்துகின்றன.

—சிவ மகாபுராணம்.

இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை.

---

22. தசரதர் மரணம்

ஆதி காலத்தில் அயோத்திப் பட்டணத்தில் தசரதர் என்று ஒரு பெரிய வரசர் இருந்தார். அவருக்குக் கௌசலை, கைகேயி, சுமித்திரை யென்று மூன்று மனைவிகள். மூத்த மனைவியின் வயிற்றில் இராமன் என்பவன் பிறந்தான். அவன் நல்ல வழகன். கல்வியைக் கற்றவன். நல் லொழுக்க முள்ளவன். சூரன். அவன் தனது ஒப்புயர்வற்ற பராக்கிரமத்தினால் மிதிலைக் கரசன் புத்திரியான சீதை யென்பவளை மனைவியாய்க் கொண்டான்.

ஒரு சமயத்தில் தசரதர் அவ்விராமனுக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் பண்ண விரும்பினார். அது மற்றொரு மனைவியான கைகேயிக்குத் தெரிந்தது. அவளுக்குப் பரதன் என்று

ஒரு புத்திரன் இருந்தான். அவன் இராமனுக்கு இளையவன். இராமனைப் போலவே எல்லாக் கலைகளையும் குறைவில்லாமல் கற்றவன். அந்தச் சகோதரர்க்குள் ஒரு விதமான வித்தியாசமும் இல்லை. கைகேயிக்குத் தசரதர் நெடுங் காலத்துக்கு முன்னர் இரண்டு வரம் கொடுத்திருந்தார். அவள் அவ்விரண்டில் ஒரு வரத்தினால் 'இராமன் பதினான்கு வருஷம் வரையில் காட்டில் வாசம் செய்து வரவும், மற்றொரு வரத்தினால் தன் மகன் பரதன் அதுவரையில் நாட்டில் சிங்காசனத்தில் இருந்து, அரசு செய்து வரவும் வேண்டும்' என்று, கட்டாயப்படுத்திக் கேட்டாள்.

தசரதர் "இராமனை வனத்துக் கனுப்பாதே; அவன் சென்றுவிட்டால், நான் இறந்துபோவேன்; இராமன் என் னுயிர்; நீ வேறுவிதமான வரத்தைக் கேள்; தடை யின்றித் தருகிறேன்" என்று பலவிதமாய்ச் சொன்னார். கைகேயி அவரைப் பொய்யன் என்றும், வஞ்சகன் என்றும் தூஷித்து, 'எப்படியும் தன் வரத்தைக் கொடுத்தே தீரவேண்டும்' என்று, நிலத்தில் விழுந்து புரண்டு, பிடிவாதம் பண்ணினாள்.

தசரதர் வேறு வகை யில்லாமல் அவள் விரும்பின அவ் விரண்டு வரங்களையும் கொடுத்து, அப்பொழுதே நிலத்தில் விழுந்து மரண மடைந்து போனார். கைகேயியைப் போலக் கணவன் வருத்தத்தைக் கண்ணெதிரிற் கண்டும் மன மிரங்காத வர்களும், பலர் கேட்கக் கணவனைக் கடுஞ்சொற்கள் சொல்லித் தூஷிக்கின்றவர்களும், குடும்பத்தில் இருக்கத் தகுதி யுள்ளவர்களல்லர் அவர்களுடன் கூடிவாழ்ந்து வருவதைக் காட்டிலும் புலியுடன் கூடி ஒரு புதரில் வசிப்பது சிலாக்கிய மானது.

—இராமாயணம்.

(1) இல்லாளும் இல்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

(2) ....கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

---

23. கற்பகமும் அந்தணனும்

கங்கைக் கரையிலுள்ள கச்சப மென்னும் அக்கிரஹாரத்தில் விஷ்ணுசர்மா வென்று ஒரு வேதியன் இருந்தான். அவன் சிறுவயதிலேயே வேதாத்தியயனம் செய்து, இல்லறம் நடத்தி வந்தான். அவன் இல்வாழ்க்கை மலரும் அதன் மணமும்போல மனைவியோடு இன்பமும் எழிலுமாக இனிது நடந்து வந்தது. அவன், நிலங்களிலும் களங்களிலும் இயற்கையில் உதிர்ந்து விழுந்துகிடக்கின்ற தானிய மணிகளைப் பொறுக்கி யெடுத்துக்கொள்வதாகிய உஞ்சவிருத்தி யென்ற தொழிலைக் கைக்கொண்டு, ஜீவனம் செய்துவந்தான். விஷ்ணுசர்மாவின் பழவினைப் புண்ணியத்தினால் தெய்வ தருவாகிய கற்பகமரம் நிலத்துக்கு வந்து, ஒரு முகூர்த்த காலம்வரையில் நின்று, அவனுக்குப் பலன் தரும்படியான பாக்கியம் கிடைத்திருந்தது. ஆனால், அது விஷ்ணுசர்மாவுக்குத் தெரியாது.

ஒரு சமயத்தில் விஷ்ணுசர்மா தானியம் சேகரிக்கும் பொருட்டுச் சற்றுத் தொலைவிலுள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றான். கோடை வெயிலின் கொடுமையினாலும், வழி நடந்துசென்ற வருத்தத்தினாலும், பசியின் தொந்தரையினாலும், வழி பிசகி, வேறொரு புதியவழியிற் புகுந்து சென்றுவிட்டான். அஃதொரு பெருமணல் வெளி. அவன் நடந்து செல்லச் செல்ல, அவ்வழியும் வளர்ந்து பெருகிற்று. நீர் வேட்கை

ஒருபுறம்; வயிற்றுப் பசி ஒருபுறம்; வெயிற் கொடுமை ஒரு புறம்; மணற்சூடு ஒருபுறம்; எல்லாம் சேர்ந்து விஷ்ணுசர்மாவை வருத்தி வாதைப்படுத்தத் தொடங்கின. அந்தோ! பாபம்; அவன் ஒன்றும் செய்யத் தோன்றாமல், 'ஆ! கடவுளே! இங்கொரு மர மிருந்தால், அதன் நிழலிலாவது சற்று நேரம் இளைப்பாறிச் செல்லலா மல்லவா! அதுவும் காணக் கிடைக்க வில்லையே; என்ன செய்வேன்' என்று, பரிதபித்துப் புலம்பினான்.

அப்பொழுது விஷ்ணுசர்மாவின் கண்ணெதிரில் மிகவும் விசாலமான நிழல் தரும் மரமொன்று நீண்டு வளர்ந்து தழைத் திருந்தது. கோடை வெயிலில் அம்மணல் மைதானத்தில் இருக்கின்ற மரத்தைக் கேவலம் கற்பகம் என்றுதான் கூற வேண்டும். அந்தணன் அதன் நிழலை யடைந்து, அப்பாடா வென்று இளைப்பாறத் தொடங்கினான். அவனுக்கு நல்ல நித்திரை வந்தது. சற்றுநேரம் வரையில் நிலத்திற் படுத்து நன்றாய்த் தூங்கினான். தூக்கம் தெளிந்ததும் தண்ணீர் வேட்கை அதிகமாயிற்று. கிண்ணம் தண்ணீர் கிடைத்தால், உயிர் நிலைக்குமென்று கலங்கினான்.

அங்கோரிடத்தில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் இருப்பது கண்ணுக்குத் தெரிந்தது. விஷ்ணுசர்மா உடனே யெழுந்து எடுத்துப் பருகினான். என்ன மதுரம்! என்ன மதுரம்! பளிங்கினும் தெளிவு; கரும்பினும் இனிமை; பனியினும் குளிர்மை; ஆவல் அடங்கினதும் ஆயாசத்தினால் மீட்டும் நித்திரை வந்தது. சற்றுச் சென்ற பிற்பாடு, நாற்புறமும் நோக்கினான். வெயிலின் உக்கிரத்தை வகுக்கத் தரமன்று. மணல்களும் உருகிக் கரைந்து போகின்றன. கண்கள் பார்வை

மழுங்குகின்றன. அப்புறம் இப்புறம் நகருவதற்குக் கூட அது சமயமா யில்லை.

ஆனால், அவ்விதமான அசந்தர்ப்பங்களை யெல்லாம் அது சரிக்கின்றவர் யாவர்? மாட்சிமை பொருந்திய வயிற்றுச் சக்ரவர்த்தியவர்கள் ஆளுகை நடத்த ஆரம்பம் செய்துவிட்டார். அவர் அதிகாரத்தை எவரும் அலக்ஷ்யம் செய்ய முடியாது; அனைவரும் அவருக்கு அடிமை யாட்கள்தாம். அவர் இடம் பெயராமலேயே யிருந்துகொண்டு, எல்லோரையும் வருத்தி வேலை வாங்கிவிடுகிறார். அந்தணன் என்ன செய்வான்? பசி பசியென்று பதைத்துத் துடித்தான். சிறிதளவேனும் சாப்பாடு கிடைத்தால், சற்றுக் களை தெளியலாமென்று வருந்தினான்.

உடனே விஷ்ணுசர்மாவின் எதிரில் அரசர்க்கும் கிடைத்தற் கரிய அறுசுவைச் சாப்பாடு பொற்கல மொன்றிற் பொலிந்து விளங்கிற்று. அது கமகம வென்று நறுமணம் கமழ்ந்து, இப்பொழுதுதான் இறக்கியதோ வென்னும்படி இளஞ் சூட்டோடு இனிமையா யிருந்தது. விஷ்ணுசர்மா வேண்டிய வரையில் விலாப்புடைக்கத் தின்று, அங்கிருந்த நீரால் உறுப்புக்களைச் சுத்தம் செய்துகொண்டான். உண்ட களைப்புத் தொண்டருக்கும் உண்டல்லவா! அதுவரையில் பட்டினி. அலைச்சல் அதனினு மதிகம். ஆயாசம் சொல்லத் தரமன்று.

அந்தணன் சாப்பாட்டுக்குத் தக்க படுக்கை வேண்டுமென்று நினைத்தான். அவன் எதிரிற் பொற்கட்டிலில் உயர்ந்த படுக்கை யொன்று விரித்து விளங்கிற்று. அந்தணன் அதிற் சென்று படுத்தான். கால் வலியினால் தூக்கம் வரவில்லை. அவன் அப்புறம் தன் பாதத்தைப் பிடித்துப் பதப்படுத்துவதற்

குப் பையன் ஒருவனை விரும்பினன். பின்னர்ப் பதினறு வயதுள்ள சிறுவ னொருவன் அவனுக்குக் கால் பிடிக்க வந்தான். விஷ்ணுசர்மாவுக்கு அவனைக் கண்டதும் ஆச்சரியமும் திகிலும் அதிகமாய்ப் போயிற்று.

அவன் அதுவரையில் நடந்தவற்றை நினைவு கூரத் தொடங்கினன். "முதலில் தண்ணீர் ; பின்னர்ச் சாப்பாடு ; அப்புறம் படுக்கை ; முடிவில் சிறுவன் ; விரும்பினவற்றை யெல்லாம் இம்மரம் உதவி யிருக்கின்றது ; அறிவற்ற மரத்துக்கு இந்த அரிய வாற்றல் எப்படி அமைந்திருக்கும்? உண்மையில் நோக்கினல், இந்த மரத்தில் ஒரு பெரிய பிரமராக்ஷஸன் இருந்து, நாம் விரும்பியவற்றை உதவியிருக்கவேண்டும் ; அவன் உத்தேசம் நம்மைக் கொன்று தின்பதா யிருக்கும்; இல்லையேல், இவற்றை நமக்குச் செய்திரான் ; அவன்தான் இப்பொழுது சிறுவனகவும் வடிவம்கொண்டு வந்திருக்க வேண்டும்; அந்தோ ! அறியாமல் வந்து அகப்பட்டுக்கொண்டு விட்டோம் ; பிரம ராக்ஷஸனே! என்னை விழுங்குவதற்குத்தான் இந்த வடிவம் கொண்டு வந்திருக்கின்றயோ," என்று சொல்லிப் புலம்பினன்.

அந்த மரம் நினைப்பவற்றைத் தருகின்ற தெய்வ தருவானபடியினல் அந்தணன் எண்ணத்தின் வண்ணம் அச் சிறுவன் பிரமராக்ஷஸனக மாறி, விஷ்ணுசர்மாவை விழுங்கி, மறைந்து போய்விட்டான். என்ன பரிதாபம் பாருங்கள்! கற்பக மரத்தைச் சார்ந்தும் அந்தணன் செய்த கருமம் தொலைந்தபாடில்லை. ஊழ்வினை அங்ஙனம் எண்ணச்செய்து அவனுக்கு உயிர் முடிவை உண்டு பண்ணிற்று. ஆதலால், முற்பிறப்பிற் செய்த வினையின் பயனை ஒவ்வொருவரும் அநுபவித்துத்தான்

தீரவேண்டும். எவ்வளவு சக்தி யுள்ளவரா யிருந்தாலும் அத னை அநுபவியாமல் தொலைக்க முடியாது. கதாசரித்சாகரம்.

எழுதியவா றேகாண் இரங்குமட நெஞ்சே!
கருதியவா றாமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சார்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேன்
முற்பவத்திற் செய்த வினை.

---

24. சிசுபாலன் அழிவு

முன்னாளில் தமகோஷன் என்ற அரசன் புத்திரனான சிசுபாலன் என்பவன் சேதிநாட்டுக்குத் தலைவனா யிருந்தான். அவன் கண்ணனுக்கு அத்தை மகன். அவன் பிறந்தபொழுது மூன்று கண்களும் நான்கு கரங்களும் இருந்தன. தாய் தந்தைகள் அவற்றைக் கண்டு வருத்த மடைந்தார்கள். அப்பொழுது 'இந்தச் சிறுவனுடைய அதிகமான கண்ணும், அதிகமான கரங்களும், எவன் மடியில் உட்காருகையில் மறைகின்றனவோ, அவனால் இவனுக்கு மரண முண்டாகும்' என்று அசரீரி யுண்டாயிற்று. அப்படியே அந்தக் குழந்தையின் அதிகமான அங்கங்கள் கண்ணன் மடியில் உட்காருகையில் மறைந்து போயின. சிசுபாலன்தாய் புத்திரன் க்ஷேமத்தை நினைந்து, சிசுபாலன் செய்யும் குற்றத்தில் தின மொன்றுக்கு நூறு குற்றம் வரையில் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கண்ணனைக் கேட்டுக்கொண்டாள். கண்ணனும் 'அங்ஙனமே யாகட்டும்' என்று சொன்னான்.

சிசுபாலன் தனக்குப் புத்தி வந்தது முதல் கண்ணனைப் பகைத்துக்கொண்டு வந்தான். கண்ணன் பகைவர்கள் அவனுக்கு அந்தரங்க நண்பர்கள். அவன் தாயின் வரத்தை அறிந்து, கண்ணனைத் தூஷிப்பதையே தனக்குக் கவுரவமாக நினைத்

துவந்தான். உருக்மணியின் விவாக காலத்தில் அவனுக்குக் கண்ணன்மீதிருந்த மனஸ்தாபம் அதிகமாய்ப் பெருகிப் போயிற்று. அதனால், எவ்விதத்திலாவது கண்ணனைக் கொல்ல வேண்டுமென்று அவன் பல விதத்திலும் பிரயத்தனம் பண்ணி வந்தான். அவன் அந்தரங்க நண்பர்களில் கம்ஸன், ஜராஸந்தன், தந்தவக்த்ரன் என்ற மூவரும் நாளடைவில் கண்ணனால் கொல்லப்பட்டுப் போனார்கள். சிசுபாலன் கண்ணனிடம் கொண்டிருந்த பகையாகிய பெருநெருப்பிற்கு அந்தச் செயல் நெய் வார்த்ததுபோ லாயிற்று.

பிற்பாடு, யுதிஷ்டிர சக்ரவர்த்தி இந்திரப் பிரஸ்தத்தில் இராஜஸூயம் என்ற மகா யாகத்தைச் செய்தார். அதற்கு உலகத்திலுள்ள எல்லா வரசர்களும் வந்து திரண்டிருந்தார்கள். வேள்வி விதிப்படி நடந்து வந்தது. அப்பொழுது யாக சபையில் யாவர்க்கு அக்கிர பூஜை செய்வதென்று ஆலோசனை உண்டாயிற்று. பீஷ்மர் அதனைக் கண்ணனுக்குச் செய்யும்படி சொன்னார். யுதிஷ்டிரர் பீஷ்மர் கட்டளையின்படி கண்ணனுக்குப் பூஜை பண்ணினார்.

உடனே சிசுபாலன் கண்கள் சிவக்க, மீசையும் உதடும் துடிக்க, நெஞ்சம் படபடக்கச், சபையில் எழுந்து நின்று, “உயர் குலத்துப் பிறந்த உத்தம வரசர்களே! இந்த அவமரியாதையை நீங்கள் எங்கேயாவது கண்டிருக்கிறீர்களா? அறிவிலும் குணத்திலும், ஆண்மையிலும் ஒழுக்கத்திலும், பெயர் பெற்றவர்களான எத்தனையோ உயர்ந்த வரசர்கள் இந்த மகா சபையில் நிறைந்திருக்கிறார்கள்; வயதுசென்ற கிழவனான பீஷ்மன் ‘பொரிமாவை மெச்சினான் பொக்கைவாயன்’ என்பது போல அவர்களை இம்மியும் லக்ஷ்யம் பண்ணாமல், கண்ணனுக்கு முதல் மரியாதை செய்யக் கட்டளை யிட்டுவிட்டான்; அக்

கிரபூஜையை ஏற்றுக்கொள்வதற்குக் கண்ணனிடத்தில் என்ன யோக்கியதை இருக்கின்றது? கண்ணன் துர்க்குணக் களஞ்சியம்; பொய்க்குப் பொக்கிஷம்; அநாசாரங்களின் ஆலயம்; பாவத்தின் ஆச்சிரமம்; அவன் பிறந்தது முதல் செய்திருக்கின்ற அக்கிரமங்களை எண்ணி முடியுமா; ஏட்டில் அடங்குமா? அக்கிரபூஜை யென்பது எப்பொழுதும் உயர்ந்த குணமுள்ளவர்க்குச் செய்யப்படவேண்டும்; அக்கிரமத்தில் மிகுந்தவர்க்கு அதனைச் செய்வது தகுதியாகுமென்றால், கண்ணன் ஏற்றுக்கொள்வதற்கு முக்காலும்யோக்கியதையுள்ளவன்றான்" என்று பலவாறு வாய்க்கு வந்தபடி பிதற்றினான்.

அவன் தூஷணைச் சொற்கள் அங்குள்ளவர்க்குச் சகிக்க முடியாமற் போயின. பேய் பிடித்தவனைப்போல விடாமல் தூஷித்துக் கொண்டிருந்த படியினால், அவன் குற்றங்கள் கண்ணன் கொடுத்திருந்த வரத்தின் அளவையும் கடந்துபோய் விட்டன. அதனால், கண்ணன் அனைவரு மறியச், சக்ராயுதத்தைப் பிரயோகித்து அப்பொழுதே சிசுபாலனைக் கொன்று விட்டான். ஆதலால், பயனில்லாத கோபத்தினால் பிறருக்கு வருத்தம் தரும் சொற்களை ஒருவரும் சொல்லலாகாது.

—மகாபாரதம்.

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்து.

---

25. இலக்ஷ்மணனும் தாரையும்

முன்னர்த் தசரத புத்திரராகிய ராமர், மனைவி சீதையும், சகோதரன் இலக்ஷ்மணனும் பின்பற்றப், பிதாவின் கட்டளைப்படி பதினான்கு வருஷம் வனத்தில் வாசம் செய்யச் சென்றார். இலங்கைத் தீவுக் கரசனான ராவணன் என்பவன் இராம லக்ஷ்மணர்கள் ஆச்சிரமத்தில் இல்லாத சமயம் பார்த்துச்,

சந்நியாசி வேஷத்தோடு வந்து, சீதையைச் சிறையெடுத்துச் சென்றான். சகோதரர்கள் ஆச்சிரமம் வந்ததும் சீதையைக் காணவில்லை. அவள் தினமும் வழக்கமாய்ச் செல்கின்ற விடங்களுக்குச் சென்று தேடினார்கள். இருந்தால்தானே அகப்படப் போகிறாள்? சற்றுத் தொலைவு சென்றதும் ஒரு தேரின் அடையாளம் தெரிந்தது. அதனைத் தொடரும்பொழுது அவ்வடையாளம் ஜடாயு வென்ற கழுகரசன் சிறகறுந்து விழுந்து வருந்துகின்ற மரண பூமியிற் கொண்டு சேர்த்தது.

இராம லக்ஷ்மணர் வரவில் ஜடாயு சந்தோஷித்துச், "சூரர்களே! இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போனான்; சீதையின் புலம்பொலி என் காதில் விழுந்தது; நான் 'இராக்ஷசப் பதரே! எங்குச் செல்கின்றனை? நில் நில்' என்று அதட்டிக்கொண்டு எதிர்த்து நின்றேன்; என்றால் அவனை வெற்றி கொள்ள முடியாதென்பதனை நான் உணராதிருக்க வில்லை; சற்று அவன் செலவைத் தடுத்தால், நீங்கள் வந்து கலந்து கொள்வீர்களென்பது என் உத்தேசம்; ஆயினும், என் சாமர்த்தியத்தினால் அவன் தேரைப் பயன்பட வொட்டாமற் செய்தேன்; கொடியவனாகிய அவ்வரக்கன் கடவுளிடம் பெற்ற வாளின் மகிமையினால் என்னை இந்தக் கோலம் கண்டு சென்றான்; நீங்கள் அவனை வென்றா லன்றிச், சீதையை அடைய முடியாது'' என்று வருத்தத்தினாற் சொல்ல முடியாமற் சொல்லிற்று.

இராம லக்ஷ்மணர்கள் 'இராவணன் சீதையை எங்குத் தூக்கிக்கொண்டு போனான்?' என்று கேட்டார்கள். ஜடாயு விடை சொல்வதற்கு வாயைத் திறந்ததும் அதன் பிராணன் பிரிந்துபோயிற்று. இராம லக்ஷ்மணர்கள் தங்கள் பொருட்டுச் சண்டையில் உயிர் துறந்த ஜடாயுவுக்கு வருந்தி, அதனை எடுத்து அடக்கம் செய்து, அவர்களுக்குத் தென்பட்ட சில

அடையாளங்களை வைத்துக்கொண்டு, தெற்கு நோக்கிச் சென்றார்கள்.

அவர்கள் ஆராய்ச்சியில் கிஷ்கிந்தையை அடுத்த ரிசிய மூகம் என்ற மலையும் ஒன்று. அதிற் புகுந்து சீதையைத் தேடும்பொழுது அவர்களுக்கு அநுமானென்ற வானர வீரனால் சுக்கிரீவன் என்னும் குரங்கரசன் நட்புக் கிடைத்தது. சுக்கிரீவனும் இராமரும் நெருப்பின் முன்னிலையில் ஒருவர்க் கொருவர் நட்புச் செய்து கொண்டார்கள். முதலில், இராமர் வாலியைக் கொன்று, சுக்கிரீவனுக்கு வானர ராஜ்யத்தைத் தரவேண்டுமென்பதும், பின்னர்ச் சுக்கிரீவன் தன் சைநியங்களுடன் வந்து சீதையை அடைவிக்க முயற்சி செய்ய வேண்டுமென்பதும், அவர்கள் உடன்படிக்கை. இராமர் உடனே வாலியைக் கொன்று, சுக்கிரீவனுக்கு வானர ராஜ்யத்தைக் கொடுத்துத், தம் கடமையை நிறைவேற்றினர். சுக்கிரீவன் 'மழைக் காலம் கழிந்ததும் படைகளுடன் வந்து சேருகிறேன்' என்று விடைபெற்றுக்கொண்டு கிஷ்கிந்தைக்குச் சென்றான். அதுவரையில் இராம லக்ஷ்மணர் ரிசிய மூகத்தில் தங்கித், தங்கள் நாட்களைத் துக்கத்துடன் தொலைத்து வந்தார்கள்.

அப்புறம், நான்கு மாதங்கள் நடந்தன. மழைக்காலம் எப்பொழுதோ மறைந்து போய்விட்டது. பனிக்காலம் பிறந்து தன் பாலிய விளையாட்டைச் செய்யத் தொடங்கிற்று. சுக்கிரீவன் தவணைப்படி வந்துசேர வில்லை. இராமருக்குக் கோபம் உண்டாயிற்று. சுக்கிரீவன் அலக்ஷ்யம் பண்ணி விட்டானென்பது அவர்தம் மெண்ணம். அவர் "நீ கிஷ்கிந்தைக்குச் சென்று சுக்கிரீவனைக் கண்டு, இந்த என் கட்டளையைத் தெரியச் செய்துவா! தவணைப்படி வந்து உதவிபுரியாத துரோகியைச் சித்திரவதை செய்வது சாஸ்திர சம்மதம்; இன்னமும்,

அரசர்க்கு அது நீதியும் கடைமையு மாகும்; அம்புப் புட்டிலில் உள்ள தெய்வக் கணைகளில் வாலியைக் கொன்றது ஒரே யொரு அம்புதான்; மற்றவை இரையின்றி வருந்திக் கிடக்கின்றன; சீக்கிரம் சண்டைக்குச் சித்தமாயிருக்கச் சொல்'' என்று, புகன்று போக்கினர். இலக்ஷ்மணருக்கும் அது நியாயமாய்த் தோன்றிற்று. அவர் கோபத்துடன் புறப்பட்டுக் கிஷ்கிந்தைக்குச் சென்றார்.

கோட்டைக் காவலிலிருந்த குரங்குகள் இலக்ஷ்மணர் கோபக் குறியை உணர்ந்து,என்ன நேரிடுமோ வென்று பயந்து, கோட்டைக் கதவை அடைத்துத் தாளிட்டுக்கொண்டன. அந்த மூடச்செயல் இலக்ஷ்மணர் கோபத்தீக்குத் தூபம் போட்டதுபோ லாயிற்று. அவர் சுக்கிரீவன் இவ்வளவு நன்றி யற்றவனு வென்று சினந்து, கோட்டைக் கதவை உதைத்தார். அது பிளந்து முரிந்து போயிற்று. உடனே இலக்ஷ்மணர் உள்ளே நுழைந்து, அரண்மனையை நோக்கி வேகமாய்ச் சென்றார். குரங்குகள் அதனை யுணர்ந்து பயந்து, மூலைக்கு மூலை ஓடி யொளியத் தொடங்கின.

அந்த விபரீதச் செயல் அநுமானுக்குத் தெரிந்தது. அவன் 'இலக்ஷ்மணரைச் சமாதானப்படுத்த நாம் இப்பொழுது செல்லலாகாது; இதற்கொரு உபாயத்தைச் சிந்தை செய்ய வேண்டுமென்று, அந்தப்புரம் சென்று, வாலியின் மனைவி யான அழகில் மிகுந்த தாரை யென்பவளைக் கண்டு, சங்கதி தெரிவித்துச், சமாதானம் செய்ய வனுப்பினன். அந்நங்கையர்க் கரசி 'அந்தோ! அநியாயமாகக் கேட்டை வருவித்துக் கொண்டீர்களே; அனைவரும் பின்னால் வந்து சேருங்கள்; நான் முன்னர்ச் சென்று முடியுந்தனையும் முயன்று பார்க்கிறேன்' என்று சொல்லி, இலக்ஷ்மணரை அரண்மனை வாயிலிற்

கண்டாள். இலக்ஷ்மணர் கோபம் கரைகடந்த வெள்ளம்போலக் கனவேகமா யிருந்தது. தாரை நிதானமாகச் "சூரர் சிகாமணி யே! தங்கள் கோபத்தை எதிர்க்கத் தேவர்களுக்கும் திறமை அமையவில்லை யென்றால், அற்பக் குரங்குகள் அதனை எங்ங னம எதிர்த்து நிற்க முடியும்? தாங்கள் கோபம் கொண்டு இங்கு எழுந்தருளுவதற்குத் தகுந்த காரணமொன்று இருந் து தீரவேண்டும்; எனக்குத் தெரிந்தவரையில் ஒன்றும ஏற் படவில்லை; ஒருகால் நேரிட்டிருந்தால், அதனை இப்படிப்பட் ட தென்று விளக்கி யருளுங்கள்" என்று நயம்படக் கேட் டாள்.

பெண்களுக் கெதிரில் கோபம் காட்டுவது பேதமைத் தன்மை யல்லவா! இலக்ஷ்மணர் தடைக் கஞ்சிய சர்ப்பத் தைப்போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, சுக்கிரீவன் தவற் றையும், அதன் பொருட்டு இராமர் கொண்ட கோபத்தையும், கூறினர். தாரை "நேர்மை யுள்ளவரே! சாந்த மடையுங்கள்; தங்களைப் பார்க்கப் பயமா யிருக்கின்றது; சுக்கிரீவ மகாராஜர் நன்றியற்றவ ரல்லர்; அவர் இராமர் கட்டளையை மறந்தும் போகவில்லை; சோம்பியும் இருக்கவில்லை; எழுபது வெள்ளம் என்ற பெருந்தொகை கொண்ட வானரப் படைகளைத் திரட்டி வரத் தூதர்களை யனுப்பி, எத்தனையோ நாட்க ளாயின; அவர் களுக்கு நாளைவரையில் தவணை யிருக்கின்றது; கட்டாயம் வந்து சேருவார்கள்; அரசர் நாட்களைக் கணக்கிட்டுக் கொண்டு அரண்மனையில் துன்புற்று வருகிறார்; தாங்கள் திரும்பிச் சென்று சகோதரரைச் சாந்தப்படுத்துங்கள்" என்று சொன் னாள்.

இலக்ஷ்மணர் கோபம் கொஞ்சம் தணிந்தது. அவர் தாரை வார்த்தையில் நம்பிக்கைகொண்டு, சாந்த மடைந்தார்.

அதுதான் சமயமென்று அநுமான் முதலான மந்திரிகள் வந்து, இலக்ஷ்மணரை வணங்கி நின்றூர்கள். பின்னர்த் தாரை விடைபெற்றுக்கொண்டு உள்ளே சென்று விட்டாள். இலக்ஷ்மணர் இராமர் கட்டளையையும், அவர் கோபத்தையும், அவர்களுக்குத் தெரிவித்ததற்கு, அவர்கள் தாரை சொல்லியவற்றையே திரும்பவும் கூறினுர்கள். இலக்ஷ்மணர் 'அப்படியே வந்து சேருங்கள்' என்று, கட்டளை யிட்டுத் திரும்பி, இராமரைக் கண்டு வணங்கி, நடந்தவற்றைக் கூறினுர்.

மறுநாள் சுக்கிரீவன் அநுமான் முதலான அமைச்சர்களுடன் சென்று, இராமரை வணங்கிப் படைகள் வந்துவிட்ட செய்தியைத் தெரியப்படுத்தினுன். தாரை முதல்நாள் இலக்ஷ்மணரைச் சந்தி செய்விக்காவிட்டால், இராமரும் சுக்கிரீவனும் திரும்பவும் அப்படிச் சேர்ந்திருக்க முடியாதல்லவா! ஆதலால், அறிஞர்களான நண்பர்கள் ஏதேனும் ஒருகாரணம் பற்றிப் பிரிந்து சென்றுவிட்டாலும், இடையிலுள்ளவர்கள் சமாதானம் செய்தால், அவர்கள் முன்குற்றங்களை மனத்திற் கொள்ளாமல், முன்னையிலும் அதிகமாக நெருங்கி நட்புக் கொள்வார்கள். **இராமாயணம்.**

பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே.

---

26. கங்காபட்டரும் விராடனும்

ஆதி காலத்தில் பாண்டவர் ஐவரும் அவர்கள் மனைவியான பாஞ்சாலியும் பன்னிரண்டு வருஷம் வரையில் வனத்தில் வாசம் செய்து தொலைத்து, நாட்டில் மறைந்து கழிக்க வேண்டிய ஒருவருஷ காலத்தையும் மச்ச நாட்டரசனுன விராட மன்னவன் வீட்டில் வேற்றுருப் புனைந்து, வாசம் செய்து வந்தார்கள். துரியோதனன் பாண்டவர் ஒளிந்துள்ள இடங்களைத்

தெரிந்துவரும்படி மூலைக்கு மூலை ஒற்றர்களை யேவினான். அவர்கள் இந்தியா முழுவதும் சென்று தேடியும், பாண்டவர்களை அறிய முடியவில்லை. அனைவரும் வருந்தி வந்து, அவ்விஷயத்தை அரசனுக்கு அறிவித்தார்கள்.

துரியோதனன், சபையில் தூதர்கள் திரும்பிய விதத்தைச் சொல்லி, 'இனி யென்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான். அப்பொழுது பீஷ்மர் "அறிவற்றவனே! உன் முயற்சி பயன்பட மாட்டாது; அவர்கள் கடவுள் அருளுக்கு உரிமையானவர்கள்; தவணை கழிவதற்குள் பாண்டவர்களை எவரும் அறிந்து சொல்லத் திறமை யுள்ளவ ராகார்; உண்மை நெறியுள்ள உத்தமர்களாதலால், அவர்கள் இருக்கும் நாட்டில் எல்லா வளங்களும் நன்றாய்க் கொழிக்கும்; குடிகள் யாவரும் குறைவற்று விளங்குவார்கள்; இதுதான் அவர்களை அறிந்து கொள்ளக்கூடிய அடையாளமாகும்" என்று சொன்னார்.

ஒற்றர்களிற் சிலர், 'ஐயா! அப்படிப்பட்ட செல்வம் பொருந்திய நாடு மச்ச தேசமே யாகும்' என்று கூறினார்கள். துரியோதனன் "நாம் இப்பொழுது விராட மன்னவன்மீது சண்டைக்குச் செல்லுவோம்; பாண்டவர் இருந்தால், அவ்வரசன் பொருட்டுச் சண்டை செய்ய வருவார்கள்; அப்பொழுது அவர்களைத் திரும்பவும் வனத்துக்கு அனுப்பலாம்; பாண்டவர் இராவிட்டால், அவ்வரசன் பசுக் கூட்டங்களைக் கவர்ந்து கொண்டு, வெற்றியுடன் திரும்பலாம்; இரண்டு விதத்திலும் நமக்கு லாபமே யுண்டாகின்றது" என்று சொன்னான். பீஷ்மர் 'எனக்குத் தோன்ற வில்லை; இரண்டையும் இழந்து தான் திரும்ப நேரிடும்; எல்லாவற்றிற்கும் முயற்சி செய்து பார்' என்றார்.

துரியோதனன் பீஷ்மர் முதலான பெரியவர்களோடு

படைகள் புடைசூழ, மச்சதேசம் சேர்ந்தான். அங்குப் படைகளை இரு பகுதியாக்கி, விராடன் பட்டணத்துக்குத் தெற்கில் மேய்கின்ற பசுக்களை முன்னிட்டுச் சென்று கவர்ந்து கொள்ளும்படி ஒரு பகுதியை யனுப்பித், தான் மற்றொரு பகுதியுடன் மறுநாள் அவன் பட்டணத்துக்கு வடக்குத் திக்கிலிருந்த பசுக் கூட்டங்களைச் சுவாதீனம் செய்து கொண்டான். தெற்குப் படைகளுக்குத் திரிகர்த்தன் தலைவனாகிப் பசுக்களைக் கவர்ந்தான்

விராடன் அதனை ஒற்றர்களால் உணர்ந்து, தன் அரண்மனையில் கங்காபட்டர், பலாயனன், தாமக்கிரந்தி, தந்திரபாலன் என்ற புனை பெயர்களோடு வசித்துவந்த நால்வர் பாண்டவர்களோடும் போருக்குச் சென்று, பலாயனன் உதவியினால் திரிகர்த்தனைத் தேர்க்காலில் கட்டிக்கொண்டு ஜயத்துடன் திரும்பினான். வடக்குத் திக்குப் பசுக்கள் கவரப்பட்ட செய்தியைக் கோபாலர்கள் வந்து அறிவித்தார்கள். அப்பொழுது விராடன் கடைசிப் பிள்ளையான உத்தரன் ஒருவன்தான் அரண்மனையில் இருந்தான். அவன் மிகவும் சிறியவன். ஆயினும், பெண்கள் எதிரில் தன்னைப் பராக்கிரம முள்ளவனாகச் செய்துகொள்ளும் பொருட்டுத், தன் சகோதரி உத்தரை யென்பவளுக்குப் பரத சாஸ்திரம் கற்பிக்கின்ற பிருகந்நளை யென்ற பேடியைச் சாரதி யாக்கிக்கொண்டு, துரியோதனனோடு சண்டை செய்யச் சென்றான்.

விராடன் வெற்றியோடு வீட்டுக்குத் திரும்பினதும், அரண்மனைப் பெண்கள் அவனுக்கு உத்தரன் சென்ற விஷயத்தை உணர்த்தினார்கள். விராடன் போருக்குச் செல்லப் புறப்படும்போது கங்காபட்டர் 'பிருகந்நளை சென்றிருப்பதனால், உன் புத்திரனுக்குப் பயமில்லை' யென்று சொல்லிச், செல்ல

வொட்டாமல் நிறுத்தினர். அன்று பிற்பகலில் தூதர்கள் வந்து வணங்கி, "மகாராஜாவே! தங்கள் புத்திரராகிய உத்தர குமாரர் ஒற்றைத் தேருடன் சென்று, பீஷ்மர் துரோணர் முதலான பெரியவீரர்களை வென்று பசுக்கூட்டங்களைத் திருப்பிவருகிறார்" என்று சொன்னார்கள். விராடன் மிகவும் சந்தோஷித்துப், 'பட்டண முழுவதும் அலங்காரம் செய்து, அனைவரும் சென்று ஆடம்பரத்துடன் அழைத்து வாருங்கள்' என்று அமைச்சர்களுக்குக் கட்டளையிட்டுக், கங்காபட்டரென்ற சந்நியாசியோடு சதுரங்கமாடிக்கொண் டிருந்தான்.

மன்னவன் சந்தோஷக் கிளர்ச்சியினால் நடு வாட்டத்தில் "கங்காபட்டரே! என் மகன் தனித்துச் சென்று, பகைவர்களை வென்று திரும்பினதுபோலவே நானும் இவ்வாட்டத்தில் தங்களை வெற்றி கொள்கிறேன்" என்று சிரித்துக் கொண்டு சொன்னான். "கங்காபட்டர் அரசனே! அவசரப்படா திரு; பீஷ்மர் முதலான பெரியவர்களை யெதிர்த்துச் சண்டை செய்வது எவர்க்கும் எளிய காரிய மன்று; அவர்கள் பலத்திலும் பராக்கிரமத்திலும் சிறந்தவர்கள்; பலவிடங்களிலும் சென்று, சண்டை செய்து கை தேர்ந்தவர்கள்; உன்போன்ற அரசர்களாலும்கூட அவர்களைச் சண்டையில் அபஜயப்படுத்துவது அசாத்தியமான காரியம்; உருண்டையையும் வில்லையும்கூட உறுதியாய்ப் பிடிக்கத் தெரியாத உத்தரன் அவர்களை ஒருபொழுதும் வெற்றி கொண்டிரான்; அவ்வெற்றி அவனுக்குத் தேர்விடச் சென்ற பேடியினாற் கிடைத்திருக்க வேண்டும்" என்று சொன்னார்.

அரசனுக்கு அச்சொல் அங்கீகார மாக வில்லை. அவன் அதிக கோபத்தோடு "பெரியவரே! தங்களுக்கு அரசர்களின் ஆண்மையை எப்படி அறிந்து சொல்ல முடியும்? மீன்குட்டிக்கு நீச்சலும், வேங்கைக் குட்டிக்குப் பாய்ச்சலும், கற்பிப்பவர் யார்?

அதுபோலவே க்ஷத்திரியர்களுக்குச் சண்டை செய்யும் திறனும் செம்மையாக அமைந்திருக்கின்றது ; தூதர் சொல்லியவற்றை எதிரிலிருந்து கேட்டும், பேடிக்குத்தான் வெற்றி உரிமையான தென்று மரியாதை தெரியாமல் விளம்புகின்றீர்கள் ; அரண்மனையை விட்டு வெளிப்பட்டறியாத பேடிக்கு ஆண்மை எங்ஙனம் உரிமையாகும்? 'பொரிமாவை மெச்சினன் பொக்கை வாயன்' என்றபடி, தாங்கள்தாம் பேடியைப் புகழ்ந்து கொள்ளலாம்; துறவியாகியும் பொறுமை தொலைந்த பாடில்லை'' என்று சொல்லிச் சதுரங்கக் காயை நிலத்தில் அடித்தான். அக்காய் அப்படியே மேலுக்கெழும்பிக் கங்காபட்டரது நெற்றியிற் பட்டு, ரத்தத்தைப் பெருக்கிற்று.

அரசன் "ஆ! என்ன வாச்சரியம் பாருங்கள்! சந்நியாசியைத் தண்டிக்கலாகா தென்று நான் சாந்தமடைந்து விட்டாலும், கடவுள் சாந்த மடையவில்லை; அவர் தங்கள் பொறுமைக்குத் தக்க தண்டனையைச் செய்தே தீர்த்துவிட்டார்'' என்று கங்காபட்டரைப் பரிகாசம் செய்து சிரித்தான். அங்கிருந்தவர்களும் 'ஆம், ஆம்; தகுந்த தண்டனைதான்' என்று சொல்லிச் சந்தோஷப்பட்டார்கள். கங்காபட்டர் கோபத்தை மிஞ்சவிடாமல் அடக்கி, ரத்தத்தைத் துடைத்துக்கொண்டு ஒன்றும் சொல்லாமல் மௌனமா யிருந்துவிட்டார்.

சற்று நேரத்தில் உத்தரன் வந்து, பேடியின் சாமர்த்தியத்தையும், அவன் பாண்டவர்களில் அர்ச்சுனன் என்பதையும், தந்தைக்குத் தெரியப்படுத்தினன். விராடன் கங்காபட்டரை யுதிஷ்டிர சக்ரவர்த்தி யென்று தெரிந்து, தான் அவருக்குச் செய்த அபராதத்தை உணர்ந்து, அவர் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி பலதடவை பிரார்த்தித்துக்கொண்டான். தருமபுத்திரர் சிரித்துக்கொண்டு, 'அரசனே! அன்னதாதாவா

கிய உன்னை நான் கோபித்துக் கொள்வேனா? எனக்குச் சிறிதும் கோபம் கிடையாது' என்று சொல்லி, அநுக்கிரகம் செய்தார். ஆதலால், பெரியவர்களின் கோபம் அந்தக் கணத்திலேயே நீர்ப் பிளவுபோல மாறிப்போகு மென்பதனை இதனால் தெரிந்து கொள்கிறோம். —மகாபாரதம்.

......................................விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

---

27. பீஷ்மரும் துரோணரும்

முன்னொரு காலத்தில் வனத்தில் அக்னிவேசியர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவரிடத்தில் துரோணன் துருபதன் என்று இரண்டு மாணாக்கர் படித்து வந்தார்கள். துரோணன் அந்தண குலம். சுறுசுறுப்பும் விடாமுயற்சியு முள்ளவன். துருபதன் க்ஷத்திரிய குலம். மறதியும் சோம்பலும் கொண்டவன். துருபதன் துரோணனிடத்தில் தான் மறந்துபோன மந்திரங்களையும் வில்வித்தைகளையும் அடிக்கடி கற்றுக்கொண்டு பாடம் செய்து வருவான். சில வருஷங்களுக்குப் பின்னர் அவ்விருவரும் எல்லாக் கலைகளையும் கற்றுக், குருவிடம் விடை பெற்றுச் செல்லத் தொடங்கினார்கள்.

அப்பொழுது துருபதன் துரோணனைத் தழுவிக்கொண்டு, "நண்பனே! நான் மறந்துபோன மந்திரங்களையும் தந்திரங்களையும் எனக்கு அப்பொழு தப்பொழுது பொறுமையுடன் கற்பித்திருக்கிறாய்; நான் அவ்வுதவியை மறந்துபோக மாட்டேன்; எனக்குச் சிங்காசனம் சொந்தமாகட்டும்; என் அரசிற் பாதியை உனக்குப் பங்கிட்டுக் கொடுத்து, என் நன்றியறிதலை

விளக்குகிறேன்'' என்று வாக்குதத்தம் செய்து, அவனிடம் விடை பெற்றுக்கொண்டு போனான்.

சில வருஷங்களுக்குப் பின்னர்த் துருபதனுக்கு அரசு உரிமையாகிச், சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகைசெய்து வந்தான். அப்பொழுது துரோணன் ஒரு நாள் துருபதன் சபைக்குச் சென்று, "அரசனே! நான் உன் பழைய நண்பன்; துரோணனென்னும் பெயரை யுடையவன்; இப்பொழுது ஒரு கறவைப் பசுவை விரும்பி உன்னிடம் வந்தேன்; நீ எனக்குச் செய்து கொடுத்த வாக்குதத்தத்தை நினைந்து, பசுவைக் கொடுத்தனுப்பு; வேறொன்றையும் உன்னிடத்திற் பெற விரும்பிலேன்'' என்று சொன்னான். துருபதனுக்குப் பசுவைக் கொடுக்கவும் மனம் வரவில்லை. அவன் அனைவருக்கும் எதிரில் துரோணனை அறியமாட்டே னென்றும், அவன் பேராசைக் கார னென்றும், அவமதித்துப் பரிகாசம் பண்ணினான். முன்னர் அவனுக்கு ஆராய்ந்து பாராமற் சொன்ன வாக்குதத்தத்தையும் கவனிக்கவில்லை.

உடனே துரோணன் கோபம் கொண்டு, "துஷ்டவரசனே! இத்தனை பெயருக்கும் நடுவில் நீ என்னைச் சபையில் அவமதித்ததற்குப் பதில் செய்யா திரேன்; என் வல்லமையைப் பார்'' என்று சபதம் செய்து, வெளியில் வந்துவிட்டான். அப்புறம், தன் சபதத்தை எப்படி நிறைவேற்ற முடியுமென்று துரோணனுக்கு ஆலோசனை உண்டாயிற்று.

அந்தக் காலத்தில் அத்தினபுரம் ஒன்றுதான் அரசிலும் அதிகாரத்திலும் சிறந்திருந்தது. குருகுல பிதாமகரான பீஷ்மர் தமக்கு ஒருவரும் நிகரில்லாமல் அந்தச் சபையில் இருந்து வந்தார். அவருக்குப் பெயரன்மார்கள் நூற்றைந்து பெயர் இருந்தார்கள். அனைவருக்கும் கிருபர் என்றவர் வில்லாசாரியர்.

உலகத்தில் பாஞ்சாலனைப்போலவே எல்லா வரசரும் அற்பரும் அயோக்கியருமாக விருப்பார்களா? பீஷ்மர் பெருந்தன்மையும் கல்வி யருமையும் அறிந்தவர். துரோணன் மனைவியோடும் குழந்தையோடும் அத்தினபுரம் அடைந்தான்.

துரோணன் சென்றது ஒரு மாலைப்பொழுது. கோட்டை மைதானத்தில் அரச குமாரர்கள் பந்து விளையாடிக் கொண் டிருந்தார்கள். அவர்களில் பீமன் அடித்த பந்து அருகிலிருந்த கிணற்றில் விழுந்துவிட்டது. எதிர்க்கக்ஷிக்காரர் 'நீ ஏறுமாருக அடித்தபடியினுல் பந்து கிணற்றில் விழுந்துபோயிற்று; நீதான் எடுத்துத் தரவேண்டும்;' என்ருர்கள். முதற்கக்ஷியைச் சேர்ந்த வர் 'பந்தடிப்பது எங்கள் முறை; தடுத்துக் கொள்வது உங்கள் முறை; உங்கள் அஜாக்கிரதையினுலேயே பந்து கிணற்றில் விழுந்துபோயிற்று ; நீங்கள்தாம் எடுத்துக்கொள்ளவேண்டும்' என்று சொல்லி மறுத்துவிட்டார்கள். அனைவரும் கிணற்றைச் சுற்றி நின்று, வாதம் செய்துகொண் டிருந்தார்களே யல்லாமல், எவரும் கிணற்றிலிறங்கிப் பந்தை எடுக்கவில்லை.

அந்தச் சமயத்தில்தான் துரோணன் அங்கு வந்து சேர்ந் தான். அவன் அரச குமாரர்கள் கிணற்றங்கரையில் கூடி யிருப்பதற்குக் காரணம் அறிந்துகொண்டு, அவர்களில் அர்ச்சுன னென்பவனுக்கு ஒரு மந்திரம் சொல்லி, 'நீ மந்திரத் தைச் சொல்லிக்கொண்டு இதோ கிடக்கின்ற குச்சிகளை ஒவ் வொன்ருக வெடுத்துக் கிணற்றில் எறி' யென்ருன். அர்ச்சு னன் அவ்வண்ணம் செய்ய, அந்தக் குச்சிகள் மந்திர மகிமையி னுல் பந்திற் பொத்துக்கொண்டு, ஒன்றின்மே லொன்ருகக் கரை வரையில் வளர்ந்து வந்தன. அப்புறம் அர்ச்சுனன் குச்சியைத் தூக்கிப் பந்தை எடுத்துக் கொண்டான். இளஞ் சிறுவர்க்கு அஃது ஆச்சரியமல்லவா!

அப்புறம் அர்ச்சுனன் அரண்மனையை அடைந்து, பிதா மகரான பீஷ்மரிடத்தில் அந்தணர் ஆற்றலை யறிவித்து, 'அவரைத் தங்களுக்குக் குருவாக நியமனம் செய்ய வேண்டு' மென்று கேட்டுக்கொண்டான். பீஷ்மர் "அர்ச்சுனா! அவர் துரோணராகவே யிருக்கவேண்டும்; அவரை யல்லாமல் மற்றொருவர்க்கு அவ்வளவு சாமர்த்தியம் அமைந்திராது; நானும் அவரைத் தான் உங்களுக்குக் குருவாக்க நினைத்திருந்தேன்; அவர் தாமாகவே வந்து சேர்ந்துவிட்டார்" என்று சொல்லி, மறுநாள் தூதர்களை யனுப்பித் துரோணனைச் சபைக்கு வருவித்து, அவன் கல்வியை அனைவரு மறியப் புகழ்ந்து கவுரவப் படுத்தினார்.

துரோணன் அதுதான் சமயமென்று பாஞ்சாலனுக்கும் தனக்கும் நேர்ந்த விஷயங்களைப் பீஷ்மரிடத்தில் தெரியப் படுத்திக் கொண்டான். பீஷ்மர் சந்தோஷித்துப், பெயரன்மார் நூற்றைவரையும். அவனிடம் ஒப்புவித்து, "ஐயா துரோணரே! தாங்கள் இன்று முதல் இவர்க்கு ஆசாரியராகித் தநுர் வேதத்தைக் கற்பித்து, இவர்களைக்கொண்டு தங்கள் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, அன்று முதல் துரோணனுக்கு அரசர்க்குரிய எல்லாச் செல்வங்களையும், சிறப்புக்களையும், அதிகமாய்க் கொடுத்து, அன்புடன் ஆதரித்து வந்தார். ஆதலால், பண்டிதர்களை மதித்துப் பெருமை பாராட்டுவதற்குப் பண்டிதர்தாம் தகுதியுள்ளவர்கள்.—மகாபாரதம்.

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்.

---

28. இராவணனும் அரக்கரும்

முற்காலத்தில் இலங்கைப் பட்டினத்தை மாலியவான், சுமாலி, மாலி யென்ற மூன்று அரக்க வரசர் பரிபாலித்து வந்தார்கள். மூவரும் துஷ்டர்கள். அவர்கள் உலகத்தை உபத்திரவப்;படுத்தி வந்தபடியினால்:ஸ்ரீமகா விஷ்ணு அம்மூவரையும் எதிர்த்து நின்று, சண்டையில் அபஜயப்படுத்தினர். அரக்கர் மூவரும் அவரது சக்ராயுதத்துக்குப் பயந்து, இறந்தவர்போக இருந்த படைவீரர்களோடு பாதாள வுலகம் புகுந்து ஒளிந்துகொண்டு விட்டார்கள். அப்புறம், அவர்கள் நகரத்தில் விசிரவசுவின் புத்திரனாகிய குபேரன் என்ற இயக்க வரசன் வந்து, குடியேறி வசித்து வந்தான்.

பிற்பாடு, அவ்வரக்கர்களது பெண்வயிற்றிற்பிறந்த ராவணனென்பவன் தன் சகோதரர்களோடு இமயச் சாரலில் நான்முகக் கடவுளை நினைந்து, நெடுங்காலம் வரையில் நிலையாக நின்று பெருந்தவம் செய்து, அவரால் அளிக்கப் பெற்ற அரிய வரங்களை யடைந்து, அசுரர்க்குச் சக்ரவர்த்தி யானான். ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்குப் பயந்து, பாதாளத்தில் ஒளிந்து உயிர் பிழைத்துவந்த மாலியவான், சுமாலி, மாலியென்ற அவன் பாட்டன்மார் மூவரும், மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களும் வெளியில் வந்து, ஆதியில் மகாவிஷ்ணு தங்களுக்குச் செய்த கொடுமையையும், அதன் பொருட்டுத் தாங்கள் இழந்துபோன இலங்கைப் பட்டினத்தின் பெருமையையும், இராவணனுக்குச் சொல்லிக், 'குழந்தாய்! நீ எப்படியாவது நம் குலத்துக்குக் கவுரவ முண்டுபண்ணி, அரக்கர்களைக் காப்பாற்றவேண்டும்' என்று போதனை செய்தார்கள்.

இராவணன் தானும் கொடியவனான படியினால் அவர்களைத் துஷ்டர், முருடர் என்று வெறுக்காமல், அவர்களுக்கு

'அப்படியே செய்கிறேன்' என்று வாக்குக் கொடுத்து, உடனே பெரும் படைகளோடு சென்று, இலங்கையை முற்றுகையிட்டுக் குபேரனை வென்று, அழகில் மிகுந்த அந்தப் பட்டினத்தைத் தனக்கு ராஜதானி யாக்கிக்கொண்டு, அசுர ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தான். அப்புறம், பாதாளத்தில் ஒளிந்துகிடந்த எல்லா வரக்கர்களும் நிர்ப்பயமாக நிலவுலகத்துக்கு வந்து, தன் னிராஜதானியான இலங்கைப் பட்டினத்தில் இருந்துகொண்டு, விரும்பிய சுகங்களை வேண்டுமளவும் அநுபவித்து வரலாம் என்று கட்டளை யிட்டும், தூதர்களை யனுப்பி அழைத்துவந்தும், அவர்களுக்குச் சவுக்கியங்களை யுண்டு பண்ணியும், கரவுரவப்படுத்தினன்.

இராவணன் இறந்து போகும்வரையில் அரக்கர்களைச் சிறிதும் கைவிட வில்லை. அவர்களோடு ஆலோசனை பண்ணுமல் ஒரு காரியத்தையும் செய்யவில்லை. அரக்கர் யாவரும் இராவணன் காலத்தில் சவுக்கியத்தையும், கவுரவத்தையும், பெருமையையும், அடைந்துவந்தார்கள். ஆதலால், துஷ்டர்களுக்குச் செல்வம் கிடைத்தால், அவர்கள் தங்களைப் போன்ற துஷ்டர்களுடன் நட்புக்கொண்டு தீத்தொழில்களைச் செய்து, நல்லவர்க்குக் கேடு சூழ்வார்கள். அதற்குச் சீதையைச் சிறையெடுத்ததும், விபீஷணனை அனுப்பிவிட்டதுமே, போதுமான சாக்ஷியாகும். —உத்தர ராமாயணம்.

..............................கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம்.

29. பூதனை மறைந்து வந்தது

ஆதிநாளில் வட மதுரைப் பட்டணத்தில் கம்ஸன் என்று ஒரு துஷ்ட வரசன் இருந்தான். அவன் சகோதரிக் குத் தேவகி யென்று பெயர். அவள் ஒழுக்கத்திலும் அழ கிலும் சிறந்த வுத்தமி. அவளை வசுதேவ ரென்றவருக்கு மணம் செய்திருந்தார்கள். கம்ஸன் சகோதரியினிடத் தில் விசுவாச முள்ளவன். அவன் ஒரு நாள் தேவகி யையும் வசுதேவரையும் தேரில் உட்காருவித்துத் தான் சாரதி யாகி, நகரத்துக்கு வெளில் இரதத்தைச் செலுத்திக்கொண்டு போனான். அப்பொழுது 'கம்ஸா! எந்தச் சகோதரியின்மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறாயோ அந்தச் சகோதரி யின் வயிற்றில் பிறக்கின்ற எட்டாவது புத்திரனால் நீ கொல்லப் பட்டுப் போவாய்' என்று, ஒரு அசரீரி யுண்டாயிற்று. கம்ஸன் உடனே தேரை நிறுத்தி, வாளை யுருவிக்கொண்டு வசுதேவரை நோக்கி, "அசரீரி சொல்லியவற்றைக் கேட்டீர்களல்லவா! என் உயிர்க்கு உறுதி செய்யும் பொட்டு என் சகோதரியை வெட்டி யெறிந்து விடுகிறேன்; சகோதரியே யில்லாமற் போனால், புத்தி ரன் பிறக்கமுடியா தன்றோ! என்னைப் பயமற்றவ னாக்கி, நீங்க ளும் வேறு கலியாணம் செய்து கொள்ளுங்கள்" என்று சொன்னான்.

வசுதேவர் "கம்ஸா! என் வார்த்தையைக் கேள்; பெண் கள் என்றும் கொல்லத்தக்கவ ரல்லர்; உன் அன்புள்ள சகோ தரி உனக்கு ஒரு விதமான குற்றமும் செய்யவில்லை; அவளைக் கொன்று, உலகம் உள்ளவரையில் அபக்கியாதியை அடைந்து வருந்தவேண்டாம்; மேன்மையை விரும்புகின்ற எந்த வரசன் தான் பெண்களைக் கொன்று பழியை வருவித்துக்கொள்ளு வான்; முதலில் வாளை உறையில் இடு; உன் சகோதரிக்குப்

பிறக்கும் குழந்தைகளை அப்பொழு தப்பொழுது கொணர்ந்து உன்னிடம் ஒப்புவிக்கிறேன்; நீ அவற்றை இஷ்டம் வந்தபடி செய்துகொள்'' என்று கூறினர். கம்ஸன் சற்று ஆலோசனை செய்து, "அங்ஙனமே யாகட்டும்; இருவரும் என் பார்வையில் இருந்து வாருங்கள்; நானும் கவனித்துக் கொள்கிறேன்'' என்று, அவர்களை அரண்மனைக்கு அழைத்துவந்து சேர்ந்தான்.

பின்னர்ப், படிப்படியாகத் தேவகியின் வயிற்றில் ஏழு குழந்தைகள் பிறந்தன. வசுதேவர் 'கடவுள் கட்டளையின் வண்ணம் காரியம் நடை பெறுகின்றது; நாம் ஒன்றுக்கும் வருந்திச் சிந்தனை செய்ய வேண்டாம்' என்று, பிறக்கும் குழந்தைகளை எடுத்துச்சென்று, கம்ஸனிடத்தில் கொடுத்துக் கொண்டு வந்தார். கம்ஸனும் அவற்றைச் சிறிதும் இரக்க மில்லாமல் வெட்டி யெறிந்து வந்தான். கடைசியில் எட்டாவது குழந்தை பிறந்தது. அப்பொழுது தேவர்கள் அந்தக் குழந்தையை ஆய்ப்பாடியில் இருந்த நந்தகோபன் என்ற யாதவ வரசன் வீட்டிலும், அவனுக்கு அசோதை யென்பவள் வயிற்றில் பிறந்த பெண்குழந்தையைத் தேவகியிடத்திலுமாக மாற்றி வைத்து விட்டார்கள். வசுதேவர் அந்தப் பெண் குழந்தையை அப்படியே யெடுத்துவந்து, கம்ஸன் கையிற் கொடுத்தார். அவன் வழக்கப்படி அதனை வெட்டுவதற்கு வாளை ஓங்கினன். அந்தப் பெண்குழந்தை தன் வடிவத்தைக் காளி தேவியாக மாற்றிக்கொண்டு, 'கம்ஸா! உன்னைக் கொல்லப் பிறந்தவன் ஆய்ப்பாடியில் வளர்ந்து வருகிறுன்' என்று சொல்லி, மறைந்து போயிற்று.

கம்ஸன் ஆய்ப்பாடியில் யாவர் வீட்டில் குழந்தை இருக்கின்ற தென்று ஆராயத்தொடங்கினன். நந்தகோபன் வீட்டில் பிறந்திருக்கின்ற குழந்தைதான் என்று அப்புறம் அவனுக்குத்

தெரிந்தது. அந்தக் குழந்தையை உபாயத்திற் கொன்று விடும்பொருட்டுச், சாகஸத்தில் கைவந்த பூதனை யென்ற ஒரு துஷ்டஸ்திரீயை அனுப்பினான். அவள் தன் மோசவெண்ணம் பிறர்க்குப் புலனாகாதபடி, பாதாதிகேச பரியந்தம் பொன்னாபரணங்களையும் இரத்தினாபரணங்களையும் பூண்டு, மெள்ளமெள்ள ஆய்ப்பாடியில் உள்ள அசோதையின் வீட்டை அடைந்தாள். அசோதை முதலியவர் பூதனையின் வேஷத்திலும், அவள் பேச்சின் கம்பீரத்திலும் மயங்கி, அவள் ஒரு உயர் குலத்தில் பிறந்த உத்தமியாக வேண்டுமென்று நினைத்து மரியாதை செய்தார்கள்.

பூதனை "அம்மா! என் தீவினையை என்னவென்று சொல்லுவேன்? என் அருமைக் குழந்தை இறந்து இன்றைக்கு இருபது நாட்கள் ஆகின்றன; அதுமுதல் உன்மத்தம் கொண்டவளைப்போல ஒன்றும் தோன்றாமல் வருந்தி வருகிறேன்; ஊணும் உறக்கமும் என்னை விட்டு ஒழிந்தன; இரண்டு நாட்களாக ஒரு கனவு வந்து என்னை விடாமல் வாதைப்படுத்துகின்றது; அதாவது :—'பெரிய சுமங்கலி யொருத்தி என் கண் முன்னர்த் தோன்றி, நீ முதலில் ஆய்ப்பாடியில் உள்ள அசோதையின் வீட்டை அடை: அவளுக்கு ஓரழகிய ஆண் குழந்தை பிறந்திருக்கின்றது; அதனை யெடுத்து ஆலிங்கனம் செய்து, உன் கவலை தீர்ந்து களி; உனக்கும் உடனே அது போன்ற குழந்தை யுண்டாகும்' என்பதுதான்" என்று சொல்லித், தான் கொண்டுவந்திருந்த குழந்தை யாடைகளையும் ஆபரணங்களையும், ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தாள்.

அசோதை பெண்களின் இயற்கைக் குணத்தினால் அவளிடம் குழந்தையைத் தந்தாள். அந்த நீலி குழந்தையைப்

பெற்றுக்கொண்டு, அதனைக் கொஞ்சியும் குலாவியும் பலவித மாக லாலனை செய்து, மார்பில் அணைத்துப் பால் கொடுக்கத் தொடங்கினள். மார்பில் கொடிய விஷங்களைத் தடவி வந்திருந்தபடியினால் குழந்தை சுவைத்ததும் இறந்துபோகு மென்பது அவள் கருத்து. ஆனல், காரியம் மாத்திரம் அப்படி நடக்கவில்லை. அந்தக் குழந்தை தனது தெய்வ சக்தியினல் பூதனை கொடுத்த பாலோடு அவள் உயிரையும் உரிஞ்சிப் பருகிவிட்டது. பூதனை 'ஐயோ! ஐயோ!' வென்று அலறிக் கொண்டு, நிலத்தில் விழுந்து உயிரிழந்துபோனள். அசோதை முதலானவர் அந்த ஆச்சரியத்தைக் கண்டு பயந்து போனர்கள். பூதனை தனது கொடுந் தொழிலை உயர்ந்த வேஷத்தினல் முழுவதும் மறைத்துவர வேண்டிய தாயிற்று. ஆதலால், கெட்டவர் தங்களையும், தங்கள் கொடுந் தொழில்களையும், எப்பொழுதும் மறைத்துக்கொண்டுதான் உலகத்தில் திரிந்து வருவார்கள். —பாகவதம்.

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு——நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

---

30. ஔவையின் பெருமை

தமிழ் நாட்டில் பிரசித்தி பெற்றிருந்த புலவர் பெருமாட்டியாகிய ஔவை யென்பவள் ஒரு தருணத்தில் நடுநாட்டிற் செல்லும்பொழுது, பெரு மழையில் நனைந்து, பெருங்கணவா யென்னும் கிராமத்தில் ஒதுக்கமா யிருந்த ஒரு வீட்டுக்குள் நுழைந்தாள். அவ்வீட்டில் பாரி வள்ளலின் பெண்கள் இருவரும் புலவர் கபிலரால் அந்தணரிடத்தில் அடைக்

கலம் வைக்கப்பட் டிருந்தார்கள். ஔவை அவர்களைக் கண்டு, "குழந்தைகளே! நான் முழுவதும் நனைந்து போய்விட்டேன்; என்னால் கிராமத்துக்குச் செல்ல முடியவில்லை; அதிகமாய்ப் பசிக்கின்றது; சிறிது உதவி செய்கின்றீர்களா?" என்று கேட்டாள்.

அந்தப் பெண்கள் ஔவைக்கு வேறு வஸ்திரம் கொடுத்துக் குளிரைப் போக்கித், தங்களுக்குச் சமைத்து வைத்திருந்த முளைக் கீரையையும் சோற்றையு மிட்டு, உபசரணை பண்ணினார்கள். ஔவை ஆவல் அடங்க வுண்டு, அவர்களை வாழ்த்தி விடை பெற்றுக்கொண்டு போனாள்.

பின்னர் ஔவை, பாரிவள்ளலின் பெருமையையும், அப்பெண்களின்பொருட்டுக் கபிலர் செய்த முயற்சியையும் உள்ளத்திற் கொண்டு, தம் பெருமை விளங்க, அந்தச் சிறுமிகளுக்குப் பேருதவி செய்யவேண்டு மென்று நினைந்து, நடு நாட்டின் ராஜதானியான திருக்கோவலூரை அடைந்து, அங்கிருந்த வேளிர் குலத்து மன்னவனாகிய தெய்வீகன் என்றவனைக் கண்டு, பாரி மகளிரை மணந்துகொள்ளும்படி வேண்டினாள். அவ்வரசன் அப்பெண்களை மணத்தலால் தமிழ் நாட்டு மூவேந்தருக்கும் தன்மீது பகை வளருமென் றஞ்சி, 'மூவரும் வந்து மணம் செய்து கொடுத்தால், அங்கீகரிக்கிறேன்' என்று, சொல்லி யனுப்பிவிட்டான்.

ஔவை 'அங்ஙனமே செய்விக்கிறேன்' என்று, விநாயகக் கடவுளை வணங்கி, அவரைக் கொண்டு, 'தெய்வீக மன்னவனுக்கும் பாரிமகளிர் இருவர்க்கும் திருக்கோவலூரில் திருமணம் நடக்கின்றது; நீங்கள் வந்து கலியாணத்தை நடத்திச் செல்ல வேண்டும்; சாக்குப் போக்குச் சொல்லி நின்றுவிடப் போகிறீர்கள்' என்று, கலியாணக் கடிதம் வரைவித்துக் கையொப்பம்

செய்து, சேரன் சோழன் பாண்டியன் என்ற மூன்று மன்னவர்க்கும் கொடுத்தனுப்பினள். அம்மூன்று மன்னவர்களும் தெய்வீகன் அதிருஷ்டத்தை நினைந்து, ஆச்சரியம் அடைந்தார்கள். ஏனென்றால், அந்தப் பெண்களை அவர்கள் மணந்துகொள்ளும்பொருட்டுப் பாரி வள்ளலிடம் செய்த பிரயத்தனங்கள் அவர்களுக்குத் தெரியும். கலியாணத்துக்குச் செல்லாவிட்டால், ஔவையின் கோபம் என்ன விளைக்குமோ வென்று பயந்து, மூவரும் முகூர்த்தத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஔவை தெய்வீகனைக் கொண்டு அவர்களை அழைத்துவரச் செய்து, மரியாதை பண்ணினள்.

அந்த மூன்று மன்னவர்களும் 'ஔவையின் ஆற்றலை அறிவோம்' என்று, 'புலவர் பெருமாட்டீ! இதோ நிலத்தில் விழுந்து கிடக்கின்ற பனந்துண்டமானது நிமிர்ந்து நின்று வளர்ந்து, எங்கள் மூவருக்கும் மும்மூன்று பழங்களைத் தாங்கள் தரப் பண்ணினல், கலியாணம் நடத்தச் சம்மதிக்கிறோம்' என்றார்கள். ஔவை தன் தெய்வவாக்கின் வல்லமையினல் அந்தப் பனந்துண்டத்தை நிமிர்ந்து நிற்கச்செய்து, மூவருக்கும் மும்மூன்று பழங்களைப் பழுத்துத் தரப் பண்ணினள். பின்னர்ப் பாரிமகளிருக்கும் தெய்வீக மன்னவனுக்கும் திருக்கோவலூரில் திருமணம் நடந்தது.

அம்மணத்தில் ஔவைப் பெருமாட்டி பொன்மழை பொழிவித்தும், பருத்திச் செடிகளில் வஸ்திரம் தருவித்தும், பெண்ணை யாற்றில் பால் நெய் தயிர்களைப் பெருக்குவித்தும், வயல்களில் அரிசி விளைவித்தும், வந்திருந்தவர்க்குத் தமது தெய்வ சக்தியைத் தெரியப் பண்ணினள். பாரிவள்ளலுடைய பெண்கள் இருவரும் ஔவையின் கருணையினல் தங்கள் குலத்துக்கும் கவுரவத்துக்கும் தக்க கணவனை அடைந்து, நெடுங்கா

லம் வரையில் சுகித்திருந்தார்கள். அவ்வளவு பெருமையும் ஔவைக்குக் கல்வியினுல் உண்டாயிற்றே யன்றி, வேறு செல்வம் செல்வாக்கு முதலியவற்ருற் சிறிதும் உண்டாக வில்லை. ஆதலால், அரசர்களின் சிறப்பைக் காட்டிலும் புலவர்களின் சிறப்பு பெருமை யுடையது. —புலவர்புராணம்.

மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்ருேற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

---

31. மைத்திரேயரும் துரியோதனனும்

முன்னர்ப் பாண்டவர் அஞ்ஞாதவாசத்தைக் கழித்து, உபப்பிலாவியத்தில் இருந்துகொண்டு, தங்கள் உரிமைகளைப் பெற்று வரும்படி கண்ணபிரானைத் துரியோதனனிடத்துக்குத் தூதனுப்பி யிருந்தார்கள். கண்ணபிரான் நடுவழியில் ஒரு வனத்தில் தங்கினுர். அங்குத் தவம் செய்து வந்த முனிவர்கள் அவருக்கு முகமன் கூறித், துரியோதனனுக்கு நற்புத்தி புகன்று வரும்படி மைத்திரேய முனிவரைக் கேட்டுக் கொண்டார்கள். அவரும் அங்ஙனமே சிஷ்யர்களுடன் அதிகாலையில் புறப்பட்டு அத்தினபுரம் வந்தார்.

அம்முனிவர் துரியோதனனைக் கண்டு க்ஷேமம் விசாரித்து, "நிருபர் தலைவனே! வனத்திலுள்ள முனிவர் வேண்டுதலின்மீது உனக்குச் சில அவசியமான நீதிகளைத் தெரிவிக்க வந்திருக்கிறேன்; அரசர்கள் கடவுளின் அம்சத்தில் அவதரித்தவர்கள்; அவர்களைச் சாதாரண மனிதருடன் சேர்த்து எண்ணலாகாது; நீதிப்பயிர் அவர்களாற்ருன் வளர்க்கப்பட வேண்டும்; அவர்கள் ஒழுக்கங்கள் உலகத்துக்கு மேல்வரிச் சட்டங்

கள்; அவர்கள் உலகத்துக்கு எடுத்துக்காட் டுவமைகளாக இருந்து வருகிறார்கள்; உலகத்தை உயர்ந்த வழியில் நடத்த விரும்பு கின்றவன் தன் னொழுக்கத்தை எப்பொழுதும் உயர்த் திக்கொள்ள வேண்டும்; இல்லையேல், அவன் உத்தேசம் நிறை வேறாது; சந்திர வம்ச பாரம்பரியமான சிங்காசனம் நல்வினைப் பயனால் உனக்குக் கிடைத்திருக்கின்றது; அது சாதாரணமாக எவருக்கும் கிடைக்கத் தக்கதன்று; அதனை யுடையவன் நேர் மையும் நிதானமுமாக நீதி செலுத்த வேண்டும்.

"பாண்டவர் உனக்கு ஒன்றுவிட்ட சகோதரர்; நல்லொ ழுக்க முள்ளவர்; பெருந்தன்மை மிக்கவர்; பராக்கிரமம் பொருந்தியவர்; சிவபெருமானுடன் மற்போர் புரிந்து பாசு பதம் பெறுவதற்குப் பார்த்தனை யல்லாமல் பிறர்க்குச் சாத் திய மாகுமா? சுவர்க்கலோக சிங்காசனத்தில் அமர்ந்து, இந்தி ரனுடன் ஒரு கலத்தில் அமுத முண்ணும் பாக்கியத்தை இவ்வுலகத்தில் வேறு எவன் பெற்றிருக்கிறான்? வேத புரு ஷனாகிய வேணு கோபாலனை மைத்துனனாய்க் கொள்ளும் மேன்மை பொருந்தியவன் யாவன்? எல்லா வரசர்களையும் பணியப்பண்ணி வேள்வியை முடித்துப் பட்டம் பெறு வதற்கு யுதிஷ்டிரரை யல்லாமல் வேறு எவர்க்குத் திறமை யுண்டாகும்? நீ ஆதிமுதல் அவர்களுக்குச் செய்த கொடுமை களை நினைவு கூர்ந்துகொள்; அவற்றில் ஒன்றுக்காவது அவர் கள் பதில் இழைத்திருக்கிறார்களா? பாபமும் பழியையும் அல்லாமல் நீ இதுவரையில் என்ன அடைந்திருக்கின் றனை? உலகத்தில் புகழையும் பெருமையையு மல்லாமல், பிறவொன்றும் நிலைத்திருப்ப தில்லை; நீ ஆதிநாளைய வுடன் படிக் கையின்படி அவர்கள் உரிமைகளை அவர்களுக்குக் கொடுத்துச் சுகித்து வாழ்; அஃது உனக்கு அறமும் கடமையு மாகும்;

இதோ பெரிய வாசனத்தில் வீற்றிருக்கின்ற பிதாமகாரான பீஷ்மரைப் பார்த்தாவது நீ பாண்டவர்க்குப் பாகம் கொடுக்க வேண்டாமா? அஃது இரண்டிடத்துக்கும் பெருமையை விளைக்கும்'' என்று கூறினர்.

துரியோதனனுக்கு அவர் உபதேசம் விஷத்திலும் கொடியதா யிருந்தது. அவன் கண்களில் நெருப்புப் பொரி பறக்கக், கோபச் சிரிப்புச் சிரித்து, "முனிவரே! தாங்கள் வைதிக மார்க்கத்தில் உள்ளவர்; நான் லௌகிக மார்க்கத்தில் உள்ளவன்; அதனிலும் அரசன்; அரசர்க்கு உபாயம் நான்கும் உரிமையானது; என்கடமை எனக்கு நன்றாகத் தெரியும்; ஒருகால் தவறிப்போனாலும், இங்கு எத்தனையோ பெயர் எடுத்துச் சொல்ல இருந்துவருகிறார்கள்; தாங்கள் இவ்வளவுதூரம் சிரமப்பட்டு வந்து, பாண்டவர் பொருட்டுப் பேசுவது பரிஹாஸிக்கத் தக்கது; தங்களுக்கும் ராஜ நீதிக்கும் நெடுந்தூரம் உண்டு; நான் தங்கள் உபதேசத்தை விரும்பவில்லை; சீக்கிரம் செலவு பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று அடக்கமில்லாமற் சொன்னான்.

மைத்திரேயர் சபையில் தம்மை மதியாமற் பேசின துரியோதனனை வெகுண்டு, "அடக்கமற்றவனே! உன் பெருக்கத்தை விரும்பிச் சொல்லவந்த என்னை அவமானப் படுத்தி விட்டாய்; நீ க்ஷேமப்பட மாட்டாய்; பீமன் கதையினால் உன் தொடை முரிந்து உயிர் பிரிந்து போகும்; அதுதான் உனக்குத் தண்டனை'' என்று சாபம் கொடுத்து, அவமானத்துடன் அப்பொழுதே வெளியில் வந்துவிட்டார். ஆதலால், அடக்கமுள்ள பெரியவர் சொல்லும் நீதிகளையும் அறங்களைகளையும், மூடர்களும் துஷ்டர்களும் விஷம்போல வெண்ணி, வெறுத்து வருவார்களே யன்றிச், சிறிதளவேனும் ஏற்றுக்

கொள்ள மாட்டார்கள். ஆனால், பெரியவர் அவர்களைச் சிக்ஷிக்கும் காலம் வருந்தனையும் பொறுத்திருந்து சமயம் நேர்ந்த பொழுது சாபம் கொடுத்துச் சிக்ஷை செய்துவிடுவார்கள்.

—மகாபாரதம்.

1 கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறம் கூற்றம்.

2 அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு.

---

32. மித்திரசர்மா மந்திரியானது

முன்னொரு காலத்தில் விஷ்ணுபுரமென்னும் அக்கிரகாரத்தில் மித்திரசர்மா வென்று ஒரு வேதியன் இருந்தான். அவன் அந்தணர் கலைகளை ஐயமில்லாமல் கற்றவன். ஆச்சிரம தருமத்தை அநுசரித்து நடப்பவன். இல்லற வொழுக்கத்தை இன்பமாய்ப் பூண்டவன். ஐம்பெரும் வேள்வியை அநுதினம் செய்பவன். பொருட் செல்வம் ஒன்று நீங்கலாக மற்றைய வெல்லாச் செல்வங்களையும் அவன் குறைவறப் பெற்றிருந்தான். அவன் இல்வாழ்க்கை தினமும் இரப்புத் தொழிலினால் நிறைவேறி வந்தது. தரித்திரம் அவனையும் அவன் கல்வியையும் அடுத்த வீட்டுக்காரருக்கும் தெரியவொட்டாதபடி அவ்வளவு அழுத்தமாக அடிமை கொண்டு அல்லற் படுத்திவந்தது. அக்கிரகாரத்தில் ஒருவரும் அவனுடன் நட்புக்கொள்வ தில்லை. 'அகங்காரி, முன் கோபக்காரன்' என்று சொல்லி, வெறுத்து வருவார்கள். புனையிற் பட்ட கனப் பொருள் யாவும் அற்பத் தன்மையை அடைவதுபோல மித்திரசர்மாவின் வாக்கிலிருந்து

வெளிப்படுகின்ற அற வுரைகளும் அநாதரவு பெற்றுப்போகும். இவையாவும் அவ்வந்தணனைப் பற்றியுள்ள வறுமையின் கூறு பாடு.

அந்த அக்கிரகாரத்துக்குச் சமீபத்தில் குஸுமபுரம் என்றொரு பட்டண முண்டு. அதில் ஆதித்திய வர்மா வென்ற அரசன் ஆளுகை செய்துவந்தான். மித்திரசர்மா ஒரு நாள் அக்னி காரியத்தை முடித்துக்கொண்டு குஸும புரத்துக்குச் சென்றான். வழி நடுவில் ஒரு பெரிய ஆலமர மொன்று நாற்புறமும் விழுதுகள் இறங்கித் தழைத்து வளர்ந்திருந்தது. அந்தணன் அந்த மரத்தின் கீழ்ச் சற்று வெயிலுக்கு ஒதுங்கினான். அப்பொழுது கண்கள் கூசும்படியான கட்டழகி யொருத்தி அவன் கண்முன்னர்த் தோன்றி, "அந்தணர் திலக! என்னை அதிருஷ்ட தேவதை யென்பார்கள்; தங்கள் நல்லொழுக்கத்தை நினைந்து, தங்களிடம் வசிக்க விருப்பம் கொண்டிருக்கிறேன்; என்னை அங்கீகரித்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னாள். மித்திரசர்மா "அன்னையே! தாங்கள் உலகத்தில் எவரையும் உத்தரவு கேட்டுக்கொண்டு வருவதில்லை; என்னிடத்தில் மாத்திரம் அதற்கு மாறுபாடாக நடந்து கொள்வானேன்? ஆயினும், என் விருப்பம் ஒன்றுண்டு; தாங்கள் இப்பொழுது 'வருகிறேன்' என்று சொல்லி, வந்ததுபோலவே, என்னை விட்டு நீங்கும் பொழுதும் சொல்லிச் செல்லவேண்டும்'' என்றான். அந்தத் தெய்வ நங்கை உடனே அதற்கு விடை உரைக்க வில்லை. சற்றுக் கழித்துச் 'சரி, உன் விருப்பமும் நிறைவேறட்டும்' என்று சொல்லி மறைந்து போய்விட்டாள்.

மித்திரசர்மா குஸுமபுரம் செல்கையில் அன்று அரசன் பிறந்த நாளென்றும், அவன் பண்டிதர்க்குச் சபையில் பரிசில் அளிக்கிறானென்றும் கேள்வியுற்றுத், தானும் அங்குப் போய்ச்

சேர்ந்தான். அந்தணன் சென்ற சமயத்தில் பண்டிதர்கள் ஒரு வர்க்கொருவர் சாஸ்திரவாதம் செய்துகொண் டிருந்தார்கள். மித்திரசர்மா தன் கல்வித் திறமையினுல் அவர்களைத் தலையெடுக்க வொட்டாமல் தாழ்த்தி, அனைவரினும் தானே மேலாய் விளங்கினுன்.

அரசன் அவன் கல்வியிற் களித்து, அப்படிப்பட்ட வுயர்ந்த பண்டிதன் எப்பொழுதும் தன்னருகில் இருக்கவேண்டு மென்று, அவனுக்கு மந்திரித் தொழில் அளித்தான். பிச்சையெடுக்க வந்தவிடத்தில் பெரிய நாட்டுக்கு மந்திரியானது மிகவும் ஆச்சரியமல்லவா! மித்திரசர்மா குடும்பத்தைத் தருவித்துக் கொண்டு, உயர்ந்த வரண்மனை யொன்றில் குடியேறிக் குறைவின்றி யிருந்தான். அதிருஷ்ட முள்ளவரையில் ஒருவருக்கும் பயந்து நடக்கவேண்டா மென்பது அந்தணன் அபிப்பிராயம். இன்னமும் அவ்வதிருஷ்டத்தைப் பரிக்ஷை செய்வதற்கும் அவனுக்கு ஆசை யிருந்தது.

ஒரு சமயத்தில் ஆதித்திய வர்மா சபையில் ஆடம்பரமாகக் கொலுக் கொண்டிருந்தான். குடிகள் யாவரும் திரண்டிருந்தார்கள். மெதுவாய் வந்த மித்திரசர்மா மன்னவன் பெருமையையும் மகா சபையையும் மனத்திற் கொள்ளாமல், நேரேலென்று சென்று, அரசன் சிரத்திலுள்ள ரத்தின கசிதமான கிரீடத்தைக் காலா லுதைத்துக் கீழே தள்ளினுன். சபையில் உள்ளவர் 'என்ன வநியாயம்! என்ன வநியாயம்!' என்று திகைத்துப், பயந்து போனுர்கள். மிகவும் எளிய ஓரேழைக் குடியானவன் கூட இந்த அவமானத்தைப் பொறுத்துக் கொள்ள மாட்டான். அரசன் கோபம் அளவில் அடங்கவில்லை. அவன் கண்கள் காலாக்னி ருத்திரன்போலக் கனற்பொரி பறந்தன.

0-1,LAAV,M:9 7021

அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா? எவரும் எதிர்பாராத வண்ணம் மிகவும் நீண்ட கிருஷ்ண சர்ப்ப மொன்று கிரீடத்திலிருந்து வெளியில் வந்து, படம் விரித்து ஆடத் தொடங்கிற்று. சபையி லுள்ளவர் ஆச்சரியத்தினுல் திகைத்துப் போனுர்கள். ஆதித்திய வர்மாவின் அளவு கடந்த கோபம் ஆநந்த மயமாக மாறிப் போயிற்று. அவன் தன் கிரீடத்தை உதைத்துத் தள்ளின மித்திர சர்மாவின் கால்களைப் பிடித்துக்கொண்டு, "அந்தணர் பெருமானே! தாங்கள் இன்று எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்து உதவி யிருக்கிறீர்கள்; சற்றுப் பராமுகமா யிருந்தால், அந்தக் கொடும் பாம்பு என்னைக் கடித்துக் கொன்றிருக்கு மல்லவா! தங்கள் உதவி மறக்கற்பாலதன்று'' என்று புகழ்ந்து, கனகாபிஷேகம் பண்ணினுன். அன்று முதல் அந்தணனுக்குச் செல்வாக்கு அதிக மாயிற்று. அந்தப்புரத்தின் எல்லாப் பாகங்களிலும் அவன் தடையின்றிச் சென்று வந்தான்.

அப்புறம் சில வருஷங்கள் சென்றன. அந்தணன் மற்ரெருமுறை தன் அதிருஷ்டத்தைப் பரீக்ஷிக்க உள்ளத்தெண்ணினுன். மழைக் காலத்தில் ஒரு நாள் இரவு அரசன் அந்தப்புரத்தில் பட்டமகிஷியுடன் படுத்துப், பேசிக் கொண்டிருந்தான். அப்பொழுது மித்திர சர்மா பரபரப்போடு அறையில் நுழைந்து, அரசனையும் அரசியையும் கையைப் பிடித்திழுத்து வெளியிற் கொண்டுவந்து விட்டான். அஃது எவரும் உட்செல்லக்கூடாத சமயம். அரசன் வெட்கமும் கோபமும் வளர, வெறிக்க வெறிக்க நோக்கி, மித்திரசர்மாவை வாளுக்கு இரையாக்க விரும்பினுன். அந்நிமிஷத்தில் அரசன் படுத்திருந்த அறை இடி விழுந்து, இருந்த விடமும் தெரியாமல் எரிந்து போய்விட்டது. அரசன் ஆச்சரியமுற்று அரசியுடன் அந்த

ணன் காலில் விழுந்து, 'இந்தத் தடவையிலும் என்னைக் காப்பாற்றி யிருக்கிறீர்கள்' என்று புகழ்ந்துகொண்டான். மறு நாள் சபையில் அரசன் மித்திரசர்மா அந்தப்புரத்துக்கு வந்து ஆபத்து நீக்கிய விதத்தை அனைவரும் அறியச் சொல்லி, முதல் மந்திரித் தொழிலையும் விருதுகளையும் அவனுக்கு கொடுத்துக் கவுரவப் படுத்தினான்.

மற்றொரு சமயத்தில் அரசன் ஆதித்தியவர்மா மித்திர சர்மாவுடன் காட்டில் வேட்டைக்குச் சென்றான். பதினைந்து நாழிகைவரையில் இருவரும் விலங்குகளைக் கொன்று, வேட்டையாடினார்கள். ஆதித்தியவர்மாவுக்கு அலுப்பு அதிகமாயிற்று. அவன் அந்தணன் துடையில் தலைவைத்துக் கொண்டு நிலத்திற் படுத்து நித்திரை போய்விட்டான். தன் சட்டைப்பையில் இருந்த எலுமிச்சம் பழங்களில் இரண்டொன்றை அறுத்துக் கொடுத்தாவது அரசன் களைப்பை அகற்றவேண்டும் என்று, அந்தணன் உறையில் இருந்த வாளை உருவினான். அத்தருணத்தில் அதிருஷ்டதேவதை 'அந்தண! உன்னை விட்டுச் செல்கிறேன்' என்று சொல்லி மறைந்தாள்.

அரசன் அதனைக் கேட்டுப் பயந்து, அலறிக்கொண்டு எழுந்திருந்தான். அதிருஷ்ட தேவதை 'விட்டுச் செல்கிறேன்' என்றது 'வெட்டிச் செல்கிறேன்' என்று அரசனுக்குக் கேட்டது. இன்னமும் அதிருஷ்டதேவதையின் குரலை அந்தணன் குரல் என்றும் அரசன் நினைத்துக்கொண்டு விட்டான்.

கால வித்தியாசத்தினால் அரசனுக்கு அப்பொழுதே அந்தணன்மீது துவேஷபுத்தி உண்டாயிற்று. தன்னை வெட்டி விடும்பொருட்டுத்தான் அந்தணன் வாளை யுருவினான் என்று, மித்திர சர்மாவை மந்திரி வேலையிலிருந்து நீக்கி, அவன் பொருள்களையும் அபகரித்துக்கொண்டு வெளியில் துரத்திவிட்

டான். அந்தணன் அது காலத்தின் கோலம் என்று நினைத்துப், பழைய ஏழை யந்தணனுக்கே ஒன்றும் சொல்லாமல் குடும்பத்தோடு தீர்த்த யாத்திரை சென்றான். ஆதலால், ஒருவனுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் உள்ளபொழுது அவன் செய்யும் தீயனவும் நல்லனவாகவும், அது மாறிவிட்ட பொழுது அவன் செய்யும் நல்லனவும் தீயனவாகவும், மாறிப்போகுமென்பது இதனால் வெளியாகின்றது. —பிருஹத்கதை.

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
வுருவும் உயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகும்; அவள் பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

மூதுரையும் கதைக்குறிப்பும்

முற்றுப்பெற்றன.

மூதுரை

மூலமும் அரும்பதவுரையும்

காப்பு

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காத—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

வாக்கு உண்டாம்-நல்ல வாக்கு உண்டாகும், மாமலராள்-லக்ஷ்மி, நுடங்காத-வாடாத, துப்பு-ஞானம், தும்பிக்கையான்-விநாயகக்கடவுள்.

நூல்

1. நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால். *1

தளராவளர்-தளராமல்வளர்கின்ற, தாள்உண்டநீரை-வேரினால் உட்கொண்டநீரை, தருதலால்-இளநீராக்கிக் கொடுத்தல் போல.

---

*வலப்பக்கத்திலுள்ள நம்பர்கள் கதையின் எண்களைக் குறிக்கும்.

2. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கல்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர். 1, 2

ஈரம்-கருணை, ஈந்த-செய்த, நேர்-ஒப்பாகும்.

3. இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னா வளவி லினியவும்—இன்னாத
நாளில்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு. 3

இன்னா-கெடுதிசெய்கின்ற, இளமை வறுமை-இளமையில் வறுமை, அளவில் இனியவும்-அளவுகடந்த நற்குணங்களும், இன்னா-கெட்டது, இன்னாத-கெட்டவைகளாம், நாளில்லா நாள்-தீயநாள், ஆளில்லாமங்கை-கைம்பெண், போலும்-ஒப்பாகும்.

4. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 4, 5

அட்டாலும்-காய்ச்சினாலும், அளவளாய் நட்டாலும்-மிகவும் விரும்பி நட்புக்கொண்டாலும்.

5. அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
யெடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா. 6

எடுத்த கருமங்கள்-எடுத்துக்கொண்ட காரியங்கள், ஆகா-ஆகமாட்டா, பருவத்தால் அன்றி-பருவகாலம் வந்தா லல்லாமல், பழா-பழுக்கமாட்டா.

6. உற்ற விடத்தி லுயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 7

உற்றவிடத்தில்-மானக்கேடு வந்தவிடத்தில், உயிர்வழங்கும் தன்மையோர்-உயிரை விட்டுவிடுகின்ற குணமுள்ளவர்கள், பற்றலர்-பகைவர், இறுதல்-ஒடிந்துபோதல்.

7. நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குளத்தளவே யாகும் குணம். 8, 9, 10

ஆம்பல்-அல்லி, நீரளவேயாகும்-நீரினளவே யிருக்கும், நுண்ணறிவு-சூக்ஷ்மபுத்தி.

8. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றேயாம்—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று. 11

நலம் மிக்க-நற்குணம் நிறைந்த, இணங்குதல்-சேருதல்.

9. தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதேயாம்—தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் தீது. 12

திருஅற்ற-அறிவில்லாத.

10. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை. 13

பொசியும்-கசிந்து ஊறும்.

11. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபே
ராற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
யேற்ற கருமம் செயல். 15

பண்டு-முன்னே, உமி விண்டுபோனால்-உமி நீங்கிவிட்டால், பேராற்றல்-பெரிய வல்லமை, அளவின்றி-அளவில்லாமல், ஏற்ற-ஏற்றுக்கொண்ட.

12. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். 14

மடல்-இதழ், மண்ணீர்-குளிக்கும்நீர், ஊறல்-ஊற்று.

13. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். 16

கவை-கிளை, காட்டகத்து-காட்டில், நீட்டு ஓலை-ஒருவன் படித்துச் சொல்லென்று நீட்டிக்கொடுத்த கடிதம், வாசியா-படிக்காமல்.

14. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகுவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 17

கானம்-காடு, பொல்லா-அழகற்ற.

15. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
யாங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம். 2

வரிப்புலி-கோடுகளையுடைய புலி, விடகாரி-விஷம்தீர்த்தவன், பாங்கு-நல்லொழுக்கம், புல்லறிவாளர்-அற்பர், கலம்-மண்கலம்.

16. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. 31

கடக்க-அவர்களை வெல்ல, கருதவும் வேண்டா-எண்ண வேண்டியதில்லை, உறுமீன்-தனக்கு இரையாகின்ற மீன்.

17. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியு மாம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு. 18

அற்ற-தண்ணீர் வற்றிப்போன, அறும்-விட்டு நீங்குகின்ற, உற்றுழி-ஆபத்து நேர்ந்தவிடத்தில், தீர்வார்-விட்டு நீங்குகின்றவர்கள், கொட்டி-ஒருவகை நீர்ப்பூண்டு, ஒட்டி-நீங்காமற் சேர்ந்து, உறவு-உறவினராவார்.

18. சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால். 4

சீரியர்-அறிவிற்சிறந்தவர், அல்லாதார்-அறிவில்லாதமூடர், சீரிய-அழகான.

19. ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலில்
நாழி முகவாது நானாழி—தோழீ
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன். 9

முகக்கினும்-மொண்டாலும், நானாழி-நான்குநாழி, நிதி-செல்வம், விதி-ஊழ்வினை.

20. உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு. 19, 20

மருந்து-மூலிகை, பிணி-நோய்.

21. இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். 21, 22

இல்லாள்-மனைவி, அகத்துஇருக்க-வீட்டில் இருக்கும்பொழுது, இல்லாளே யாமாயின்-இல்லாவிட்டால், வலிகிடந்த மாற்றம்-கொடுஞ் சொல், புலிகிடந்ததூறு-புலியிருக்கும் புதர்.

22. எழுதியவா றேகாண் இரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சார்ந்தார்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேன்
முற்பகுப்பிற் செய்த வினை. 23

காண்-முன்னிலையசை, இரங்கும்-வருந்துகின்ற, கருதியவாறு-எண்ணியவிதம், காஞ்சிரங்காய்-எட்டிக்காய், முற்பகுப்பில்-முன்பிறப்பில்.

23. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீர்கெழுமு சான்றோர் சினம். 24, 25, 26

கயவர்-மூடர், கடுஞ்சினம்-மிக்ககோபம், வடு-பிளவு, கெழுமு-வ்குகின்ற, சான்றோர்-பெரியவர்.